Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර්


ஜன. 21-27,2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 392



## யாழ் குடாநாட்டில் மாறி வரும் யுத்த களம்



## போதையின் பிடியில் பேதை

## கார்த்திக்கின் கவலை

## வாரம் ஒரு வார்த்தை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## உயர்ந்த சமாதானம்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இலங்கை இனப்பிரச்சனையின்
தீர்வுக்கான பேச்சுவார்த்தையில்
ஏற்பாட்டாளராகச் செயலாற்றும்
நோர்வே நாட்டின் விசேட தூதுவர்
எரிக் சொல்ஹெய்ம்
மீண்டும் இலங்கை வந்திருந்தார்.

சென்ற தடவை
அவரது விஜயம்
மிகவும் பரபரப்பானதாக
அமைந்திருந்தது.
அப்போது அவர்
முல்லைத்தீவு சென்று
புலிகளின் தலைவர் பிரபாகரனை
நேரில் சந்தித்திருந்தார்.

அந்தச் சந்திப்பில்
பேச்சுவார்த்தைக்காக
சர்வதேச சமூகம் தெரிவிக்கும்
இரு அடிப்படை விதிகளை
எடுத்துக் கூறியிருந்தார்.

அவையாவன:
ஐக்கிய இலங்கைக்குள்தான்
தீர்வு காணப்படவேண்டும்,
தமிழ் மக்களின் அபிலாஷைகள்
உச்ச மட்டத்தில்
ஈட்டப்படல் வேண்டும்
என்பதாகத் தெரிவித்திருந்தார்.

இச் சந்திப்பின் பின்னர்
புலிகள் பேச்சுவார்த்தைக்குத்
தயாராக உள்ளதாகவும்
அவர் அறிவித்தார்.

ஆனாலும்,
பேச்சுவார்த்தைக்கு
ஏற்ற சூழ்நிலையாக
யுத்த நிறுத்தத்தைப்
புலிகள் வலியுறுத்துகின்றனர்.
அத்தோடு நில்லாது,
தாமே முன்வந்து
ஒரு மாதகால-
ஒருதலைபட்ச
யுத்த நிறுத்தத்தை
அறிவித்துள்ளனர்.

இதேவேளை
யாழ் மக்களுடன்
கடந்த வாரம்
'சற்றலைற்' மூலம்
உரையாற்றிய ஜனாதிபதி,
யுத்த நிறுத்தத்தைவிட
உயர்ந்ததான
சமாதானத்தை ஏற்படுத்த
தாம் முன்வந்துள்ளதாகத்
தெரிவித்தார்.

அத்தோடு,
விடுதலைப் புலிகளின்
ஒருதலைபட்ச
யுத்த நிறுத்தத்தை
புதிய யுத்தத்துக்கான
போலி முயற்சியெனவும்,
அவர்கள்
பேச்சுவார்த்தைக்கு முன்வந்தால்
யுத்த நிறுத்தத்துக்குத் தாம்
முன்வர முடியுமென்றும்
தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்பேச்சுவார்த்தைக்கு
நடுவர்களாகச் செயலாற்றும்
நோர்வே தூதுவர்
எரிக் சொல்ஹெய்ம்
புலிகளின் ஒருதலைபட்ச
யுத்த நிறுத்தத்தை
வரவேற்றிருந்தார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார
அமைச்சர் பீற்றர் ஹெய்னும்
இவ்வறிவித்தலை
சாதகமாகப் பயன்படுத்தி
தீர்வுக்கான முன்னெடுப்பில்
இலங்கை இறங்கவேண்டுமென
கோரிக்கை விடுத்திருந்தார்.

இவற்றுக்கு மத்தியிலும்
இலங்கை அரசாங்கம்
யுத்த நிறுத்தத்தை
நிராகரித்து விட்டது.
இப்போது ஜனாதிபதி தெரிவித்த
அந்த 'உயர்ந்த சமாதானம்'
எப்படிக் கிடைக்கப் போகிறது
என்பது விந்தையானது.

ஏனெனில்,
சமாதானமென்பது
தீர்வு ஒன்றாலேயே
ஈட்டப்பட முடியும்.
தீர்வுக்கான வழிகள்
என்ன உள்ளது இங்கே?
பேச்சுவார்த்தை மூலமா?
யுத்தத்தின் மூலமா?
யுத்தமும் பேச்சுவார்த்தையும்
ஒன்றாக நிகழ்வதாலா
என்ற குழப்ப நிலைதான்
நிலவுகிறது இங்கே.

யுத்த நிறுத்தத்தின் பின்
பேச்சுவார்த்தையா?
பேச்சுவார்த்தையின்பின்
யுத்த நிறுத்தமா,
என்ற விவாதம்
இப்போது கிளம்பியுள்ளது.

புலிகள், யுத்த நிறுத்தத்தின் பின்
பேச்சுவார்த்தையென்றும்
அரசாங்கம, பேச்சுவார்த்தையின்
பின் யுத்த நிறுத்தமென்றும்
அடம் பிடிக்கின்றனர்.
பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தையென்று
இருதரப்பும் கூறிக்கொண்டாலும்
என்னத்தைப் பேசப்போகிறார்களென்று
எவரும் தெரிவிக்கவில்லை.
இந்நிலையை
திரும்பவும் வந்திருக்கும்
எரிக் சொல்ஹெய்ம் எவ்வாறு
வெற்றிகொள்ளப் போகிறாரென்று
பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*
*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்

## 'ஞானக்கண்ணைத் திறந்திருங்கள்'

எமக்கு இன்பம், துன்பம் ஏற்படும் போது எம்மை அறியாமலே நாம் 'சிவனே' என்று கூறிக் கொண்டு மேலே பார்க்கின்றோம். ஆகையால் ஆத்மாவின் வீடு மேல் உள்ள பரந்தாமம் என்பது உறுதியாகின்றது. நாம் அவ்வீடு செல்வதற்கு இப்பொழுது இறை நினைவு என்னும் பயணத்தில் இருத்தல் வேண்டும். எம்முன் தாய், தந்தையர் வரும்பொழுது ஞானக்கண் திறந்திருக்குமே யானால், இவ்விருவரும் ஆத்மாக்களே! இப்பிறவிக்கு தேக சம்பந்தத்தில் எனக்குத் தாயும் தந்தையுமாக இருக்கிறார்கள். ஆனால் ஆன்மீக சம்பந்தத்தில் பார்க்கும்பொழுது எனது தாய் தந்தை ஒரே ஒரு பரமபிதா, சிவனே ஆகும். அவரே எனக்கு சொர்க்கத்திற்கான ஆஸ்தியைத் தருகிறார் என்ற நினைவு வரும்.

நீங்கள் ஞானக்கண்ணைத் திறந்து வைப்பீர்களேயானால் உங்களுக்கு தர்மம் எது, அதர்மம் எது, இறைவன் என்பவர் யார்? மாயை என்பது என்ன, நன்மை எதில் உள்ளது, தீமை எதில் உள்ளது? என்ற அறிவு பிறக்கும்.

எனவே, ஞானக்கண்ணைத் திறந்து வைத்திருப்பதனால் அகநோக்கு உடையவராக இருக்க முடியும்.

*'ஓம் சாந்தி'*

பி.கு.விக்கி-கல்முனை.



## நேசிக்க வேண்டிய நன்னடத்தை

நீங்கள் உலக மக்களை நேசித்தால் அவர்கள் உலகின் பக்கமே உங்களை இழுப்பர். இறை நேசர்களை நேசித்தால் அவர்கள் உங்களை இறைவன் பக்கம் இழுப்பர். ஆதலால் நீங்கள் யாருடன் நேசம் கொள்ள வேண்டும் என்பதை உங்களில் ஒவ்வொருவரும் முடிவு கட்டிக்கொள்ள வேண்டும். தீங்கற்ற சுவையான உணவுகளை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள். மணமுடிக்க அழகிய பெண்களை தேர்ந்தெடுக்கிறீர்கள். அதுபோல் இறைவன் சமூகம் சேர்க்கும் நன்னடத்தையே நீங்கள் தேர்ந்தெடுங்கள்.

உங்களுக்கு இவ்வுலகில் நண்பர்கள் மூவரே உண்டு. முதலாவது உங்களது சொத்து. மரணம் வந்த உடனேயே அதை நீங்கள் இழந்து விடுவீர்கள். இரண்டாவது உங்களது குடும்பம். அது மண்ணறையோடு உங்களை கைவிட்டு விடும். மூன்றாவது உங்களது நடத்தை. அது எக்காலமும் பிரியாது உங்களை தொடர்ந்து கொண்டே இருக்கும். ஆதலால் உங்களைவிட்டுக் கணநேரங்கூட அகலாது மண்ணறையிலும் உங்களுடன் இருந்துவரும் நண்பனான நன்னடத்தையையே நீங்கள் நேசித்து வாருங்கள். (அறிவிப்பவர்- இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்)

*நன்றி:- 'அருள் அமுதம்'*

தொகுப்பு : வை.எம்.தாஹிர்கரீம்-கல்முனை 06.

## கிறிஸ்து உள்ளத்தில் நிரம்பட்டும்

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

**மத்தேயு 6:33**

தேவ பிள்ளையே, உன் இருதயம் கிறிஸ்துவின் பிரசன்னத்தினாலும், தேவவசனங்களினாலும், ஆவியானவராலும் நிரம்பி இருக்க வேண்டும் என்றால். முதலாவது நம்முடைய இதயத்தில் கிறிஸ்து நிரம்பியிருக்க வேண்டும். நாம் முழங்கால் படியிட்டு ஜெபிக்கும் போது எல்லாம் கர்த்தருடைய பிரசன்னம் நம்மேல் இறங்குகிறது.

ஒவ்வொரு நாளும் வேதம் வாசிக்கும் போதும், ஆராதனைகளில் கலந்து கொள்ளும் போதும் தேவ சமாதானம் நம் உள்ளத்தை நிரம்பி வழியச் செய்கிறது. அப்போது நம் வார்த்தைகள் கிறிஸ்துவின் வல்லமையால் நிரம்பியதாக இருக்கும்.

தி.தேவபாலன்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.392



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 27.01.2001

கவிதைப் போட்டி இல.392
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.389

### பரிசுக்குரிய கவிதை

### காலத்தின் சூழ்ச்சி

**குடைப்பிடித்துக் குஞ்சரம் ஊர்ந்து**
**நடைபயின்ற நாட்டினர்**
**தடை(கள்) தாண்ட முடியாமல்**
**கடைப்பட்டார்-வதைப்பட்டார்**
**காலத்தின் சூழ்ச்சியால்!**

நா.ஜெயபாலன்-பிபிலை.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### காத்திருப்பேன்

கார்காலம் என்றதும்
கடலுக்குள் சென்ற
கணவனை இன்னும்
காணவில்லை-அதனால்
கரையோரத்தில்
கடைசிவரை
கலங்காது
காத்திருப்பேன்!

வ.சுரேஷ்குமார்-வவுனியா.

### ஏக்கம்

அமைதியும் சமாதானமும்
உருவாக பிரார்த்தனையுடன்
இடியும் மழையும் ஏற்பட்டாலும்
காத்திருக்கின்றேன் குடையுடன்
புலரும் நூற்றாண்டை நோக்கி....

சி.அபிராமி-கல்கிசை.

### சந்தேகம்

மண்மூடை, மரங்கொண்டமைத்துக்
காவல் புரியும் நம்நாட்டிலா....
இப்படியொரு காவல்.....-
நிச்சயமாக இருக்காது, இது
எம் நாடாக....!

எஸ்.கே.ரமேஷ்-பெரிய போரதீவு.



### பார்(கா)த்திருப்பு

அடைமழையும் பெருங்காற்றும்
அள்ளிச் சென்ற உடமைகள்
மிதந்து வருமென்றோ இவர்
எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்!!!

லி.கிரிசாந்தி-மட்டக்களப்பு.

### என் உயிர்!

உருக்குலைந்த உடலைத் தேடி
பெருகிவரும் ஆற்றை நாட
இயற்கையும் கண்ணீர் சொரிந்து
இறைக்கிறது நீரைவாரி....
நடையிலே அடைக்கலம் நான்;
என் உயிரோ.....?
ஆழ் ஆற்றினிலே...
குடைபிடிப்பார் யார்?

கயல்வண்ணன்-வவுனியா.

### துக்கம்!

மடை திறந்த
வெள்ளத்தில்
விடைகொடுத்துக்
குடிசையே போனபின்
குடை எதற்கு?

சி.சசிதரன்-கொழும்பு-13.

### வருமா சமாதானம்?

தன்னந்தனியே
தள்ளாத வயதினிலே
தவமிருக்கின்றீரே!
சமாதானம் வருமென்று!
வராது தண்ணீரில்-அது
போகுமா எம் கண்ணீரில்

வெலிமடை எம்.ராமமூர்த்தி.

### கோமாளித்தனம்!

வெள்ளம் வந்த பின்
அணை போடும் இந்தநாட்டில்
மழை வருமுன்
குடைபிடிக்கும் கோமாளி!

அ.சந்தியாகோ-கண்டி.

### மனதின் மாற்றம்

வெள்ளப் பெருக்கு
படுகொலைகளாகும் மக்களின்
கண்ணீர்த்துளிகளின் பரப்பு
உன் குடை விரிப்பு
மனதின் பரிதவிப்போ...?

ஏ.ராசேந்திரன்-தலைமன்னார்.

### இயற்கையுமா?

போர் ஒரு புறம்,
புயல் வெள்ளம் மறுபுறம்,
இலங்கைத் தமிழனென்றால்
இயற்கையும் எதிரியாம்!

வை.சித்திகிருஷ்ணா-
பாண்டிருப்பு-01

### தொடர்கதை

நாளையும்
விடியல் வரும்
எமக்கு விடிவுவராது!
எப்போதும் சமாதானப்
பேச்சு வரும்
சமாதானம் வராது!

த.நகுலேஸ்வரன்-
மட்டக்களப்பு.

என் இனிய தமிழ் முரசே, ஐ லவ் யூ உனக்கு எனது வாழ்த்துக்கள்! முரேச, என்னையும் உன்னில் வாசகியாக சேர்த்தமைக்கு பலகோடி நன்றிகள்.

உன் சேவை மென்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்துகிறேன்! என்றும் உன்னவள்,

ஆரையம்பதி லதா-குவைட்.




# வாசக(ர்) சாலை

### தினமுரசாக....

என் இனிய முரசே, உன்னை அண்மைக் காலமாக படித்து சுவைக்கும் வாசகி நான். உன் சிறப்பை எழுத்து வடிவாக கருத்துகளை சமர்ப்பிக்க என் கைகள் பேனாவை நாடியது.... அதன் விளைவே இம்மடல்!

என் இனிய முரசே;

உன்னை முதன் முதலில் படிக்கும் போது நீ ஏன் வார முரசாக எம் கரங்களில் தவழ்கின்றாய்? உன் பெயருக்கு ஏற்றவாறு தினமும் மலரும் தினமுரசாக வரக்கூடாதோ என்று எண்ணத் தோன்றியது!

உன்னில் பிரசுரமாகும் அனைத்து ஆக்கங்களும் மிகவும் சிறப்பாக உள்ளன. சினிமாச் செய்திகள், கண்ணை கவரும் வண்ணப் படங்கள், கருத்துமிக்க.... கவி வரிகள், எந்தப் பக்கத்தை விமர்சிப்பது என்றே புரியவில்லை....

உன்னில் சிறப்பைப் போற்றுவதற்கு வார்த்தைகள் இல்லை.

எம்.சம்சுன் நிஹாரா-களுபோவிலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

### முரசுக்கு ஒரு முடி!

அட்டையிலேயே அசத்தி விடும் புதுமை; ஆகர்ஷிக்கும் இலக்கியம்; இதயம் தொடும் இனிமை; எடுப்பான தோற்றம் அதில் துடிப்பான இளமை, ஏற்றபடி விஷயங்கள் எடுத்துரைக்கும் தகைமை, முன்னேறும் போக்கில் கையாளும் தனிமை, முக்காலமும் உரைப்பதிலும் ஒரு புலமை, பத்திரிகை வட்டத்திலேயே வகிக்கும் நின் தலைமை; பல்வகை மலர் கமழும் பூங்காவின் செழுமை; தெளிவான விபரங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுமை; திக்கெட்டும் ரசிகர்களின் பாராட்டுப் பெருமை; இளமையிலும் முயற்சியினால் தேர்ச்சி பெற்ற முதுமை; ஏகமனதாய் எவரும் குறை கூறா; முழுமை, கண்டிக்க வேண்டியதைக் கண்டிக்கும் கடமை; தண்டிக்க வேண்டயதைப் பேனா முனையில் சந்திக்கும் வலிமை; இரசிகர்களின் அணுகுமுறை: இதமான ஆளுமை; இளைய தலைமுறைக்கு விசேட குளு குளு குளுமை; இத்தனைக்கும் காரணம் நீ கையாளும் திறமை. இத்திறமைகள் என்றென்றும் உன்னுடைய உடமை. உன் உடமைகள் அத்தனைக்கும் நீயேதான் உவமை! தினமுரசே உனக்கு- திருமுடி சூட்டிடலாம்!

ராஜ மாணிக்கம்-மட்டுநகர்.

### முத்தையா திருடினாரா?

டிசம்பர் 10.16,2000 வார தினமுரசு வாரமலரில் மேற்குறிப்பிட்டுள்ள தலையங்கத்தில் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பாடல்கள் திருடி எழுதப்பட்டவை என்று டாக்டர் சு.சண்முகசுந்தரம் என்பவர் எழுதி இருக்கிறார். இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமா? அவர் உயிருடன் இருந்தபோது எல்லாம் அமைதியாக இருந்து விட்டு, செத்த பிறகு குற்றம் சொல்வதுதான் தமிழனின் பண்பாடா? இதை எழுதியவர் வெட்கப்பட வேண்டும்.

அடுத்தவரின் பிழையைக் குறிக்கும் தமிழரா நீர்? ஏன் கவிதை எழுதக் கூடாது. ஒருவர் புகழ் அடைவது மற்றவனுக்குப் பொறுக்காது தான். அதற்குத் தான் தமிழனுக்கு இன்றும் இடமில்லாமல் போய் இருக்கிறது. எப்படிசரி அவர் திருடிசரி எழுதினாரே. அது கூடப் பெருமை தான். நீர் கூறும் புறத்தை விட அவர் நேரடியாக திருடி எழுதியதை ஒப்புக் கொண்டாரென்றால், நீர் திருடாமலேயே எழுத வேண்டியது தான். ஏனய்யா இந்தப் பொறாமை. விட்டு விடு இழிவு தனமையை.

தினமுரசு வாசகி-கண்டி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266


### எழுத்துப் பிழைகள்

அன்புடையீர்,

1998ம் ஆண்டு நடுப்பகுதியில், கனடா சென்றிருந்த சமயம் எனது தம்பியின் வீட்டில், தினமுரசு வாரமலரை முதன் முதலில் வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அன்று தொடக்கம் இன்று வரை வாரம் தவறாமல் வாசித்து வருகின்றேன்.

தினமுரசு வாரமலரில் இடம் பெறும் சகல விடயங்களும், சிறியோர் முதல் முதியோர் வரை கவரத்தக்க விதத்தில் அமுதப் படைப்பாக மலர்கிறது. சமீபத்திய வெளியீடுகளான மலர் 386,387 சில இடங்களில் அச்சுப்பிழைகள் காணப்பட்டன(எழுத்துப் பிழைகள்). எனவே, இக் குறையை நிவர்த்தி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், தினமுரசு வாரமலர் எந்த வகையிலும் தரம் குறையாமல் இருக்க வேண்டுமென்பதே! தமிழ் மகன் என்ற உரிமையில் நாடுகிறேன்.

இவை யாவற்றிற்கும் மேலாக மலர் 387ல் தாங்கள் படைத்த முரசம் என் மனதை வெகுவாகத் தொட்டது. ஏனெனில், இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமையை எந்தக் கண்ணோடு ஈழத்தமிழ் மக்களாகிய நாம் நோக்குகின்றேமோ, அந்தச் சிந்தனையை அப்பட்டமாக வெளியிட்டதின் மூலம், எமது அகக் கண்ணை நீங்கள் புரிந்து கொண்டுள்ளீர்கள். இத்தகைய வெளிப்பாட்டை சிங்கள மக்கள் மத்தியில் உணர வைக்க, தங்களால் முடியுமானால் நாம் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

தினமுரசு வாரமலர், வாரம் தோறும் மலர்ந்து மணம் வீசவும், அதை வாசிக்க அன்பர்கள் பெருகவும், என்னைப் போன்ற அபிமானிகள் ஆக்கமும், ஊக்கமும் தந்துதவ, உங்கள் வரவேற்பை எதிர்பார்க்கிறேன்.

உமா மகாலிங்கம்-இலண்டன்-எஸ்.ஈ 23 3XL.

# ஆனையிறவை நோக்கி படை நகர்வு ஆரம்பம்

## நவீன ஆயுதங்களுடன் 'கினிஹிர-09' நடவடிக்கை!

ஆனையிறவை நோக்கிய பாரிய படையெடுப்பு 'கினிஹிர-9' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெருந்தொகையான ஆயுதப்படையினரின் நெடுந்தூர ஆட்டிலறி மற்றும் பல்குழல் பீரங்கி ஆகியவற்றுடனும் யுத்த டாங்கிகள் சகிதமும் தென்மராட்சியின் எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் இருந்து இந்த இராணுவ நடவடிக்கை செவ்வாய் அதிகாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ள அவர்களது யுத்த நிறுத்த கால எல்லை முடிவுக்குள் (எதிர்வரும் 24க்கு முன்பதாக) யுத்தப் பிரதேசத்தில் ஒரு மேலாதிக்கத்தை பெறும் நடவடிக்கைக்கே இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக படைத்தரப்பு வட்டாரங்கள் மூலம் அறிய முடிகிறது.

கடந்த ஆண்டின் முதற் பகுதியில் ஆனையிறவு இராணுவத்தளம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டிருந்தது. இதனை மீட்டெடுக்கும் ஒரு முயற்சியாகவே தற்போது கினிஹிர-9 இராணுவ பாரிய நடவடிக்கைகளை ஆயுதப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் ஒரு சிவிலியன் கொல்லப்பட்டதாகவும் இராணுவத்தரப்பில் இழப்புகள் இல்லாவிட்டாலும், சிறிய சிறிய இழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

மற்றும் விமானப் படையினரும் தென்மராட்சிப் பகுதியை அண்டிய கடற்கரையோரப் பகுதியில் கடற் படையினரும் இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஒத்தாசை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை இலங்கை இனப் பிரச்சனை தொடர்பாக சமரச முயற்சியை மேற் கொண்டுவரும் நோக்கில் நோர்வே நாட் டின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் இம்மாதம் 20ம் திகதி சனிக்கிழமை மீளவும் அரச தரப்போடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்பு வருகிறார், என்று இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முரசின் 390வது இதழில் 3ம் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த தலைப்புச் செய்தியை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். 'தொடரும் போரினால் சுடுகாடாகும் யாழ் குடாநாடு' என்ற தலைப்பில் அச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. மோதலில் குதித்துள்ள இரு தரப்பினரும் ஏட்டிக்குப் போட்டியாக ஏவும் எறிகணைகளால் யாழ் தீபகற்பத்தில் பெரும்பாலான பகுதிகள் சுடுகாடாகி வருகின்றன.

ஊடகவியலாளர்களை அழைத்துச் சென்று படையினருக்கேற்பட்ட வெற்றிகளைக் காட்டுவதற்கான ஏற்பாடுகளை இராணுவம் செய்திருந்தது. அவர்கள் சென்ற இடங்களில் தாங்கள் கண்ட காட்சிகளை படம் பிடித்தும் செய்தி விமர்சனங்களாகவும் விவரித்திருந்தனர்.

செல்வச் சிறப்போடும் சீரோடும் விளங்கிய தென்மராட்சி உட்பட்ட ஏனைய பிரதேசங்களும் மயான பூமியாகக் காட்சியளித்ததாகவே அவர்களுடைய செய்திகளும் படங்களும் தெரிவிக்கின்றன. இப்பொழுது ஆனையிறவை நோக்கி படையெடுப்பு நடைபெறுவதால் புலிகளிடமிருந்து எதிர்த்தாக்குதல் இடம்பெறப் போவதில்லை என்பதனால் படையினரின் அபிலாசை நிச்சயமாக நிறைவேறலாம்.

புலிகளின் ஒருதலைப்பட்ச போர் நிறுத்தக் காலக்கெடு முடிவடைந்ததும் எத்தகைய நிலை உருவாகப் போகிறது என்பதையிட்டே இன்று யாழ்குடாநாட்டு மக்கள் மட்டுமல்ல, நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள அப்பாவிப் பொதுமக்கள் ஏக்கப் பெருமுச்சு விட்டுக் கொண்டிருக்கின்றனர். ■

## "பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் சாத்தியம்!"

## மகாநாயக்கரிடம் அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தல்!

கண்டியில் உள்ள மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரை, இலங்கையின் அமெரிக்கத் தூதுவர் திரு. அஸ்லி வில்லிஸ் கடந்த வாரம் மகாநாயக்கரின் வாசஸ்தலம் வந்து நீண்ட நேரம் உரையாடினார்.

இலங்கையில் இன்று நிலவும் கொடிய யுத்தத்தை நிறுத்த உதவுமாறும், இது தொடர்பாக சமாதானத்தை நிலைநாட்டி மீண்டும் சாந்தி நிலையை உருவாக்கி தமிழர்களும் பிரச்சனையின்றி வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க மகாநாயக்கர் உதவ முன்வரலாம் தானே என அமெரிக்கத் தூதுவர் மிக வினயமாகக் கேட்டுக் கொண்டார். இலங்கையில் நிலவும் இனப்பிரச்சனைக்கு முடிவு அமெரிக்க நாட்டில் இல்லை எனவும் இந்தப் பிரச்சனையை இலங்கை மட்டுமே தீர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் மகாநாயக்கரிடம் கேட்டுக் கொண்டார்.

மகாநாயக்கர் முன்னிலையில் செய்தியாளர்களும் கூடியிருந்தனர். இந்தப்பிரச்சனையை மனம் திறந்து பேச வேண்டியிருப்பதால், செய்தியாளர்கள் முன்னிலையில் பேசுவதற்கு தூதுவர் சிறிது கூசிய போதிலும், மகாநாயக்கர் செய்தியாளர்கள் இருக்கத்தான் வேண்டுமென்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து இருந்துவிட்டார்.

அங்கு மகாநாயக்கர் தூதுவரிடம் தெரிவிக்கையில், இந்த நாட்டில் சகல இன மக்களும் எவ்வித பேதமும் இன்றி தொடர்ந்து இணக்கமாகவும் புரிந்துணர்வுடனும் நல்லுறவுடனும் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள், எனக் கூறி இதேபோன்ற நிலையை நாம் மீண்டும் ஏற்படுத்த வேண்டுமென்றார். இதற்குரிய பரிகாரம் இப்பொழுது நடைபெறும் யுத்தத்தை யுத்தத்தின் மூலமாகவே தீர்க்க வேண்டுமெனவும் இலங்கையின் இனப் பிரச்சனைக்குக் காரணம் அரசியல்வாதிகளும் வெளிநாடுகளுமே என்ற கருத்தை வெளியிட்டார்.

யுத்தத்தை யுத்தத்தால் வெல்ல முடியாதென்றும் சமாதான பேச்சுவார்த்தையே இதற்குரிய வழிவகுக்கும் என தூதுவர் பகிரங்கமாக தனது கருத்தை வெளியிட்டார். இந்த பிரச்சனையை இந்த நாட்டுமக்களே தீர்த்துக் கொள்ள முற்படவேண்டுமென்ற உண்மையையும் அவர் அங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் சமாதானமும் அமைதியும் நிலவ தாம் என்றும் தயார் எனவும் மகாநாயக்கர் தூதுவரிடம் மேலும் தெரிவித்தார்.

## புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடமும்

## படையினரிடமும் சரணடைவு!

கடந்த வாரம் மட்டக்களப்பில் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் இருவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும், மற்றொருவர் படையினரிடமும் சரணடைந்துள்ளனர்.

மகேந்திரராஜா மகேஸ்வரன், மகாலிங்கம் மாணிக்கராஜ் ஆகிய இருவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் எஸ். சுரேஷ் என்பவர் நேரடியாக இராணுவத்தினரிடமும் சரணடைந்துள்ளனர்.

இதில் சுரேஷ் என்பவர் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என்றும் கடைசியாகத் தனக்குக் காவல் நின்றிருந்த புலிகள் உறுப்பினரைத் தாக்கிவிட்டு அவரது தன்னியக்கத் துப்பாக்கியையும் கைப்பற்றிக் கொண்டு படையினரிடம் வந்து சேர்ந்துள்ளார். இவர் அம்பாறை-சென்ரல் கேம்ப் பகுதியைச் சேர்ந்தவர். இவ்வாலிபர் செங்கலடி கறுப்புப் பால இராணுவ முகாமில் சரணடைந்தார். ■

## அம்பாறை எழுதுவினைஞர்

## பரீட்சார்த்திகள் போர்க்கொடி

(காரைதீவு நிருபர்)

"அநீதி இழைக்கப்பட்ட எமக்கு இம்மாத முடிவிற்குள் நியமனம் வழங்காவிடின் பெப்ரவரியில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடாத்த திட்டமிட்டுள்ளோம்." இவ்வாறு அம்பாறை மாவட்ட எழுதுவினைஞர் சேவை நியமனம் வழங்கப்படாது பாதிக்கப்பட்டோர் ஒன்றியம் அவசர ஒன்றுகூடலில் பேசிய ஒன்றியத் தலைவர் ஏ.எல்.எம். றியாஸ் சூளுரைத்தார்.

இவ்வொன்றுகூடல் கடந்த ஞாயிறன்று கல்முனை வை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் சபையோரால் எடுக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட எழுதுவினைஞர் பரீட்சார்த்திகள் சுமார் 50 பேர் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ■

## கனடாவில் பெண் பலி

கனடா ஸ்காபுறோவில் கடந்த 30ந் திகதி இரு குழந்தைகளின் தாயான சாந்தா சண்முகராஜா (39) கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கணவனான சிவக்கொழுந்து சண்முகராஜா இரவு வேலைக்குச் சென்றுவிட்டு காலையில் வீடு வந்து பார்த்தபொழுது-மனைவி கத்திக்குத்துக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடப்பது தெரியவந்தது! இவரது பிள்ளைகளான கோகுல் (12) கோஷிகா (8) ஆகியவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இக்கொலை தொடர்பாக இன்று வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

## மெய்வல்லுநர் கருத்தரங்கு

(காரைதீவு நிருபர்)

இலங்கை அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கருத்தரங்கும் பரீட்சையும் எதிர்வரும் 2001ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டினை இலங்கை மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத் தலைவர் பி.எச்.டி.வைத்தியதிலக மேற்கொண்டு வருகிறார்.

அம்பாறை மாவட்டத்தின் மெய்வல்லுனர் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 23.01.2001ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை இலங்கையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த மெய்வல்லூர் ஆரம்பிப்பாளர் என்.வைரவநாதன், உடற்கல்வி விரிவுரையாளர் த.ம.தேவேந்திரன், விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் எ.எஸ்.குணரெத்தினம் ஆகியோர் நடாத்தவுள்ளனர். ■

## காணாமற்போனோருக்கு

## நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

காணாமற் போய் கொல்லப்பட்டவர்கள் என அடையாளங் காணப்பட்டவர்களுக்கும் மற்றும் தென்மராட்சியில் அண்மையில் நடைபெற்ற யுத்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கும் நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வே.குகேந்திரன் (ஜெகன்) அவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் பேச்சு நடாத்தி இதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

இதனையடுத்து 1996ம் ஆண்டிற்குப் பின்னர் காணாமற் போய் செம்மணியில் தோண்டி எடுக்கப்பட்டு அடையாளங் காணப்பட்டவர்களது உறவினர்கள் மற்றும் கடந்த வருட நடுப்பகுதியில் ஆனையிறவு மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையில் கொல்லப்பட்டு மரணம் உறுதிப்படுத்தப்பட்டவர்களின் உறவினர்கள், உரிய நஷ்டஈட்டினைப் பெற்றுக் கொள்ள, 273, ஸ்ரான்லி வீதியிலுள்ள வடபகுதி அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழர் விவகார அமைச்சின் யாழ்ப்பாண கிளை அலுவலகத்தில் விபரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையில் கொல்லப்பட்டு மரணம் உறுதிப்படுத்தப்பட்ட ஏனையவர்களது குடும்பங்களுக்கும் கட்டம் கட்டமாக விரைவில் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கா.வே.குகேந்திரன் தெரிவித்துள்ளார். ■

## வயோதிபத் தம்பதியினர் மோதல்!

## பெண் மரணம்!

கடந்தவாரம் ரொரன்ரோ நகரில் வயோதிபர் இல்லத்தில் வசித்து வந்த வயதான தமிழ் கணவன்-மனைவிக்கு இடையில் நடைபெற்ற வாக்குவாதம் கொலையில் முடிவடைந்துள்ளது.

கணவனான பொன்னம்பலம் பேரம்பலம் (79) மனைவி அன்னலெட்சுமி பேரம்பலம் (73) இருவரும் ஆளை ஆள் மாறி மாறி கத்தியால் குத்தி இருக்கின்றனர் எனவும் கொல்லப்பட்ட மனைவியின் உடலில் 12 குத்துக்காயங்கள் காணப்பட்டன எனவும், இதன் காரணமாக ஏற்பட்ட இரத்தப் பெருக்கால் அவர் இறந்திருக்கிறார் எனவும், கணவனின் கழுத்திலும் உடலிலும் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன எனவும் அவர் ஆபத்தான கட்டத்தை தாண்டி விட்டதாகவும் வைத்தியசாலையிலுள்ள பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பொலிஸார் அயல் வீடுகளில் விசாரித்த போது, தினமும் அடிக்கடி இருவரும் வாய்த் தர்க்கத்தில் ஈடுபடுவதாகவும், பொருட்கள் வீசப்படும் சத்தம் கேட்பதாகவும் சம்பவதினம் பலத்த கூக்குரல் கேட்டதாகவும் தெரியவந்துள்ளது. உளவியல் ரீதியான தாக்கமே இக்கொலைக்குக் காரணம் என தெரியவருகிறது. ■

## கனடாவில் தொடர்ச்சியான கொலைகள்?

## இரு மாணவர்கள் பலி!

கனடா ஸ்காபுறோவில் கடந்த வருடம் டிசம்பர் 30ந் திகதி இரு மாணவர்கள் துப்பாக்கிக் கோஷ்டியினால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சூட்டுச்சம்பவத்தில் ரிஷிகேசன் செல்வராஜா (17) சுஜீவன் சிறீதரன் (18) ஆகியோரே கொல்லப்பட்டுள்ளனர். இரவு நேரம் தொடர்மாடிக் கட்டடத்தின் முன் காரில் இருந்த நேரமே இன்னொரு தமிழ் இளைஞர் கோஷ்டியினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இறந்தவர்களுக்கும் அந்த கோஷ்டிக்கும் தொடர்பு இல்லை என இறந்தவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மாறி மாறி வரும் பழிவாங்கல் நடவடிக்கையினால் உயிர்கள் பலியாகியும் பலர் காயமடைந்தும் வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. எவரும் சாட்சி சொல்ல முன்வராததினால்தான் இக்கொலைகள் தொடர்கின்றன எனவும், மிகவும் திட்டமிட்டும், பொலிஸாரின் கண்ணில் மண்ணைத்தூவியும் இக்கோஷ்டிகள் மோதிக்கொள்வதனால் இவர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவது கடினமாக உள்ளது எனவும் பொலிஸ் வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

## வெள்ளப் பாதிப்பை தவிர்க்க

## வடிகால் அமைக்க வேண்டுகோள்!

கிழக்கில் மார்கழிப் பருவமழை காலத்தில் வருடாவருடம் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குகின்றன.

அப்போது மக்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். சிறு தொகை உலருணவு வழங்குவதோடு வெள்ள நிவாரணப் பணிகள் முடிந்து விடுகின்றன. இப்படியே கிழக்கு மாகாண மக்களின் துன்பம் தொடர்கதையாகி விடுகிறது.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களில் பயிர்களும் வெள்ளத்தால் நாசமடைகின்றன.

அரசும், அரசியல்வாதிகளும்-மக்கள் வெள்ளத்தினால் அவதியுறும் துன்பநிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நிவாரணமாக சிறுதொகைப் பணத்தைக் கொடுத்து நிவாரணம் வழங்குவதை விடுத்து, கிழக்கின் கரையோரப் பகுதிகளான அக்கரைப்பற்று, கல்முனை, மட்டக்களப்பு, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, சித்தாண்டிப் பகுதிகளில் சீரான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி வெள்ளப் பாதிப்புக்கு நிரந்தரத் தீர்வு காணுமாறு மக்கள் கேட்கிறார்கள்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கவனமெடுக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. சீரான வடிகால் வசதிகள் இல்லாததாலேயே கிழக்கு மாகாணத்தில் நீர் தேங்கி நின்று வெள்ளப் பெருக்கு ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. ●

## "வீதித் தடைகள் அகற்றப்படும்"

## படை அதிகாரி அறிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ-பொலிஸ் நிலையங்களுக்கு முன்னாலுள்ள வீதிகளில் வாகனங்களுக்கான வேகத் தடைத் திட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் வாகனங்களுக்கும், அவற்றில் பயணம் செய்வோருக்கும் அதிக சிரமங்கள் ஏற்படுகின்றன.

"சமீப சில நாட்களுக்கு முன்பிருந்து பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களுக்கு முன்னாலிருந்த சில வீதித்தடைகள் அகற்றப்பட்டன. மீதியாகவுள்ள ஏனைய வீதித் தடைகளும் விரைவில் அகற்றப்படும்" இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலாளர்களின் கூட்டமொன்றின் போது இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் வி.ஆர்.எல்.அந்தனி தெரிவித்தார். ■

## குற்றப் புலனாய்வு பணியகம் கலைக்கப்பட்டுவிட்டது?

கடந்த முப்பது ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவந்த குற்றப் புலனாய்வுப் பணியகம் இப்போது கலைக்கப்பட்டுள்ளது.

புலனாய்வை மேற்கொண்டு குற்ற நடவடிக்கை பற்றிய திட்டங்களைத் துல்லியமாக அறிவதற்காக இப்பணியகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் சகல பாகங்களிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு, மற்றும் மலையகத் தமிழ்ப் பகுதிகளில் இப்பிரிவினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

பல தடவைகளில் இப்பணியகம் வெற்றிகரமாகச் செயற்பட்டிருக்கிறது என்று கூறும் அரசு, இப் பணியகத்தின் அதிகாரிகளின் செயற்பாட்டில் அதிருப்தி ஏற்பட்டதாலேயே இப்பணியகம் தற்போது கலைக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறது.

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- நாய்ச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984


## 3வது பிறந்த நாள் வாழ்த்து


**சத்தியா**
**27.01.2001**



சாவகச்சேரியைச் சேர்ந்த திரு.திருமதி சந்திரன் தம்பதிகளின் அருந்தவப்புதல்வி சத்தியா தனது மூன்றாவது பிறந்த நாளை பிறப்பிடமாகிய இத்தாலி ஜேனோவா நகரில் 27.01.2001 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா அம்மா, இத்தாலியில் இருக்கும் உற்றார் உறவினர்கள், சுவிசில் இருக்கும் உறவினர்கள், டோகாவில் இருக்கும் உற்றார் உறவினர்கள், இந்தியாவிலிருக்கும் உறவினர்கள், இலங்கையில் இருக்கும் உற்றார் உறவினர்கள் பாரீஸ் உறவினர்கள், லண்டன் உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் குழந்தை ஜேசுநாதர் ஆசியுடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : மகேந்தி, யசோ-நீர்கொழும்பு.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**தூயவன் 22.01.2001**

மட்டுவில் சாவகச்சேரியைச் சேர்ந்த தெய்வேந்திரராசா-புங்குடுதீவை சேர்ந்த தம்பதியினரின் செல்வப் புத்திரன் தூயவன் தனது முதலாவது பிறந்த தினத்தை 22.01.2001 திங்கட்கிழமை சுவிசில் இருக்கும் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடி மகிழ்கின்றார். தூயவன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, கிளிநொச்சியில் வசிக்கும் அப்பம்மா பெரியமாமா, பெரியமாமி குட்டி மாமா, குட்டிமாமி. ஆசை மாமி திருமலை. சின்ன மாமி சின்னமாமா சவுதி, பெரியப்பா (டோகா) சித்தப்பா (ஜெர்மனி), கொழும்பு 13ல் வசிக்கும் அம்மம்மா, ஆசை மாமா, சின்னம்மா, சித்தப்பா, புங்குடுதீவு பெரியப்பா, பெரியம்மா, மாமா (டமாம்). அண்ணன்மார். அக்காமார். மச்சான்மார். மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் இறைவன் ஆசியுடன், பல்கலையும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஆசை மாமா பாஸ்கரன்
கொழும்பு 13.

# விளம்பரப் பகுதி


சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்–விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்–

**Tarmu Trading**
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573

சுவிஸ். பேர்ண் மாநகரில் புதிய உதயம்.

**விதுஜா ஏசியன் சொப் வாக் ஹவுஸ்**
**காசே பசாஜ் .8-3011. பேர்ண். சுவிற்சர்லாந்து.**

மைக் டொனால்ட். மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் அமைந்திருக்கும் கட்டிட 1ம் மாடியில்.

எம்மிடம் இந்தியா, சிங்கப்பூர் தாய்லாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்குரிய கோட், சூட், குருத்தா, ரீசேட், சோட்ஸ், கவுண், பஞ்சாபி, வெல்வெட் பஞ்சாபி, பெண்களுக்கான பஞ்சாபி, சுரிதார், சோலி, வெல்வெட் பஞ்சாபி, மற்றும் புடவைகள், பனாரஸ், கோலம், அபூர்வா, காஞ்சிபுரம், மைசூர்சில்க், ரூபிகுயின், சமர்குல்ட், ஆண்களுக்கான ஜீன்ஸ், சேட், பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி, என பல்வேறுபட்ட தெரிவுகளை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்பட பிரதிகளையும் நாடகப்பிரதிகளையும் 2 str வாடகைக்கு பெற்றுக் கொள்ளவும். மற்றும் அனைத்து மளிகைச் சாமான்களையும் அன்பளிப்பு பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் எம்மை நாடுங்கள். தொலைபேசி அட்டைகள் யாவும் 26 str மட்டுமே. மற்றும் சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22 கரட். தங்கநகைகள் எங்கள் விற்பனையில்.

தொடர்புகளுக்கு ஆனந்தன் சுவிஸ் T.P 031 311 35 10 or 076 530 67 55 or 031 992 82 67.

## ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் ; 18.01.2001-23.01.2001
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.

## தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) ~ இரசாயனவியல்
Year - 9, 10, 11 ~ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
Year - 5 ~ ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்
**P.T.C** 14, Covington Road, Batticaloa.

## சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு எம்மால் உதவி

பதிவி இல கா/11/1437


தமது இல்லத்தில் இருந்தவாறே மொனிட்டர், சி. ஆர். கொப்பி, பப்படம், பீடி, ஊதுபத்தி களை தயாரித்து மாதம் 8000/- வருமானம் பெறலாம். 18 வயதிற்கு மேற்பட்ட எந்த பிர தேசத்தவரும் ஈடுபடலாம். கல்வித் தகைமைகள் எதிர்பார்க்கப்படமாட்டாது. பயிற்சிக்கான மூலப் பொருட்கள், ஆலோசனைகள் வீட்டிற்கே வந்து வழங்கப்படும்.

உங்கள் உற்பத்திகளை எமது நிறுவனத்திற்கு ஒப்படைக்கலாம். வாரத்தில் எந்தவொரு நாளிலும் சந்திக்கலாம். முகவரி எழுதப்பட்ட 9X4 உறையின் மூலம் விசாரிக்கவும்.

**Manager**
Krishan Lanka Company, In Front of the Post Office, Elpitiya.

## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
Tel-466620, 466820 தேவைகளுக்கு:-

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NI JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.


## சக்தி ரி.வி. பார்க்க எங்களுக்கும் ஆசை!

தங்கள் அதிரடிஅய்யாத்துரைப் பகுதியில், சக்தி ரி.வி. இரண்டாண்டு பூர்த்தியானதுக்குப் பாராட்டுகள் தெரிவித்திருந்தீர்கள்.

இலங்கையில் குறிப்பிட்ட இடங்களில்தான் சக்தி ரி.வி. ஒளிபரப்பாகிறது. ஏனைய இடங்களிலுள்ள மக்கள் இந்த ஒளிபரப்பைக் காண முடியாத துரதிஷ்டமே உள்ளது. மலைநாடுகளிலும் இரண்டொரு இடங்களில் மட்டுமே சக்தி ரி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிகிறது. பதுளை, பலாங்கொடை ஆகிய பகுதிகளில் நிகழ்ச்சிகள் தெரிவதேயில்லை. எவ்வளவு செலவழித்து முயற்சித்தாலும் முடியவில்லை. எனவே ஏனைய இடங்களிலும் சக்தி ரி.வி. நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் பார்ப்பதற்கு வசதியான ஏற்பாடுகளை சக்தி ரி.வி. நிறுவனத்தினர் செய்துதர வேண்டும் என்று முரசு மூலம் தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ச.இரா.பாலகிருஷ்ணசர்மா–
பலாங்கொடை.

## கல்முனைக்குடி வீதிகளின் சீர்கேடு...

கல்முனைக்குடி மஸ்ஜிதுல் றஹ்மானிய்யா அமைந்துள்ள மத்திய வீச் வீதி நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காட்சியளிக்கிறது. மழை காலங்களில் இவ் வீதி நீரோடை போல் தோன்றுகிறது.

இவ் வீதியின் மருங்கில் மஸ்ஜிதுல் றஹ்மானிய்யா தொழுகைக்கான பள்ளிவாசல் அமைந்துள்ளது. இப் பள்ளிவாசலுக்கு தினமும் ஐங்காலத் தொழுகையை நிறைவேற்ற வருவோர் இவ் வீதியில் ஆங்காங்கே காணப்படும் அசுத்த நீராலும் சேறாலும் சொல்லொன்னா துன்பங்களுக்குள்ளாகின்றனர்.

இன்னும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகளில் பெருந்தொகையானோர் இவ் வீதி வழியாகவே பாடசாலைக்குச் செல்வதால் இவர்களின் பாடசாலை சீருடைகள் இவ் வீதியில் தேங்கியுள்ள நீராலும் சேறாலும் பாதிப்புக்குள்ளாகின்றன.

மேலும் வாகன ஓட்டுநர்கள் இவ் வீதி வழியாக தமது வாகனங்களை வேகமாக ஓட்டிச் செல்வதால் இப்பாதையில் உள்ள பள்ளங்களில் நிறைந்துள்ள சேற்று நீரால் பாதசாரிகள் நனைக்கப்படுகின்றனர்.

எனவே இன்னோரன்ன இன்னல்களில் இருந்து விடுபட பலவருடங்களாக பாரா முகமாகவுள்ள கல்முனைக்குடி மஸ்ஜிதுல் றஹ்மானிய்யா மத்திய வீச் வீதி உடனடியாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

இதற்கான உத்தரவை கிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு கிராமிய வீடமைப்பு அமைச்சர் திருமதி.ஃபேரியல் அஷ்ரப் பிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

எம்.சி.கலீல்,
கல்முனை-05.


## லவ்ஜெட் கிறீம் 2000



இந்திரிய குறைபாடு, உடல் உறவில் ஏற்படும் மந்தகாரம் செயற்பாட்டிலிருந்து விடுவித்து குறைபாடான சக்தியை முன்பு போலவே மறுபடியும் பெற்றுத்தரும்.....

**உறவில் நீடித்த நேரம், நீடித்த மகிழ்ச்சி**

இனிய வேளை ஓர் புதிய நாள்

விநியோகிப்பவர்கள்:

யூனியன் கெமிஸ்ட், யூனியன் பிளேஸ். மெக்ஸ் பாமசி, கோட்டை. (புகையிரத நிலையத்திற்கு முன்பாக) அம்பிகா மெடிக்கல், நுவரெலியா, லீமெடிக்கல்/ரீஜன்ட் பாமசி, கண்டி. சிட்டி பாமசி, மலபார் விதி, கம்பொல. அருண மாத்தறை. லங்கா மெடிக்கல் இரத்தினபுரி. குருநாகல் மெடிக்கல், குருநாகல். விஜய நிட்டம்புவ. சுலலித கடவத்தை, சாலுகா ஆமர் வீதி, சமீர சாரங்க பாமசி மகரகம். R.No. 212573

## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடிமனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் ஜனவரி 20 முதல் 28 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கல்முனையில் பெப்ரவரி 03, 04 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் பெப்ரவரி 10, 11 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**

# யாழ் குடாநாட்டில் மாறி வரும் யுத்த களம்

**நரன்**

ஆனையிறவுத் தாக்குதல், இதுவரையிலான புலிகளின் இராணுவத் தாக்குதல்களில் ஒரு மைல் கல்லாக அமைந்திருந்தது.

அது ஈட்டிக்கொடுத்த வெற்றியும் உற்சாகமும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் தொடர் முன்னேற்றத்தை அவர்களுக்குக் கொடுத்தது.

அந்த வேகம் தொடர்ந்திருந்தால்....

எண்ணிப்பார்க்க இயலாத நிகழ்வுகளை இலங்கையின் சரித்திரம் சந்தித்திருக்கும்.

அதன் தார்ப்பரியம் இராணுவரீதியானதாக மட்டுமிருந்திருக்காது.

பெரும் அரசியல் தார்ப்பரியங்களையும் அது விளைவித்திருக்கும்.

அப்படியானால்....

இன்றிருக்கும் நிலைமை இருந்திருக்காது.

இன்றைய அரசாங்கம்கூட அமைந்திருப்பது வலுத்த சந்தேகத்துக்கிடமானதாக இருந்திருக்கும்.

யாழ் நகரைக் கைப்பற்றும் தாக்குதலானது புலிகளின் பிரதான தாக்குதல் திட்டமாக அமைந்திருக்கவில்லை.

அது ஆனையிறவுத் தாக்குதல் வெற்றியில் கிடைத்த ஒரு 'போனஸ்' பலனாகவே அவர்களுக்கு அமைந்திருந்தது.

அதனால் அத் தாக்குதலானது முழுமையான ஓர் இராணுவத் திட்டமிடலுடனும் தயாரிப்புடனும் நிகழ்த்தக் கூடியதாக அவர்களுக்கு அமைந்திருக்கவில்லை.

அதேவேளை ஆனையிறவுத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்புகளையும் சுதாகரித்துக் கொள்ளக்கூடிய கால இடைவெளியும் அவர்களுக்கு இருக்கவில்லை.

அவர்களுக்கு கிடைத்தது 'சந்தர்ப்பம்' என்ற ஒன்றுதான்!

அதாவது, ஆனையிறவுத் தாக்குதல் தோல்வியின் அதிர்ச்சிப் பேரிடியிலிருந்து இராணுவம் தன்னைச் சுதாகரித்துக் கொள்ள முன்னர் யாழ் நகரைக் கைப்பற்றி விடவேண்டும் என்ற நிலைமை.

அதனால் ஆனையிறவை வீழ்த்தியதுடன் தமது தாக்குதலை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் அதை யாழ். நகரைக் கைப்பற்றும் அடுத்த கட்டத்துக்கு உடனடியாக நகர்த்தலாயினர்.

இதற்கான பலன் அவர்களுக்கு கிடைக்கவே செய்தது.

புலிகளின் பலம் பற்றியும் அவர்களின் அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்கும் என்பது பற்றியும் தீர்க்கமான மதிப்பீடெதையும் செய்ய இயலாத நிலையில் இராணுவத்தினர் குழப்பத்துக்குள்ளாகி நின்றனர்.

ஆனையிறவிலிருந்து பின்வாங்கித் தப்பிவந்த இராணுவ வீரர்கள் பரப்பிய அச்ச உணர்வுகள் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த இராணுவ வீரர்களிடையேயும் நம்பிக்கையின்மையையும் பின்வாங்கும் மனோபாவத்தையும் விதைத்தன.

இராணுவத்திடம் அப்போது இல்லாதிருந்த பல்குழல் எறிகணைகள் போன்ற நவீன வினைத்திறன் மிக்க ஆயுதங்களைப் புலிகள் பாவித்திருந்தமையும் அத் தாக்குதல்களின் அகோரத் தன்மையை அனுபவித்த கிலியும் புலிகளின் தாக்குதற் பலம் தம்மையும் விஞ்சியது என்ற தோற்றப்பாட்டை சாதாரண இராணுவ வீரர்களுக்கு மத்தியில் விளைவித்திருந்தது.

அதனால் பலாலி இராணுவப் பெருந்தளத்தைத் தம்மால் காப்பாற்ற முடியுமா என்ற ஐயம் அவர்களுக்குள் விளைந்திருந்தது.

புலிகளின் நெடுந்தூர ஆட்டிலெறி சுடு கலன்களின் வீச்சு பலாலி விமானத் தளத்தை எட்டக்கூடும் என்ற அச்சமும் நிலவியது.

அவ்வாறு அவ் விமானத்தளம் அவர்களின் ஆட்டிலெறித் தாக்குதல் வீச்சுக்குள் விழுந்தால் இராணுவத்துக்கான வினியோகமும், விமானப் போக்குவரத்தும், யுத்த விமானங்களின் நடமாட்டமும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் என்பது அவர்களைக் கலங்க வைத்தது.

அத்தோடு கப்பல் போக்குவரத்தும் தடைப்படலாம் என்பதுவும் மறுபுறம் ஒரு கேள்வியாக விளைந்திருந்தது.

இத்தகைய பாதகமான நிலைமைகளுக்கு மத்தியில் இராணுவத்தின் போர்த்திறன் வலுவாக வீழ்ச்சிகண்டிருந்தது.

இதனால் விளைந்திருந்த ஆபத்து மிகப் பயங்கரமானது.

இச் சமரில் புலிகள் ஜெயித்தால் யாழ் நகரில் நின்றிருந்த சுமார் முப்பதினாயிரம் படைவீரர்களது கதி என்னாகும் என்ற பயங்கரம் தோன்றியிருந்தது.

ஏனென்னில், அங்கிருந்து ஆனையிறவைப்போல் பின்வாங்கி ஓட முடியாது.

அவ்வாறு பின்வாங்குவது என்பதுகூட ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைதான்.

ஏனெனில் முப்பதினாயிரம் படைவீரர்களையும் ஒரேயடியாக கொழும்புக்கு கப்பல்களில் ஏற்றிச் சென்றுவிட முடியாது.

படிப்படியாகத்தான் அனுப்ப முடியும்.

அவ்வாறு கப்பல்களில் ஏறிப் பின்வாங்கும்போது, அந்தக் கப்பல்கள்கூட கடலில் வைத்து தாக்கப்படலாம் என்ற ஆபத்து இருந்தது.

அதைவிட ஆபத்தான விடயம் வேறொன்றிருந்தது.

ஒரு தொகுதியினர் பின்வாங்கிவிட்ட நிலையில் வலுக் குறைந்திருக்கும் மீதி இராணுவத்தினரை புலிகள் சுற்றிவளைத்துப் பிடித்துவிடலாம் என்பதே அது.

அவ்வாறு ஒரு பெருந்தொகையான இராணுவத்தினர் புலிகளால் சிறைப் பிடிக்கப்பட்டால், அவர்களே புலிகளுக்கான ஒரு பெரும் பேரம்பேசும் பொருளாகி விடுவர்.

யாழ்ப்பாணத்தை இழந்தது மட்டுமல்ல, புலிகளின் கைகளில் சிக்கிவிட்ட தமது இராணுவத்தினரின் கதிபற்றிப் பதில் சொல்ல வேண்டிய பெரும் அரசியல் நெருக்கடிக்கு அரசாங்கம் உள்ளாகி நிற்கும்.

அந்த இராணுவ வீரர்களுக்காக புலிகள் என்ன கேட்கிறார்களோ அவற்றைச் செய்து கொடுக்க வேண்டிய நிர்க்கதிக்கு அரசாங்கம் உள்ளாகிவிடும்.

இத்தகைய ஒரு பேராபத்தை உணர்ந்து கொண்டதாலேயே அரசாங்கம் புலிகளின் யாழ். நகர்த் தாக்குதலையடுத்து முன்னதாகவே பின்வாங்கிவிடுவது உசிதமாவென ஆராயவும் முற்பட்டது.

இப் பின்வாங்கலுக்கான இந்திய அனுசரணையையும் கோரியது.

இத்தகைய அனுசரணைக்கு இந்தியா முன்வருவதாக இருந்தாலும் கூட, அதற்கும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கத்துக்கு வரவேண்டிய நிலை இருந்தது.

அதாவது இந்தியக் கப்பல்களைத் தாக்கக் கூடாது, பின்வாங்கும் துருப்பினரின் கடைசி அணிகளைச் சிறைப் பிடிக்கக் கூடாது என்ற இணக்கத்துக்கு புலிகளைச் சம்மதிக்க வைக்க வேண்டியிருந்தது.

இதில், எந்தவொரு இந்தியப் படைவீரரும் தரையில் கால் வைக்காமல் கடலிலிருந்தபடியே இலங்கை இராணுவத்தினரை ஏற்றிச் சென்றுவிட வேண்டும் என்பதே புலிகளின் நிலையாக இருந்தது.

இத்தகைய விடயங்கள் வரை நிலைமை மோசமாகியிருந்த அச் சூழ்நிலையின் பயங்கரத்தை இன்று ஆளும் தரப்பினர் யாரும் திரும்ப எண்ணிப் பார்ப்பார்களா என்பது சந்தேகமே.

அன்று புலிகளின் கைகளில் யாழ். நகர் வீழ்ந்திருந்தால், பெருந்தொகையான படையினர் புலிகளிடம் சிறைப்பட நேர்ந்திருந்தால், அல்லது இந்தியக் கடற்படையின் உதவியுடனாவது பின்வாங்கி வந்து கொழும்பில் தரையிறங்கி தமக்கு நேர்ந்த கதியை சிங்கள மக்களிடம் கதை கதையாகப் பரப்பியிருந்தால்......?

மீண்டும் ஓர் இனக்கலவரம்கூட மூண்டிருக்கலாம்.

அப்போது அதைத் தடுக்கக்கூடிய மனநிலை படையினருக்கும் இல்லாதிருந்திருக்கும்.

இத் தோல்வியின் ஆவேசம் இந்த அரசாங்கத்தைக்கூட தேர்தலில் தூக்கி எறிந்திருக்கும்.

அப்படியானால், ஜனாதிபதி ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும் ஆளும் கட்சி மற்றொன்றாகவும்-அதாவது ஐக்கிய தேசியக் கட்சியாகவும் மாறியிருக்கும்.

அதேவேளை இராணுவம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலிருக்கும்.

ஆனால், அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றும் முடிவும், அதற்கான பட்ஜெட்டுகளை நிறைவேற்றும் முடிவும் அரசாங்கத்தின் ஆளும் கட்சியின் கைகளில் இருக்கும்.

இத்தகைய குழப்ப நிலையில் அரசாங்கம் என்ன செய்வதென்றறியாது திகைத்து நிற்கையில், யாழ்.குடாநாடு முதல் வன்னியின் கீழ்பாகம்வரை தங்குதடையற்ற பரந்த நிலப்பரப்பையும் பெருமளவிலான தமிழ் மக்களையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்திருக்கும்.

புலிகளை முகம் கொடுப்பது எவ்வாறு என்பது கேள்வியாகிவிட்ட நிலையில்,.....

அடுத்து என்ன நிகழும் என்பதற்குப் பலவிதமான ஊகங்கள் கிளம்பியிருக்கும்.

ஆனால்,

இத்தகைய விபரீதம் இலங்கை அரசாங்கத்துக்கு நேராதபடி அரும்பொட்டில் நிலைமை மாற்றப்பட்டுவிட்டது.

அந்த மாற்றத்துக்கு, இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இவ் வாபத்து வேளையில் ஜனாதிபதி விடுத்த அபயக் குரலுக்கு பல உலக நாடுகள் உடனடியாக செவிசாய்த்து உதவ வந்ததுதான் காரணமாயினும்,

உண்மையில் இந்தியாவின் நிலைப்பாடு பெருமளவு வெளித்தெரியாத ஒரு மறைமுகக் காரணமாக இருந்தது.

அரசியல் அவதானிகளுக்கோ, பொதுமக்களுக்கோ இதை உணர முடியாவிட்டாலும் விடுதலைப் புலிகளுக்கு இதனை ஊகித்துக்கொள்ளக் கூடிய உள்ளுணர்வு இருந்தது.

அதாவது யாழ்ப்பாணத்தை தாம் வலுக்கட்டாயமாகக் கைப்பற்ற நேர்ந்தால் ஏதோ ஒரு காரணத்துடனும் ஏதோ ஒரு வடிவிலும் இந்தியா அதனை இடைமறிக்கும் என்பது அதற்கு உணரக் கூடியதாக இருந்தது.

அதனால் மீண்டும் இந்தியாவின் நேரடித் தலையீடொன்றுக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்காதிருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையும் புலிகளிடத்தே இருந்தது.

அதனால் புலிகள் யாழ். நகரைக் கைப்பற்றும் தாக்குதலில் சற்று நிதானத்தைக் காட்டினர்.

இந்த இடைவெளிக்குள் இலங்கை அரசாங்கம் இஸ்ரேல், பாகிஸ்தான், ரஷ்யா, சீனா போன்ற ஏனைய நாடுகளின் அதி நவீன ஆயுதங்களையும், யுத்த விமானங்களையும், போர்க் கப்பல்களையும், இதர இராணுவத் தளபாடங்களையும் பெற்று யாழ்ப்பாணத்தை உறுதிப்படுத்திக் கொண்டது.

இப்படிப் பல்வேறு நாடுகளும் தமக்கு உதவத் தயாராக இருப்பதும், இந்தியா ஏதோ ஒரு வகையில் புலிகளால் தமக்கு ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையும், சூட்டோடு சூடாக வந்திறங்கிய ஆயுதங்களும், புலிகளின் முன்னேற்றம் சற்று நிதானமடைந்தமையும் மீண்டும் இராணுவ வீரர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி தம்மைத் தற்காத்துக் கொள்ள முடியுமென்ற மனத்தெம்பை உருவாக்கியது.

அத்தோடு இப் பல்குழல் எறிகணைகளும் ஒலியை விஞ்சிய வேகங்கொண்ட இஸ்ரேலிய யுத்த விமானங்களும் புலிகள் எதிர் கொள்ள வேண்டிய புதிய சக்தியாக விளங்கியதால் புலிகளால் தொடர்ந்தும் ஒரேயடியாக முன்னேற முடியவில்லை.

எனவே அவர்கள் யாழ் நகர் பகுதியைச் சுற்றி வளைப்பதும் ஊடுருவுவதும் என்ற அளவோடு தமது செயற்பாட்டை வடிவமைத்துக் கொண்டார்கள்.

அதனால் புலிகள் குடாநாட்டில், கைப்பற்றிய பிரதேசம், சுற்றி வளைப்புப் பிரதேசம் ஊடுருவல் பிரதேசம் ஆகிய மூன்று வலயங்களைக் கொண்டிருந்தார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் வன்னியிலிருந்து யாழ் நகரைச் சுற்றி வளைத்துள்ள பிரதேசம்வரை தங்கு தடையற்றவாறு விஸ்தரித்திருந்தது.

அதனால் அவர்கள் இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு ஈடுகொடுத்தபடி, முன்னேறியும் பின்னேறியும் தமது நிலையைப் பேணியபடி இருந்தார்கள்.

இப்படி புலிகளால் தொடர்ந்து சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் இருப்பது எந்நேரத்திலும் ஆபத்தானதாக மாறலாம் என்ற எச்சரிக்கை இராணுவத்துக்கு இருந்தது.

எனவே இராணுவம் இடைக்கிடை புலிகளை தமது எல்லையோரங்களிலிருந்து விரட்டி, விரட்டிவிட்டுத் திரும்பும் ஒரு தற்காப்புக்கான தாக்குதல்களை செய்துகொண்டு, மெதுவாக, முன்னேறும் தாக்குதற் தொடரொன்றை வகுப்பதற்காகத் தன்னைப் பலப்படுத்தி வந்தது.

அதற்கு அது சில காலம் பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

தேவையான அளவு துருப்பினரைத் தருவித்து தனது இராணுவ அணிகளை மீள ஒழுங்குபடுத்தி, ஒரு படையெடுப்புக்குப் போதுமான ஆயுதத் தளபாடங்களை ஏற்பாடு செய்து கொண்டு தம்மை மீளச் சுதாகரித்துக்கொண்டு இத் தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்க முனைந்தனர்.

ஆரம்பத்தில் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகளுடன் தன்னை நேரடியாக இனங்காட்டாது நிதியுதவி போன்ற மறைமுக உதவிகளை வழங்கி, அவ் உதவியானது வெறும் மனிதாபிமான உதவியெனவும், அவை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படமாட்டாதெனவும் சப்பைக் காரணம் கூறிய இந்தியா, பின்னர் குளிர் நீங்கி படிப்படியாக நேரடியாகவே இராணுவ ரீதியான உதவிகளை வழங்க ஆரம்பித்து விட்டது.

சென்ற நவம்பர்மாத முதல் வாரத்தில் முன்னாள் இலங்கைக் கடற்படைத் தளபதி இந்தியக் கடற்படைத் தளபதியுட்பட முப்படைத் தளபதிகளுடனும் இலங்கையின் பாதுகாப்புக்கான உதவி கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அதனையடுத்து இலங்கைக்கு இந்தியா ஐ.என், எஸ். சரயு எனும் ஹெலிகப்டர் தாங்கியமைந்த கடலோர ரோந்துக் கப்பலொன்றை வழங்கியது.

மேலும் இவ்வாறான ஒரு கப்பல் வழங்கப் படவுள்ளது.

இத்தகைய அனுரசணைகள் தமக்குப் பக்கபலமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனும் தயாரிப்புகளுடனும் சற்றுத் தயக்கத்துடனும் படையினர் குடாநாட்டில் தாம் இழந்த பகுதிகளைப் படிப்படியாக மீட்டெக்கும் 'கினி ஹிர' தாக்குதல் நடவடிக்கைகளில் இறங்கினர்.

இத் தாக்குதல் படையினருக்கு படிப்படியாக ஓரளவு வெற்றியளிக்கக் கூடியதாக மாறியது.

இதில் இராணுவத்தினருக்கு வசதிகரமாக அமைந்தது யாதெனில், புலிகளின் பிரதேசங்கள் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசங்களாக இருப்பதே.

அதனால் அவர்களால் கண்மூடித்தனமான தாக்குதல்களை முழு வீச்சுடன் நடத்தக்கூடியதாக இருக்கிறது.

இத் தாக்குதல்களால் புலிகள் தமது ஊடுருவல் வலயங்களிலிருந்தும் சுற்றி வளைப்பு பகுதிகளிலிருந்தும் பின்வாங்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆயினும் புலிகள் இன்னும் தமது கைப்பற்றிய பிரதேச வலயத்தை தக்க வைத்துக்கொண்டுதான் உள்ளனர்.

புலிகளைப் பொறுத்தவரையில் எதிரியின் சகட்டு மேனி இலக்காகத் தாம் நின்றுதான் ஆகவேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை.

எதிரி தாக்கும்போது பின்வாங்கி, பின்னர் அவர்கள் தளர்வடைந்திருக்கையில் திருப்பித் தாக்குவதே புத்தி பூர்வமானதாக அவர்கள் உணர்கிறார்கள்.

இராணுவத்தின் தற்போதைய 'கினி ஹிர' தாக்குதற் தொடரினால் இராணுவம் ஈட்டியுள்ள இராணுவ ரீதியான ஈடேற்றம் என்னவென்றால், அது தனது குரல் வளையை சுற்றியிருந்த சுற்றிவளைப்புச் சுருக்குக் கயிற்றிலிருந்து தன்னை மீட்டுள்ளது என்பதுதான்.

அதாவது, புலிகளின் சுற்றி வளைப்பு வலயத்திலிருந்து எந்நேரமும் ஏற்படக் கூடிய திடீர் தாக்குதல் ஒன்றுக்கான அச்சத்திலிருந்து தற்காலிகமாக நீங்கியுள்ளனர்.

அத்தோடு புலிகளின் நீண்டதூர ஆட்டிலெறி சுடுகலன்களின் வீச்செல்லையிலிருந்து பாலாலி போன்ற முக்கிய இராணுவத் தளங்களைப் பாதுகாத்துள்ளனர்.

இவை, பார்க்கப்போனால் ஒரு தற்காப்புகர வெற்றியாகவே அவர்களுக்கு அமைந்துள்ளது.

குடாநாட்டில் புலிகளின் கைப்பற்றிய பிரதேசங்களை மீட்டெடுக்கும் இராணுவப் படைநகர்வில் இன்னும் இராணுவம் கால் வைக்கவில்லை.

அவ்வாறானால் அது மீண்டும் ஆனையிறவு தளத்தை தம்வசமாக்கி, புலிகளை வன்னிக்குப் பின்வாங்க வைப்பதுடன் அவர்கள் மீண்டும் படையெடுக்காதபடி அரணிடவும் முடியக்கூடியதாக இராணுவத்துக்கு இருக்க வேண்டும்.

புலிகளைப் பொறுத்தவரையில் இவ்வாறான ஓர் இராணுவ நகர்வு நிகழுமானால் வழிமறிப்பு தாக்குதல்களை நடத்தி அதனை முடிந்தவரை தடுத்து நிறுத்த முயலலாம்.

அத்தோடு வன்னியிலிருந்து சில தாக்குதல் அணிகளை ஏவி திடீரென பல எதிர்பாராத தாக்குதல்களை நடத்தி வெவ்வேறு தாக்குதல் முனைகளைத் திறப் பதன் மூலம் இராணுத்தின் படை நகர்வுத் திட்டத்தைக் குலைக்க முயலலாம்.

அவர்களுக்கு தாம் கைப்பற்றிய குடாநாட்டுப் பகுதிகளைக் கைவிடுவதென்பது கூட இராணுவ ரீதியான வீழ்ச்சியல்ல.

ஏனெனில் அவர்கள் தமது இராணுவ பலத்தை மட்டும் தக்க வைத்துக்கொண்டால் தம்மை வலுப்படுத்திக்கொண்டு எச் சந்தர்ப்பத்திலும் மீண்டும் தாக்குதலில் ஈடுபட முடியும்.

ஆனால் இது அவர்களின் கௌரவப் பிரச்சினையாகவும், ஒரு அரசியல் ரீதியான வீழ்ச்சியாகவும் அவர்களால் உணரப்படுமேயானால் அவர்கள் இராணுவத்தின் முன்னேற்றத்தை எதிர்த்து பலத்த இழப்புகளையும் பொருட்படுத்தாது நின்று பிடிக்கவேண்டியிருக்கும்.

ஏனெனில் ஆனையிறவைக் கைப்பற்றியபோதும், யாழ்ப்பாணத்தை வீழ்த்த விழைந்த போதும் புலிகளின் பலத்தின் மீது தமிழ் மக்களுக்கு, குறிப்பாக வெளிநாட்டுத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்த வியப்பு வீழ்ச்சியடைந்து விடுமாயின் அது அவர்களுக்கான ஆதரவைப் பாதிக்கும்.

அதேவேளை சுவைகண்டு முன்னேறும் இராணுவத்துக்கு சில கடுமையான பாடங்களைப் படிப்பித்தால்தான் மீண்டும் படைவீரரிடையே புலிகளை வெல்வது சிரமம் என்ற அச்ச உணர்வை ஏற்படுத்த முடியும்.

அவ்வச்ச உணர்வை ஊட்டுவதுதான் புலிகளின் வெற்றிக்கு கைகொடுக்கும் பிரதானமான உளவியல் ஆயுதமுமாகும்.

எனவே, குடாநாட்டின் இழந்த பகுதிகளை மீட்பதற்காக, தற்போது மேலும் புதிதாக வாங்கியிருக்கும் மிக் 27 ரக யுத்த விமானங்களுடன், மேலதிக இராணுவத் தளபாடங்களுடன் ஆயத்தத்துக்குள்ளாகிவரும் பாரிய இராணுவத் தாக்குதலை புலிகள் முழு மூச்சுடன் எதிர்த்து நிற்பதற்கு முடிவு செய்வார்களா, அல்லது சிறிய எதிர்ப்புகளைக் காட்டி, முடிந்த வரை தாக்குப் பிடித்துக்கொண்டு பின்வாங்குவார்களா என்பதே அடுத்துள்ள கேள்வி.

# செய்திச் சிதறல்

★ அமைதி, சமாதானம், போர் நிறுத்தம் என்ற வார்த்தைகள் கடந்த பல ஆண்டுகளாக அன்றாடத் தகவல் ஊடகங்களில் இடம் பிடித்து வருகின்றன. இவ் வார்த்தைகளுக்கு எதுவிதமான அர்த்தங்களும் இல்லை என்பதை அண்மையில் வடக்கிலும் கிழக்கிலும் அரசப்படையினர் சார்பில் வெளியிடப்பட்டுள்ள இரு தனித்தனி அறிக்கைகள் நிரூபிக்கின்றன. தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வலியுறுத்தும் முகமாக யாழ் பல்கலைக் கழகத்தினர் பல்வேறுபட்ட இயக்கங்களுடன் இணைந்து நடத்திவரும் 'பொங்கு தமிழ் எழுச்சி' நடவடிக்கைகளுக்கு அனுமதிக்க முடியாதென வடபிராந்திய இராணுவ தலைமை தடை விதித்திருக்கிறது. அரசப் படைகள் மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கைகளுக்கெதிராக எத்தகைய ஆர்ப்பாட்டங்களும் நடத்துவதற்கு அனுமதிக்க முடியாதென கிழக்குப்பிராந்திய இராணுவ தலைமைப்பீடம் தடைவிதித்திருக்கிறது. இந்த இரு அறிக்கைகளையும் கண்ணுற்ற அப்பாவிப் பொதுமக்கள் 'நாங்கள் இப்போது வாழும் நாடு உண்மையில் ஒரு ஜனநாயக நாடுதானா?' என்று சந்தேகப் படுகின்றனர்.

★ நோர்வே நாட்டின் அமைதித் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நான்கு நாட்கள் இங்கு தங்கியிருந்து சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடப் போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 48 மணி நேரம் கூட அவர் இங்கு தங்கியிருக்கவில்லை. சில அரசியல் தலைவர்களை பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்துச் சந்தித்துவிட்டு, நாடு திரும்பி விட்டார். பாராளுமன்றத்தில் அவர் பிரசன்னமாக இருக்கும்போதே 'சிஹல உருமய' கட்சியின் ஒரே பா.உ. ஆன திலக் கருணாரத்ன எரிக் சொல் ஹெய்மின் தனிப்பட்ட வாழ்க்கையோடு தொடர்புடைய சில சம்பவங்களை சுட்டிக்காட்டி "இத்தகைய ஒருவர் எமது நாட்டு விஷயங்களில் தலையிட இலாயக்கற்றவர்!" என்று குறிப்பிட்டுள்ளார். "சொல் ஹெய்ம் பாராளுமன்றத்திலேயே தற்போது நிற்கிறார்." என்று சபாநாயகர் எடுத்துக் கூறியும் சிஹல உருமய பா.உ. தொடர்ந்தும் அவதூறாகப் பேசியுள்ளார். தூதுவர் சொல்ஹெய்ம் இதனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. மாறாக "இந்த நாட்டின் அரசியல்வாதிகள் எத்தகைய 'நாகரிகமுடையவர்கள்' என்பதை கண்டு கொள்ள இதனை ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டிருப்பார் என்பது நிச்சயம்?"

★ சிஹல உருமய கட்சியைத் தோற்றுவித்தவரும், ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக இடம் பெற்ற கெடுபிடிகளினால் கட்சியிலிருந்து வெளியேறியவருமான எஸ்.எல்.குணசேகர 'சிங்கள ஜாதிக சங்கமய' என்ற புதிய அமைப்பை கடந்தவாரம் தொடங்கியுள்ளார். தமது அமைப்பு அரசாங்கத்தால் கொண்டு வரப்படவிருக்கும் புதிய சட்டயாப்பினை எதிர்த்துப் போராடுவதற்காகவே சிங்கள மக்களை அணி திரட்டுவதற்காக தாம் இந்த அமைப்பினை ஓர் அரசியல் கட்சியாக உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளார். உத்தேச அரசியல் யாப்பு, ஒன்றுபட்ட இலங்கையை இரு கூறாகப்பிரிப்பதற்கு ஓர் ஆரம்ப நடவடிக்கையாகும் என்று தெரிவித்துள்ளார்.

★ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனால் அறிவிக்கப்பட்ட ஒரு மாதகால யுத்தநிறுத்தம் தொடர்பாக கடந்த சில வாரங்களாக பலதரப்பட்ட ஆலோசனைகளை நடத்திய அரசாங்கம் இறுதியில் 'புலிகளின் ஒரு தலைபட்சமான யுத்த நிறுத்தத்தை தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை' என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது.

★ வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுத்துள்ள அறிக்கையில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசாங்கம் ஈடுபடுவதற்கு முன்னர் புலிகளின் நிலமையை நன்கு ஆராய்ந்து வருவதாக அறிவித்திருக்கின்றார். ஒருதலைப் பட்சமாக புலிகள் போர் நிறுத்தம் பிரகடனப் படுத்திய போதும் அதற்கு முன்னர் மாவீரர்தின உரையில் தாம் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட தயாராகவுள்ளதாக பிரபாகரன் அறிவித்த போதும், 'நாட்டுக்கு விடிவு காலம் ஏற்படப் போகிறது' என்று ஓரளவு மகிழ்ச்சியடைந்த-ஓயாத துன்பத்தில் சிக்கித் தவிக்கும் மக்கள், இத்தகைய அறிக்கைகளினால் பெரிதும் ஏமாற்றத்திற்குள்ளாகி உள்ளனர்.

# அண்டை மண்டலத்தில்....

## தறிகெட்டுப் போகும் 'தலித்' அரசியல்!

புதிய தமிழகம் கட்சியின் சென்னை அலுவலகமும், அந்த அலுவலகத்தின் ஒரு பகுதியையே தனது குடியிருப்பாகவும் கொண்டிருந்த டாக்டர் கிருஷ்ணசாமியின் வீடும் ஜனவரி 6ந் திகதி அடித்து நொறுக்கப்பட்டது. வந்திருந்த கும்பல் அலுவலகத்திலிருந்த பொருள்களை, கம்ப்யூட்டர்களை அடித்து நொறுக்கியது. இந்த ஆவேசத்தாக்குதலை நடத்தியது புதிய தமிழகம் கட்சியின் மாநில இளைஞரணி துணைத் தலைவரான சி.கே.பாஸ்கரன் தலைமையிலான குழுவினர். அன்றைய தினம் முன்கூட்டியே பத்திரிகை அலுவலகங்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டு நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்த ரகளையில் ஈடுபட்டனர். கிருஷ்ணசாமியின் உருவ பொம்மை கொளுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிஸார் புதிய தமிழகம் கட்சியின் அலுவலகத்தை மூடி சீல் வைத்தார்கள். சென்னை நகரை மிகவும் பரபரப்புக்குள்ளாக்கிய இந்த சம்பவத்தின் பின்னணியும், அதில் மறைந்திருக்கும் அல்லது மறைத்து வைக்கப்பட்டு வெளிவரும் தகவல்களும் சாதாரண மக்களை பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. புதிய தமிழகம் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளராயிருந்த செல்வம் என்பவர் ஒரு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார். எனவே அவர் கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக கிருஷ்ணசாமி அறிவித்தார். இதை எதிர்த்தே செல்வம் ஆதரவாளர்கள் இத்தகைய ரகளையை நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தின் பின்புலனை பார்க்கும் போது, தலித் அரசியலுக்கு உள்ளே இருக்கும் கோரமான, சமூக நலனுக்கு எதிரான வளர்ச்சி நம்மை அதிர்ச்சி அடைய வைக்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களை சித்தரித்துக் கொள்ளும் தலித் முன்னோடிகள் எல்லாவிதமான சமூக விரோதச் செயல்களையும் செய்யத் தயங்காதவர்களாக வலம் வந்து கொண்டிருப்பது அப்பட்டமாக வெளிப்பட்டிருக்கிறது. 1996ம் ஆண்டு ஆடிட்டர் பாண்டியன் என்பவர் கொல்லப்பட்ட வழக்கில், பிரதான குற்றவாளியாக கருதப்பட்ட இந்த செல்வம் என்பவர் இந்தக் கொலையின் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட கோடி ரூபாய் ஆதாயம் அடைந்துள்ளதும், அதன் மூலமாகவும் தன்னை தலித் இயக்க அரசியல் பிரமுகராக காட்டிக் கொள்வதன் மூலமாகவும் நான்காண்டுகளுக்கும் மேலாக இந்த வழக்கிலிருந்து விடுபட்டு வந்துள்ளார்.

சென்னை அரசினர் விடுதியில் ஓர் எடுபிடி வேலையாளாகவும், பின்பு பாரத ரிசர்வ் வங்கியில் ஒரு கடைநிலை ஊழியராகவும் வேலை பார்த்த செல்வம் இன்று இருநூறு கோடிக்கும் மேற்பட்ட சொத்துக்களுக்கு அதிபதியாகவும், சென்னையில் எட்டு பங்களா மற்றும் ஆறேழு சொகுசுகார்களில் வலம் வருபவராகவும் இருக்க முடிந்தது எப்படி? இத்தனைக்கும் ஆளுங்கட்சி பிரமுகரும் இல்லை. அதிகாரமிக்க பதவியை அனுபவித்ததன் மூலம் சொத்து குவித்தவரும் இல்லை. எனில் எப்படி இவ்வளவு சொத்துக்களை குவிக்க முடிந்துள்ளது என்ற விசாரணையில் இந்த செல்வம் மாத்திரமல்ல, செல்வம் போன்ற பலர் தலித் இயக்கப் போர்வையில் 'தாதா அரசியலை' நடத்தி வருவது தெரிய வருகிறது.

சென்னையிலுள்ள ஸ்பிக் நிறுவன அதிபர் ஏ.சி. முத்தையாவுக்கு மிக நெருக்கமானவராக அறியப்பட்ட பாண்டியன் இந்நிறுவனத்திற்கு பல நூறு கோடி ரூபாய் சொத்துக்களை சேர்ப்பதற்கு பலவிதங்களிலும் உதவியதாகக் கூறப்படுகிறது. இதனால் இவரிடமும் பல நூறு கோடி ரூபாய் புழங்கியது. இவர் பல பேருக்கும் வட்டிக்கு பணம் கொடுத்துள்ளார். அப்படிப்பட்டவர்களிடமிருந்து பணம் வசூலிக்க அன்றைய தினம் அம்பேத்கார் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளராக இருந்த செல்வத்தின் உதவியை நாடினார். செல்வமும் பாண்டியனும் காலப்போக்கில் அந்தரங்க நண்பர்களாயினர். செல்வம் கேட்கும் போதெல்லாம் கோடி கோடியாய் பணம் கொடுத்து வந்தார் பாண்டியன். இதற்கிடையே தனது மனைவியை விவாகரத்து செய்து விட்டு சார்டர்ட் அக்கௌவுண்டனாக இருக்கும் சாந்தி என்ற பிராமணப் பெண்ணுடன் வாழ்க்கை நடத்துகிறார்.

மூடப்பட்ட ஆடிட்டர் பாண்டியன் கொலை வழக்கின் பைலை திறந்து வெளிக் கொண்டு வந்துள்ளார் சி.பி.சி.ஐ.டி.யின் டி.ஐ.ஜி. அசோக்குமார் சௌத்திரி.


கைது செய்யப்பட்ட செல்வத்துடன் கடந்த சில ஆண்டுகளாக நெருக்கமாக அறியப்பட்டவர் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனர் காளிமுத்து. இவரும் ஒரு தலித் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது புதிய தமிழகம் சென்னை அலுவலகம் சூறையாடப்பட்டதற்கும் பின்பு சீல் வைக்கப்பட்டதற்கும் கமிஷனர் காளிமுத்துவுக்கு தொடர்பிருப்பதாக கிருஷ்ணசாமி பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கிரிமினல்கள் எப்படி அரசியல் போர்வையில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர். என்பதும், அவர்களுக்கு உதவ, ஜாதி அபிமானத்தால் உயர் பொலிஸ் அதிகாரிகளே எப்படி கடமை தவறியுள்ளனர் என்றும் வெட்ட வெளிச்சமானது.

இந்தச் சூழ்நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவான தலித் இயக்கங்கள் பற்றிய மறுபரிசீலனை அவசியமாகிறது. வரவேற்கத் தகுந்த வகையில் தலித் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு எப்படி திசைதிருப்பப்பட்டுக் கொண்டுள்ளது என்பதையும், இது வருங்காலத்தில் இந்த மக்களை எங்கு கொண்டு சேர்க்கும் என்பதையும் ஆராய வேண்டியுள்ளது.

தமிழகத்தில் இடதுசாரி இயக்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனது போர்க்குணத்தை இழந்துவிட்டதைத் தொடர்ந்து அந்த மக்களுக்கான ஜாதி அமைப்புகள் வலுப்பெறத் தொடங்கியது. ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகளின் கோட்டைகளாக விளங்கிய தஞ்சை, மதுரை, கோவை, கோவில்பட்டி போன்ற இடங்களிலேயே கூட இன்றிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இடதுசாரி இயக்கங்களின்பால் தாங்கள் வைத்திருந்த நம்பிக்கையை மாற்றிக் கொண்டு ஜாதிய அரசியலுக்கு தங்களை பலிகொடுக்கத் தயாராகிக் கொண்டுள்ளனர். சுருக்கமாகச் சொன்னால், உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனது தலைமை பாத்திரத்தை இழந்து ஒட்டு



கிருஷ்ணசாமி

அரசியலையே குறிக்கோளாகக் கொண்டு இடதுசாரி இயக்கங்கள் இயங்கியதைத் தொடர்ந்து அதே ஒட்டு அரசியலை தாங்களே ஏன் கையில் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இந்த மக்களிலேயே சிலர் எண்ணத் தலைப்பட்டுவிட்டதன் விளைவாகவே தமிழ் நாட்டில் ஜாதி இயக்கங்கள் வலுபெறத் தொடங்கின.

இந்த வகையில் மற்ற எல்லா பிரிவு மக்களையும் விட கடந்த பத்தாண்டுகளில் தலித் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வை கணிசமாக அறுவடை செய்ய பதிற்றுக்கணக்கான தலித் இயக்கங்கள் தோன்றி வலுப்பெற்றன. கொடியன்குளம் சம்பவத்தின் விளைவாக தென்மாவட்டங்களில் டாக்டர் கிருஷ்ணசாமியின் தலைமையில் புதிய தமிழகம் கட்சி வலுப்பெற்றது. இது தலித் மக்களிடையே உள்ள மூன்று பிரிவுகளில் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரிடையே மிகவும் செல்வாக்காக விளங்கியது. 1996ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஒட்டப்பிடாரம் தொகுதியிலிருந்து கிருஷ்ணசாமி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்பு புதிய தமிழகம் அசுர வேகத்தில் வளரத் தொடங்கியது. அதற்குப் பிறகு நடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களிலும் தென் மாவட்டங்களில் சுமார் 10 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக அது வலுப்பெற்றது. தலித் மக்களுக்கான இயக்கம் என்று சொல்லப்பட்ட போதிலும், புதிய தமிழகம் அதிகமாக இதே இன மக்களையே பிரதிநிதித்துவப் படுத்தியதால், வடதமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் அதிகமாக வாழ்ந்த மற்றொரு பிரிவு மக்களுக்கான அரசியல் தேவையை நிரப்பும் இயக்கமாக திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு வளரத் தொடங்கியது. தென்மாவட்டங்களில் அதிகாரச்சக்தியாக விளங்கிய தேவர் இன மக்கள் தொடர்ந்து தலித் மக்களை அடிமைப்படுத்த முடியாத சூழ்நிலையில் பல இடங்களில் கலவரங்கள் வெடித்தன. சில இடங்களில் இத்தகைய கலவரங்களுக்கு புதிய தமிழகம் தானே முன்வந்து பிள்ளையார் சுழி வைத்தும் அதன் மூலமாக தனது இயக்கத்தை பலப்படுத்திக் கொண்டது.

புதிய தமிழகம் அடைந்த அரசியல் ஆதாயங்கள், கிருஷ்ணசாமிக்கு கிடைத்த விளம்பரங்கள், 'திருடர் பாதைக்கே' அழைத்து வந்தது. 99ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தேர்தலில் பங்கெடுத்தது. தேர்தலில் தலித் மக்களை ஒற்றுமைப்படுத்த 'வன்னியர் எதிர்ப்புணர்வு' அலையை திட்டமிட்டு உருவாக்கியது விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைமை.

புதிய தமிழகம் கட்சியின் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் இத்தகைய குற்றச்சாட்டுகள் மற்ற தலித் இயக்கத் தலைவர்கள் மீதும் இல்லாமலில்லை. புதிய பாரதத்தின் தலைவர் பூவை மூர்த்தி என்பவரும் கட்டை பஞ்சாயத்து அரசியலுக்கு பேர் போனவர் தான். செங்கற்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல் மற்றும் மணல் குவாரிகளில் சட்ட விரோதமாக மணல் மற்றும் கற்களை கடத்தி இவரும் இவர் போன்ற மற்ற அரசியல் தாதாக்களும் கோடி கோடியாக சம்பாதித்துக் கொண்டுள்ளனர்.

**ஆர்.கண்ணன்**

வட தமிழ்நாட்டில் பலமான தலித் இயக்கமாக உருவெடுத்துக் கொண்டிருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பும் பல இடங்களில் புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக பட்டா போட்டு விற்றும், கட்டைப் பஞ்சாயத்து செய்தும் அரசியல் நடத்துவது யாவரும் அறிந்ததே. இந்தக் காரணத்துக்காக இந்த இயக்கத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் சிலர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதைப் போலவே சென்னையில் கிருஷ்ண பறையனார் என்ற தலித் இயக்கத் தலைவர் ஒருவரும் கட்டைப் பஞ்சாயத்து மற்றும் மாமூல் மூலமாகவே அரசியல் நடத்திக் கொண்டுள்ளார். ஏற்கெனவே தென்மாவட்டங்களில் ஜான்பாண்டியன் என்ற தலித் தலைவர் நடத்தி வந்த கட்டைப் பஞ்சாயத்துக்களும், வன்முறை அரசியலும் யாருக்கும் தெரியாததல்ல. சமூக விரோத செயல்களை அரங்கேற்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தலித் இயக்கம் என்ற கவசம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த இயக்கங்களால் தலித் மக்கள் பலனடைந்தார்கள் என்பதைவிடவும், இந்த இயக்கங்கள் தங்கள் வளர்ச்சிக்கு தலித் மக்களை பயன்படுத்திக் கொண்டதுதான் மிக அதிகம். எந்த ஜாதிய ஆதிக்கத்திற்கு எதிராக போர்க்குணத்துடன் தலித் இயக்கத் தலைவர்கள் வளர்ந்தார்களோ, அதே விதமான ஆதிக்கத்தை தாங்களே தங்கள் மக்கள் மீது செலுத்தும் அதிகார மையமாக இவர்கள் மாறிப் போனார்கள் என்பதுதான் கொடுமையிலும் கொடுமை.

இந்த தலித் தலைவர்கள் ஜாதி வெறியை மட்டுமல்ல, ஜாதி துவேசத்தையும் சேர்த்தே வளர்த்தெடுக்க முற்படுவதால் அப்பாவியான தலித் மக்கள் உணர்ச்சி கொந்தளிப்புக்குள்ளாகி தலித் அல்லாத பிற மக்களுக்கும் தங்களுக்கும் உள்ளான இயல்பான உறவை இழந்து வருகின்றனர்.

இன்னொருபுறம் அருந்ததியினர் என்று சொல்லப்படுகிற தலித்துக்களிலேயே மிகவும் கடைநிலையில் உள்ள பிரிவினர் அந்த தலித் இனத்திலேயே உள்ள ஏனைய பிரிவினர்களாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர், என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தச் சூழலில் தமிழகம் சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி உள்ளதை கவனத்தில் கொண்டு பார்க்கையில் மேற்கண்ட பிரச்சனைகள் எந்த அளவுக்கு மற்ற அரசியல் கட்சிகளால் அவதானிக்கப்படும் என்று தெரியவில்லை.

செல்வத்தைக் காப்பாற்ற முதலமைச்சரிடம் பரிந்துரைக்கும்படி தான் செல்வம் ஆதரவாளர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டபோதிலும் தான் அதற்கு இணங்கவில்லை என்று கூறும் கிருஷ்ணசாமி, இவ்வளவு காலத்திற்குப் பிறகு இந்த விவகாரத்தை கிளறி செல்வத்தை கைது செய்திருப்பது தன்னை உறுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே மாஞ்சோலை தேயிலை தோட்ட விவகாரத்தில் அந்தோணி முத்து என்பவர் கொலையில் கிருஷ்ணசாமிக்கு சம்பந்தம் இருக்கிறது என்ற வழக்கை வேகப்படுத்த செல்வம் ஆதரவாளர்கள் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளனர். மேலும் இவ்வளவு பெரிய கிரிமினல் குற்றம் செய்தவருக்கு தனது கட்சியில் பெரிய முக்கியத்துவம் கொடுத்து கிருஷ்ணசாமி செயல்பட்டதும் விமர்சிக்கப்படுகிறது. இதனால் புதிய தமிழகம் கட்சியின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப் பட்டுள்ளது. குற்றம் இழைத்தவர் யாராயிருந்தாலும் தப்பக் கூடாது என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாகும். ▭

## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

'தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை எடுக்க தம்பி கும்பகோணத்தில கோதானம் பண்ணினானாம்' எண்டு முந்தி தாய் சகோதரங்களை கவனியாமல் குதியன் குத்திக் கொண்டு திரியிற பொடியனைப்பற்றி கூறும் வசனத்தை இனி மாற்றித்தான் சொல்லவேணும் போலை.

'தம்பி வெளிநாட்டில தும்படிச்சு அனுப்பிற காசை தூத்தரிசுத்திரியினம் கொழும்பில் தாய் சகோதரங்கள்' எண்டு மாத்தவேணும். பிள்ளைகள், சகோதரங்கள் வெளிநாட்டில இருந்து பணம் அனுப்ப பெறுமதி தெரியாமல் விசுக்கித்திரியும் பிரகிருதிகளைத் தான் குறிப்பிடுகின்றேன்.

முந்தி நூறுரூபாய் தாளை நாலாய் மடிச்சு வலுகவனமாய் கொட்டப்பெட்டியில் செருகி பொத்திக் கொண்டு போனவை எல்லாம் இப்ப காலம் மாறிப்போய் காசும் கூடிப்போய் வலு ஸ்டைலாய் தோளில ஒரு ஹான்ட்பாக், உள்ளுக்க ஆயிரம் ரூபா நோட்டுக்கள் எண்டு மினுக்கி கொண்டு திரியினம். எல்லாம் தம்பிமார் தும்படிச்சு உண்டியலில அனுப்பின காசு. ஐயோ.... உதுகளின்ர அட்டகாசம் எண்டால் தாங்கேலாது பாருங்கோ. சும்மா கிடந்த வீட்டு வாடகையை எல்லாம் ஏத்திப் போட்டுதுகள்.

"ஆறுமாதத்தில கனடா போயிடுவம், யுரோப் போயிடுவம். அதுவரைக்கும் தானே; அஜஸ்ட் பண்ணுவம்" எண்டு சொல்லி கிடந்த கராஜ், கக்கூஸ் எல்லாம் இதுகளால் அனக்ஸ்சா மாறி ஐயாயிரம், பத்தாயிரம் எண்டு, இவ குடுக்க வெளிக்கிட்டு இப்ப தனி வீடு எண்டா பதினையாயிரம், இருபதாயிரம் எண்டு ஏறிப்போச்சு. எல்லாம் பவுண்ஸ், டொலர், டொய்ஸ் மார்க் செய்யிற வேலை பாருங்கோ.

ஊரில எண்டா எல்லா சாமான்களையும் பத்து இடத்தில விலைகேட்டு மக்சிமம் விலை குறைச்சு வாங்கினவை, இப்ப இஞ்ச கொழும்பில தம்பிமார் அனுப்பிற காசில விலை கேட்டா கௌரவ குறைச்சல், கடைக்காரன் குறை நினைப்பான் எண்டு, என்ன சாமான் வாங்கினாலும் நீட்டுவினம் ஆயிரம் ரூபா நோட்டை.

அதோட இன்னொரு விசயம்-சிங்களத்தில 'என்ன விலை?' எண்டு கேக்க தடுமாறி, "மேக்க.... மேக்க.... மேக்க" எண்டு இவையள் ஆடுமேய்க்கத் தொடங்க, சிங்கள வியாபாரி நல்ல தமிழில "ஒரு மாம்பழம் முப்பத்தைஞ்சு ரூபா அம்மா!" எண்டு சொல்ல, ஊரில கொந்தல் மாங்காயையும் பொறுக்கி அடிச்சவ இஞ்ச "விலையைப் பற்றி பரவாயில்லை. பத்து பழம் தாரும்" என நீட்டுவினம் ஓர் ஆயிரத்தை.

கடைக்காரரும் பாருங்கோ பொட்டு வைத்தவைக்கு ஒரு விலை, பொட்டு இல்லாதவைக்கு ஒரு விலை எண்டுதான் விக்கினம். நல்லா சிங்களம் கதைக்க தெரிந்த எம் பழம் தமிழர் இப்ப பொட்டு போடாமத் தான் சாமான் மலிவா வாங்கவெண்டு கடை கண்ணிக்கு போகினம்.

இதப் பாத்திட்டு என்ர மனுசியும் "பொட்டில்லாம போகட்டேயப்பா?" எண்டா; நான் சொன்னன் "நாசமறுக்க நானின்னம் சாகேல்லயடி!" எண்டு.

ஆனால் ஒண்டு இவையள் ஒரு நல்ல காரியம் செய்து போட்டினம். எல்லா வியாபாரிகளும் இப்ப நல்ல வடிவா தமிழ் கதைக்கினம். ஆயிரம் ரூபா நோட்டுகள் பண்ணுற வேலை பாருங்கோ.

'தேமதுர தமிழோசை கொழும்பெல்லாம் பரவச்செய்யிற' பெருமை இவர்களையே சேரும்.

பொடியள் பாவம்! அங்க குளிரிலயும் பனியிலயும் ஓடிஓடி ஒழுங்கா உண்ணாமத் தின்னாம, இரண்டு வேலை செய்து அனுப்பிற காசில அக்காச்சிமார் மஜஸ்டிக் சிற்றிக்கு (MC) போய் அங்க ஓடுற படியில (ESCALATOR) ஆளையாள் பிடிச்சுக் கொண்டு ஒரு மாதிரி ஏறிப்போய் கிடக்கிற கடையெல்லாம் துளாவிப் போட்டு "ஒண்டும் சரியில்லையப்பா" எண்டு அடிக்கிற கூத்து பெரும் கூத்து.

பெரும்பாலும் வீடு வாசலில் சமையாயினம். நேர ஃபாஸ்ட் புட் சென்ரர்தான். இப்ப இவையளின்ர புண்ணியத்தில மூலைக்கு மூலை ஃபாஸ்ட் புட் சென்டர்தான். பத்தாததற்கு ஒட்டை உடைசல் வான்களிலயும் இப்ப இடியப்பம், புட்டு, சம்பல், சொதி எண்டு விற்கினம் பாருங்கோ.

காலையும் மாலையும் கோயிலுக்கு போகினமோ இல்லையோ கடைச்சாப்பாட்டைத்தான் ஒரு பிடிபிடிக்கினம்.

இவை கோயிலுக்குப் போறதும் புதினம் அறியத்தான். 'இப்ப எந்த றூட் பிரச்சனை இல்லாமல் ஒடுது; கனடா கொஞ்சம் இறுக்கினாலும் ஜேர்மன், ஃபிரான்ஸ் இழுக்குதாம்' எண்டு எந்த நாட்டு றூட் கிளியர் எண்டு கோயிலடிக்குப் போனால் அறியலாம். சந்திக்கு சந்தி உள்ள ஒரு வீடியோ கடை மிச்சமில்லை. புதுப்படம் வந்தா ஒரிஜினல் கசட் எண்டா காசை விசுக்குவினம். முப்பதுரூபா கசட் அறுபது எழுபது எண்டு போகுங்கோ. காசு முடிஞ்சா, தம்பிக்கு ஒரு கோல் போட்டா தும்படிச்ச காசை அதுபாவம்-பாஞ்சு உண்டியலில் அனுப்பும் தானே.

கிட்டத்தில 'தெனாலி' படத்தை பார்த்துப் போட்டு பொடி பெட்டையள் எல்லாம் 'இஞ்சாருங்கோ, இஞ்சாருங்கோ' எண்டு கூப்பிட்டுத்திரியிறது இன்னொரு புதுவிளையாட்டு. கலிமுத்திப் போச்சு எண்டிறது கொழும்பில சரியாத்தான் இருக்குது.

செல்ஃபோன்காரன் செய்த புண்ணியத்தில எவ்வளவு நேரம் கதைச்சாலும் இன்கம்மிங் கோலுக்கு நாலுரூபாய் எண்டு போட்டு உள்ளவைக்கெல்லாம் நம்பரை கொடுத்துப்போட்டு வாறகோல்களை றோட், கோயில், சந்தை, பஸ்ஸில் எல்லாம் "கேக்கேல்லயப்பா பெலத்து கதையுமப்பா" எண்டு இவை கத்திற கத்தில காது செவிடாய் போகும்.

இதில வயது போனதுகளும் இலேசுப்பட்டதுகள் இல்ல. விசுக்கி, விசுக்கி காசை செலவழிச்சுப் போட்டு, றோட்டுக்கு றோட்டு இருக்கிற ஐ.டீ.டீ. ஃபோனுக்கு கிட்ட நிண்டு போற வாற பொடியளிட்ட காட்டை கொடுத்து "ராசா இதப்போட்டு நான் சொல்லுற நம்பரை ஒருக்கா குத்திவிடு

**~குத்தியன்~**

மோனை!" என்பதும் பொடி தான் கலைச்சு வந்த பெட்டையள் போறாளவை எண்ட அவசரத்தில் பிழையான நம்பரை குத்தி ஆராவது வெள்ளைக்காரன் பேச, ஒண்டும் புரியாமல் "ஆச்சி லைன் கிடைக்குதில்லை!" எண்டு போக கிழடும் விடாமல் இன்னொராளை மறிச்சு, "மோனை இதையொருக்கா அடிச்சுவிடு" என்பதும் அவரும் "ஆச்சி இதுல இருக்கிற காசு காணாது எண்டு மெசின் சொல்லுது" எண்டு காட்டைத் திருப்பிக் கொடுக்க மனுசி வாய்க்குள்ள "புதுக்காட்டெல்லே வாங்கினனான். முதலில செருகின அறுவான் பிழையான நம்பரை அடிச்சுப்போட்டான் போல. அதுதான் காட் காசை மெசின் இழுத்துப் போட்டுது; குமரியளைக் கண்டால் பொறிவான்களுக்கு கண்கடை தெரியுதில்லை" எண்டபடி இன்னொரு காட் வாங்கப் போவா.

புதுக்காட் போட்டு கனக்ஸன் கிடைச்சதும் "மோனை ராசா குஞ்சு அம்மா கதைக்கிறன்; செலவுக்கு காசு முடிஞ்சு போச்சு; உண்டியலில உடனை அனுப்படா என்ர திரவியம்!" எண்டுபோட்டு பிள்ளையின்ர சுக துக்கம் கூட விசாரிக்காமல், "கட்பண்ணு மோனை காசை இழுக்கப் போகுது" எண்டு நம்பரை குத்தி விட்டவருக்கு கட்டளை வேறு.

ஊரிலே கேள்விப்படாத விரதமெல்லாம் இஞ்ச பிடிக்கத் தொடங்கி, இப்ப மரக்கறி விலையும் பேய் விலை. வாழை இலை கூட தினசரி காசுக்கு விக்கிற அளவிற்கு நிலைமை வலுவிஷேசம். ஓட்டோக்காரரிடம் ரேட்பேசல் எண்ட கதையே கிடையாது. ஏறிச்சவாரி தான். பொடியள் பாவம். தாங்கள் கோல் எடுக்கேக்க "உங்களை எல்லாம் பாக்க ஆசையாயிருக்கு. இப்ப லாண்டட் கிடைச்சிட்டுது. வாற மாதம் வரட்டே உங்க?" எண்டு கேக்க "ஐயோராசா இஞ்சமட்டும் வராத! இவர்கள் பிடிச்சுப் போடுவான்கள். எங்களை ஏஜன்சியால கெதியா அங்க இழுத்துப் போடடா குஞ்சரம்" எண்டு சொல்ல, அதுகளும் பாவம் ஏஜன்சிக்காக இரவு பகலாய் ஓடி ஓடி உழைக்குதுகள்.

உண்மையில் இங்கு நடப்பதை அறியாத தம்பிமார் "தாய், சகோதரம் கொழும்பில தனிச்சுப்போச்சினம்!" எண்டு நினைச்சு ஓடிஓடி உழைச்சு உண்டியலை அனுப்புகினம். அதுகள் அங்க தும்படிக்க இதுகள் இஞ்ச தூத்திரிச்சு திரியுதுகள்.

# அலசுவது -இராஜதந்திரி

# சூடேறப் போவது யுத்தமா அல்லது சமரசமா?

இலங்கை இனப்பிரச்சனை குறித்த சமரச முயற்சிகளை நோர்வே விசேட தூதவர் எரிக் சொல்ஹெய்ம், மீளவும் புதிய ஆண்டின் முதல் மாதத்திலேயே ஆரம்பித்துள்ளார்.

கடந்த ஆண்டில் நோர்வேயின் சமரச முயற்சிகள் ஆரம்பமானபோது நோர்வே நாட்டின் தேசியக் கொடி எரிக்கப்பட்டு, அந்த நாட்டின் மீது பேரினவாதிகள் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

இத்தடவை நோர்வே பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் மீது அவரது தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சித்து கூச்சலிட்டுள்ளனர் பேரினவாதிகள். அநாகரிகமான இக் கூச்சல் இலங்கைப் பாராளுமன்றத்தினுள்ளேயே நடந்துள்ளது. சிஹல உறுமயவின் பாராளுமன்றப் பிரதிநிதி திலக் கருணாரத்னவே திரு. சொல்ஹெய்மின் தனிப்பட்ட வாழ்கை பற்றி வசைமாரி பொழிந்திருந்தார்.

இருந்தபோதிலும் நோர்வே பிரதிநிதி அவற்றைக் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. அரசியல் முதிர்ச்சிபெற்ற நாடொன்றைச் சேர்ந்தவராகையால் அச்சம்பவத்தை அவர் பொருட்படுத்தாமல் இருந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.



அத்துடன் 'கருமமே கண்ணாயினார்' என்ற கூற்றுக்கமைய தமது சமரச நடவடிக்கைகளிலேயே அவர் கவனஞ் செலுத்திவருகிறாரே தவிர, பேரினவாதிகளின் கூச்சல்களை செவிமடுப்பவராக இல்லை. இதனால் சிஹல உறுமய பாராளுமன்ற உறப்பினர் சந்திரனைப் பார்த்துக் குரைத்த நாயொன்றின் நிலைக்கே உள்ளாகியிருந்தார்.

திரு. எரிக் சொல்ஹெய்ம் இத்தடவை இலங்கை வந்து ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்தித்திருந்தார்.

வன்னிப் பிரதேசத்துக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அவர் இரண்டாவது தடவையாகவும் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் இத்தடவை வன்னி செல்லவில்லை. லண்டனிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏனைய முக்கியஸ்தர்களை அவர் மீளவும் சந்திப்பார் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

திரு. சொல்ஹெய்முடனான இத்தடவைச் சந்திப்பின் பின் சந்திரிக்கா அரசு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் நோர்வே பிரதிநிதியுடனான அரச தரப்புப் பேச்சுக்கள் திருப்திகரமானவையாகவும், உற்சாகமளிப்பதாகவும் இருக்கின்றதெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேசமயம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும், எவ்விதத்திலும் யுத்த நிறுத்தம் அரசதரப்பினால் மேற்கொள்ளப் படமாட்டாதெனவும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதிய ஆண்டு பிறக்கும்போது புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்தனராயினும், அரச தரப்பு புலிகளது நிலைப்பாட்டில் தொடர்ந்து சந்தேகத்துடனிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

புலிகளை முற்றிலுமாக முறியடிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே தென்மராட்சியில் கினிஹிர என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு அரச படைகள் தம்மை அப்பிரதேசத்தில் உறுதியாக நிலை நிறுத்துவதில் முனைப்பாக இருக்கின்றன.

வடபகுதி யுத்த நிலபரத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில், 1987ம் ஆண்டு வடமராட்சியிலேயே முதல் தடவையாக அரச படைகள், ஒப்பரேஷன் லிபரேஷன் என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தன.

இதன் பின்னர் வட பிரதேசத்தின் ஒவ்வொரு வலயமும் யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகி தற்போது தென்மராட்சிப் பிரதேசமே புதிய யுத்த களமாக மாறியுள்ளது.

இதுதவிர யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே ஆனையிறவு, கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு, வன்னிப் பெருநிலப் பரப்பு ஆகியவையும் கடந்த பதினேழு வருடகாலத்தில் மோசமான யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகி இழப்புகளைச் சந்தித்த பிரதேசங்களாகவே இருக்கின்றன.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு தொடர்கதையாகவே இருப்பதுடன், இலகுவில் முடிவுக்கு வரும் அறிகுறிகளை அது கொண்டிராதிருப்பதையுமே அவதானிக்கமுடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஒருதலைப்பட்சமாக அறிவித்த யுத்த நிறுத்தத்தின் கால எல்லை 24ம் திகதியுடன் முடிவடைகிறது. அக்கால எல்லையை அவர்கள் மீளவும் நீடிப்பார்களா? அல்லது யுத்தத்தில் குதிப்பார்களா? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

நோர்வே பிரதிநிதி திரு. எரிக் சொல் ஹெய்ம் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த தருணத்திலேயே லண்டனில் இருந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், 'தமிழ் கார்டியன்' என்ற ஆங்கிலப்பத்திரிகைக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

அப்பேட்டியில் இராணுவரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தமது அமைப்பு தொடர்ந்து நல்ல பலத்துடனிருப்பதாகவே திரு. அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

புத்தாயிரமாவது ஆண்டு பிறந்துள்ள நிலையில் இலங்கை இனப்பிரச்சனை சர்வதேச ரீதியாக மிக முக்கியத்துவம் பெற்றிருப்பதையும் புலிகளது ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் பேட்டி மூலமாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

இருந்தபோதிலும் அரசதரப்பினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் இராணுவ ரீதியான நிலைப்பாடுகளை எடுத்து நோக்கும்பட்சத்தில் சர்வதேச அரங்கில் இலங்கை இனப்பிரச்சனைக்கான சமரச முயற்சி விரிவடையுமா? அல்லது வட இலங்கையில் தென்மராட்சிப் பிரதேசம் ஒரு புதிய யுத்தகளமாக உருமாறுமா? என்ற கேள்விகளே தோன்றுகின்றன.

எது எப்படியிருந்தபோதிலும் யுத்தமும், சமாதானப்பேச்சுக்களும் ஒரேதரத்தில் நடைபெறும் பட்சத்தில், எவ்வகையிலும் ஆக்கபூர்வமான தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது.

பேச்சுக்கள் என்று ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் யுத்த நிறுத்தங்களும் ஏற்படுவது அவசியம். இல்லையேல் இருதரப்பினதும் சந்தேகங்கள், மற்றும் முரண்பாடுகள் என்பவை எவ்வகையிலும் குறைவடைந்துவிடாமலேயே இருக்கும்.

பேச்சுக்கள் நடைபெறும் போது மோதல்கள் ஏற்படும்பட்சத்தில் ஆனையிறவில், அல்லது கிளிநொச்சியில் இடம்பெற்றது போன்ற இராணுவ ரீதியான இழப்பீடுகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க நேர்ந்தால், பேச்சுவார்த்தைகளின் நோக்கம் திசைமாறியதாகவே இருக்கும்.

இராணுவ ரீதியாக ஏற்படக் கூடிய இழப்புக்களை சுதாகரித்துக் கொள்வதிலேயே படைத்தரப்பு கூடுதல் அக்கறையை வெளிப்படுத்தும். அதேபோல புலிகள் தரப்பில் கூட இழப்புக்கள் அல்லது பின்னடைவுகள் தோன்றும் பட்சத்தில் தம்மை மீளவும் பலப்படுத்தும் விதத்தில் அவர்கள் நடந்து கொள்ள முற்படலாம். இதனால் சமாதான முயற்சிகள் என்று ஆரம்பிக்கப்பட்ட பேச்சுக்கள் கூட முறிவடையும் சூழ்நிலைகளே தோற்றம் பெறும்.

ஒரு நல்ல புரிந்துணர்வுடன், யுத்தக் கெடுபிடிகளைத் தவிர்ப்பதற்கு யுத்த நிறுத்தத்தை மையமாகக் கொண்ட சூழலில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளே ஆரோக்கியமானவையாக அமையும்.

இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரை யுத்தத்தின் கொடூரம் எத்தகையதென்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கடந்த பதினேழுவருடகாலத்தில் ஏற்பட்ட இழப்புக்கள், அழிவுகள் என்பவை ஆட்சேதமாகவும், பொருட்சேதமாகவும் எண்ணிலடங்காதவையாகவே இருக்கின்றன.

இலங்கையின் பொருளாதார நிலபரத்தை எடுத்துநோக்கும் பட்சத்தில் என்றுமில்லாதவாறு வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. பொருட்கள், தேவைகள் என்பவற்றின் விலைகள் பல மடங்காகப் பெருகி அன்றாட ஜீவனோபாயத்தை நடத்த முடியாத துர்பாக்கிய நிலையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் அனைத்து வளங்களையும் உறிஞ்சிக் கொண்டிருக்கும் யுத்தம் ஒரு முடிவுக்கு வராத பட்சத்தில் அரசியல் ரீதியாக மட்டுமல்ல. பொருளாதார ரீதியாகக்கூட இலங்கை ஓர் ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கொண்டிருக்கப் போவதில்லை என்பதையே நன்கறிய முடியும்.

லண்டன் தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு புலிகளது அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வழங்கியுள்ள பேட்டியை அலசிப்பார்க்கையில் புலிகள் தமது அரசியல் நிலைப்பாட்டையோ அல்லது இராணுவ ரீதியான நிலைப்பாட்டையோ எவ்வகையிலும் கைவிட்டுவிடவில்லை என்பதையே அறிய முடிகின்றது.

இதுவரைகாலமும் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அர்த்தமற்ற முறையிலும் தகுந்த மத்தியஸ்தத்தைக் கொண்டிராதவையாகவுமே அமைந்திருந்தன.

ஆனால் தற்போது தோன்றியுள்ள புதிய சூழலில் நோர்வே மட்டுமல்ல. பிரிட்டன் கூட இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுக்கு உதவ முன்வந்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.


பிரிட்டனைப்பொறுத்தவரை இலங்கை இனப்பிரச்சனை விடயத்தில் நிறையவே கவனத்தைச் செலுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது.

ஏனெனில் இலங்கை, இந்தியப் படையெடுப்புக்குள்ளான ஒரு நாடாகும். அத்துடன் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றவர்களின் ஆளுமைக்குட்பட்ட நாடாகவும் இருந்துள்ளது.

இறுதியாக பிரிட்டிஷாரினாலும் ஒருநூற்றாண்டு காலத்துக்கும் மேலாக இலங்கை ஆளப்பட்டிருந்தது.

பெயரளவில் மட்டுமே 50 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப்பெற்றது. ஆனால் சுதந்திரம் கிடைத்த நாள்முதல் இன்றுவரை பிரிட்டனிடம் மட்டுமல்ல. உலக நாடுகள் பலவற்றையும் தனது மேம்பாட்டுக்காக இலங்கை பெரிதும் தங்கி வாழ வேண்டியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் கவனம் என்றுமில்லாதவாறு இலங்கை இனப்பிரச்சனை மீது தோன்றியுள்ள இத் தருணத்தில், அக்கவனத்தைத் திசை



திருப்பும் சூழ்நிலைகள் இராணுவரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ எற்படுமேயானால் அதள பாதாளத்திலிருந்தும் மேலெழ முடியாத ஒரு நிலையிலேயே இலங்கை இருக்க நேரிடும்.

நோர்வே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பித்துள்ள நிலையில் அரச தரப்பு நிலைப்பாடு, மற்றும் புலிகள் தரப்பு நிலைப்பாடு என்பவை ஆரோக்கியமான சமரச முயற்சியையே இலக்கு வைப்பவையாக அமையவேண்டும்.

ஆனால் வடக்கே தென்மராட்சிப்பிரதேசத்தில் தோன்றியுள்ள முறுகல் நிலை, மற்றும் தெற்கே அரசியல் பேச்சுக்களுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய விதத்தில் வெளியாகும் கருத்துக் கண்ணோட்டங்கள் என்பவை கைக்கெட்டியும் வாய்க்கொட்டாத தூரத்திலேயே சமாதானத்தை கொண்டு செல்வதாக அமையும்.

புலிகளது யுத்த நிறுத்த காலப்பகுதி முடிவுறும் நிலையில் புதிய மோதல்கள் வெடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பலமாக உள்ளன.

இதேவேளை புலிகளது இராணுவ நிலைப்பாடு மீதே கூடுதல் கவனத்தைச் செலுத்தி உஷார் நிலையில் இருந்து வரும் அரசாங்கமும் புதிய தாக்குதல்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளிலேயே குதிக்கும்.

இந்நிலையில் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக யுத்த களம் சூடுபிடிக்குமா? அல்லது அரசியல் களம் சூடேறுமா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாணம்*** கொழும்புக்கு வந்து விட்டது. இது ஆகுபெயர் இரகசியம் அல்ல. யாழ்ப்பாண மாநகர முதல்வர் கொழும்பில் பதவியேற்றதையே இப்படிக் கூறவேண்டியுள்ளது. யாழ்ப்பாண மாநகர மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று முதல்வரைச் சந்திக்க முடியாமல் இருப்பதுதானாம். இதை உலகமெல்லாம் முதலில் சொல்லவேணும். சரோஜினி, சிவபாலன் வரிசையில் இடம் பிடித்து விடக்கூடாது என்பதில் கவனம் தேவைதான். ஆனால் அதற்காக பதறியேற்பு வைபவத்தின் போதே முதலுதவிப் படையை பக்கத்தில் கொண்டுவந்து வைக்க வேணுமோ?

***கலாசாரம்,பொருளாதாரம்,சுதந்திரம்*** என்பவற்றை மீட்டு எடுத்து நிலைநாட்டுவதே தங்கள் இலக்கு எண்டு ஒவ்வொரு இடமாய் போய் கத்திக் கத்திப் பேசுறவையை கேள்விக்கணைகள் துளைத்து எடுக்குதாம். அது சரி, கலாசாரம், பொருளாதாரம், சுதந்திரம் எல்லாவற்றையும் யார் பறித்துக் கொண்டு போய் எங்கே சிறை வைச்சிருக்கினமாம்?


***சுயமாய் நிர்ணயிக்கிறது*** சுய நிர்ணய உரிமை எண்டால் சரி. அவை நிர்ணயிக்கிறது மட்டும் தான் சுய நிர்ணய உரிமை என்னுறது எங்கையோ இடிக்குது. சூரன் போரில சூரன் வெவ்வேறு வேஷத்தில முகம் காட்டுறது போல இப்ப சுயநிர்ணய உரிமைக் கோஷத்துக்குள்ளேயும் வேற முகம் மறைஞ்சிருக்குதாமோ?

***அரசாங்கத்திற்கு*** அழுத்தம் கொடுக்கும்படி எங்களைக் கோருவது போல யுத்தத்தை நிறுத்தும்படி புலிகளை வற்புறுத்த உங்களால இயலுமா? என்று பத்தோடு பதினொன்றாக அலைந்து திரிபவர்களிடம் இராஜதந்திரக் கேள்வி கேட்கப்படாதாம். அலறிப்புடைத்துக் கொண்டு எங்களுக்கு அவையோடை ஒருவிதத் தொடர்பும் இல்லையெண்டு கையை விரிச்சுக் காட்டினவையாம்.

***தற்போதைய நிலமையில்*** Norwayயைக் கைவிட்டால் இப்போது No way தானாம். அடுத்த மூன்றாம் தரப்பு மூன்றாவது கிரகத்தில இருந்து தான் வர வேண்டியிருக்குமாம். பேரினவாதக் கர்ஜனைகள் சபையில் கேட்டது பற்றி ஆவிக்குரியவரின் பதில் I Dont mind தானாம்.

***தலைவர்மார்*** தூதுவர்மார்களைச் சந்திக்க வீதி வீதியாய் அலைஞ்சுதிரியினம். தூதுவர்மார் சனங்களைச் சந்திக்க ஊர் ஊராய் அலைஞ்சு திரியினம். மொத்தத்தில் எல்லாருக்கும் அலைச்சல் தான் மிச்சம் என்கிறார் ஸ்ரீமான் பொதுசனம்.

***உயர் படிப்பு*** படிக்கப் போனதாலேயே தலைவர்களாகிவிடலாம் எண்டு சிலபேர் நினைக்கினமாம். "பல்கலைக்கழகம் வந்தது படிக்கவே. போராடப் போறது எண்டால் வேற இடத்துக்கு போயிருப்பமே" எண்டு பலரும் வெளிப்படையாகவே சொல்லுகினமாம் இந்த 'உயிர்த்த மனிதர்களின் கூத்து' வெறும் 'பெய்க்கால்' என்பது 'பேசாப் பொருளாம்.'



திகில் தொடர்

ரிப்போர்ட்டர் யோகேஷ் சந்தோஷமான அதிர்ச்சியை வாங்கிக் கொண்டு திணறிக் கொண்டிருந்தான்.

அவன் பொழுது போக்காக பல தெருக்கூத்து நாடகங்களிலும், சபா நாடகங்களிலும் நடித்து ஏராளமான 'அப்ளாஸ்கள்' வாங்கியிருக்கிறான். பள்ளி நாடகங்களிலும் நடித்து கைத்தட்டல்கள் பெற்றதுண்டு.

ஆனால், சினிமா என்பது வேறு, பொருத்தமான தோற்றம் இருக்க வேண்டும். காட்சிகளுக்கேற்றவாறு முகத்தில் நவரசங்களையும் வரவழைத்து உணர்ச்சிகளை கொட்டத் தெரிய வேண்டும், அழும்போது கூட அழகாகத் தெரிய வேண்டும்.

தோற்றத்தை பொறுத்தமட்டில் தன் மீது யோகேஷுக்கு முழு நம்பிக்கையும் உண்டு.

"என்னோட பிகர், மூவிக்கு சூட்டாகும்னு நம்புறீங்களா சார்?" என்று கேட்டான் யோகேஷ்.

"சந்தேகமே வேண்டாம். சினிமாவில் நீங்க நடித்தால் உங்கள் வாழ்க்கையில் பெரும் திருப்பம் ஏற்படும். செல்வமும், புகழும் குவியும்," என்றார் பட அதிபர்.

யோகேஷ் நினைக்கையில் சினிமா மோகம் ஓடி வந்து அணைத்துக் கொண்டது. அபாரமாக நடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையும் ஏற்பட்டது.

"என் மேல உங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறதா?"

"என்ன இப்படி சொல்றீங்க? பரிபூரண நம்பிக்கை உண்டு. நான் சினிமா மேக்கர்"

"ஓ.கே., நான் யாருக்கு இணையாக நடிக்க வேண்டும்."

"இளம் அழகு புயல் தான்!"

"அப்படியும் ஒரு புயல் இருக்கிறதா ப்ரொடியூசர் சார்?"

"ய்யா...... மிஸ் ரத்னா தான் அந்த அழகுப்புயல். இது தெரியாதா?"

யோகேஷ் அவளை நினைத்துக் கொண்டதும் கன்னத்து சதை 'ஜிவ்' வென்று இழுத்துப் பிடித்து கொண்டது போல் இருந்தது. சருமம் குபீரென்று சிலிர்த்தது.

'தன்னால் ரத்னாவுடன் நடித்து தாக்கு பிடிக்க முடியுமா?' என்ற பயமும் ஏற்பட்டது.

'ரத்னா என்ற மிருதுவான, இளசான அந்த மாம்பிஞ்சு இப்போது இயல்பான மனநிலையில் இல்லை. ஒரு வேளை மூளையில் அவளுக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாமோ, என்று கூட சந்தேகித்தான்.

'நிச்சயமாக அவள் ஆபத்தானவள். அவளுடன் நடிக்க துணிவது தற்கொலையை வரவேற்பதற்கு சமம்.

ரத்னா மீது கொலைக்குற்றம் கூட வர வாய்ப்பு உண்டு. கதாநாயகன் சிவப்பிரகாஷை அவள் ஏரியினுள் மூழ்கடித்து கொன்றதாகவும் கூற முடியும்.

சினிமா உலகம் தேடி வருவது வரவேற்க கூடிய ஒன்றுதான்! ஆனால், கொலைக்காரியாக கருதப்படும் ரத்னாவுடன் நடிப்பது ஒவ்வொரு வினாடியும் அபாயமானதாயிற்றே!'

யோகேஷ் யோசிப்பதை கவனித்த பட அதிபர், அவனை சமாதானப்படுத்த முயன்றார்.

"மிஸ்டர் யோகேஷ்"

"சொல்லுங்க சார்."

"தயவு செய்து நடிக்க ஒப்புதல் கொடுங்கள்."

யோகேஷ் உடனடியாக பதில் சொல்லவில்லை. தயக்கம் காட்டினான். நடிகை ரத்னாவுடன் போராட முடியுமா என்ற கேள்வி.

மருத்துவமனையில் வைத்து நர்ஸ்களை நையப்புடைத்திருக்கிறாள். சாதுவான டாக்டரையும் விடவில்லை. மருத்துவ உபகரணங்களையும் சேதப்படுத்தி இருக்கிறாள்.

அவளை நம்ப முடியுமா?

அவனுக்கு தைரியம் வரவில்லை.

மீண்டும் அவள் வெறிகொண்டு தாக்கலாம்; அல்லது அவள் தற்கொலை கூட செய்து கொள்ளலாம். எத்தகைய விபரீதமான ஆபத்தும் ஏற்படலாம். அது தொடர்பாக சிக்கல்களும் ஏற்படலாம். யோசிக்கையில் சினிமா நடிப்பே வேண்டாம் என்றே தோன்றியது.

"ஸாரி சார். சினிமாவில் நடிப்பதில் எனக்கு ஆர்வம் இல்லை," என்று கூறி தட்டிக்கழித்தான்.

யோகேஷ் முற்றுப்புள்ளி வைப்பது போல் இப்படி பேசவே கம்பிரமான மதயானை போன்ற தோற்றம் கொண்ட பட அதிபர் தளர்ந்து போனார்.

பருத்த பனங்காய் முகத்தில் வியர்வை வழிந்தது. திடீரென்று சுருதி குறைந்தவராக அவனுடைய கைகள் இரண்டையும் பிடித்துக் கொண்டு.... "தம்பி.... என் நிலையைப் பாருங்கள். நான் நூறு கோடிக்கு மேல் சொத்துக்காரன்," என்றார்.

"சரி,"

"இந்தப் படத்திற்கு இதுவரையில் ஒரு கோடிக்கு மேல் செலவு செய்துவிட்டேன். நீங்கள் எனக்கு உதவாவிட்டால் என் மானமே போய் விடும்."

அவர் தொடர்ந்து வற்புறுத்தவே யோகேஷ் ஒப்புக் கொண்டான்.

அப்பொழுது அவனுக்கு ஆபத்து புரியவில்லை.

**யோ**கேஷின் நிலைமை தடுமாற்றத்திற்கு உரியதாக இருந்தது.

ரத்னாவால் தான், சிவப்பிரகாஷ் மரணமடைந்தான் என்பதற்கு மாறுபட்டக் கருத்து எதுவும் இருக்கவில்லை.

இயல்பான நிலையில் கதாபாத்திரமாக ஒன்றி நடித்த ரத்னாவுக்கு என்ன ஆயிற்று? ஏன் அப்படிச் செய்தாள்?

இந்த நிலையில் வாட்ச்மேன் கிழவன் சம்பூரனுடன் நடத்திய உரையாடல் நினைவுக்கு வந்தது.

ரத்னாவை மீண்டும் நினைத்தான். இயல்பான நேரங்களில் அவள் சாதுவான முயல்குட்டி. மிரண்டு விட்டாலோ மூர்க்கமான முரட்டுப் பூனை! அவளுடன் நெருங்கிப் பழகுவது மஞ்சள் நாகத்துடன் விளையாடுவதற்கு ஒப்பானது.

**அ**ந்த நிலையில் கூட அவள் உள்ளத்தை கொள்ளச் செய்யும் அழகிதான். இருப்பினும், பட அதிபருக்கு உதவுவதிலிருந்து யோகேஷ் பின் வாங்கத் தயாராக இல்லை.

அன்று மாலையே ரத்னா பூரணமாக குணமான நிலையில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டாள்.

நீண்ட நேர ஆழ்ந்த சிந்தனைக்கு பிறகு யோகேஷ் தீர்மானமான ஒரு முடிவுக்கு வந்தான்.

பட அதிபரின் வெள்ளை நிறபளபளப்புடயோட்டா சொகுசுக்காரின் பின் இருக்கையின் கண்ணாடி ஓர ஜன்னல் பக்கம் ரத்னா தெரிந்தாள்.

பாதுகாப்பாக பக்கத்தில் தாயார் சவுந்திரவல்லி. கண்களுக்கு குளிர்முக்குக் கண்ணாடி கொடுத்திருந்தாள்.

'மலைக்காட்டு மங்கம்மா' என்ற அந்தப் படம் நல்லவிதமாக முடிந்து திரைக்கு வந்தால், அவள் தென்னக திரைவானில் வெற்றிக் கொடி நாட்டப்போவது திண்ணம்.

பெரும் ரசிகர் பட்டாள ஆதரவுடன் கோடிக்கணக்கில் பணம் குவியப்போவதும் உறுதி.

"ஸார் ஒரு நிமிஷம்."

காரோட்டியின் பக்கம் அமரப் போன பட அதிபர் தாணுமாலயமாமணியை தனியாக அழைத்தான் ரிப்போர்ட்டர் யோகேஷ்.

தயங்கிய போதிலும் பட அதிபர் வந்து, திரும்பி இறக்கப்பட்டிருந்த பின்கண்ணாடி கதவை பார்த்தார்.

ரத்னா அமைதியே உருவாய் நிலா முகத்தைக் காட்டிக் கொண்டு சாதுவாக உட்கார்ந்திருந்தாள்.

(திகில் தொடரும்)



திகில் கதை மன்னன்

பி.டி.சாமி

## போதையில் மிதக்கும் பேதை



**ஜெ**ர்மனியில் மொடலிங் துறையில் தொடர்ந்து 14 வருடங்களாக முதலிடத்தில் இருப்பவர் குளோடியா ஷிபர். இவர் நடந்தால், எழுந்தால், நிமிர்ந்தால், சிரித்தால் அழகு, அழகு, அழகு என்று இவரைப்பற்றி வர்ணித்துக் கொண்டே போகலாம்.

ஃபாஷன் ஷோக்களில் குளோடியா அணிந்துவரும் 'சிக்' என்ற உடை காண்போரை கவர்ந்திழுக்கிறது. தான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு ஷோவிலும் விதவிதமான ஆடைகளுடன் பவனி வந்து குளோடியா ஆண்களை மட்டுமன்றி பெண்களையும் கவர்ந்து விடுவார்.

தற்போது 30 வயதை எட்டியிருக்கும் குளோடியா அண்மையில் ஃபாஷன் ஷோ ஒன்றில் கலந்து கொண்டு விட்டு, வெளி வரும்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

பின்னர் ஒரு பேட்டியில் தனது திருமணத்தைப் பற்றிக் கூறும்போது,

"எனக்கு இப்போது 30 வயது தானே ஆகிறது. இப்பவே திருமணம் செய்து கொண்டால் எனது சுதந்திரம் எல்லாம் பறிபோய்விடும்.

குறிப்பாக மாலையாகி விட்டால் என்னால் குடிக்காமல் இருக்க முடியாது. கிளப்பிற்குச் சென்று விடிய விடிய ஆண் நண்பர்களுடன் நடனமாட முடியாது."

என்று தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் தான் நடிகை தினமும் போதையில் மிதக்கும் விஷயம் பலருக்கும் புரிய ஆரம்பித்துள்ளது. ●

## இந்தியாவை உலுக்கி வரும் பெண் சிசுக் கொலை!



**சி**ல வருடங்களுக்கு முன் வெளியான 'கருத்தம்மா' படத்தில் பெண் சிசுக்களைக் கள்ளிப்பால் கொடுத்துக் கொலை செய்வதைப் பார்த்துப் பலர் அதிர்ச்சியால் உறைந்து போயிருந்தனர்.

இந்தியாவின் பல மாநிலங்களிலும் பெண் சிசுக் கொலை சர்வசாதாரணமாக நடந்து வருகிறது. அதிலும் குறிப்பாக பீகார் மாநிலத்தில் பெண் சிசுக் கொலை ஒரு தொடர்கதையாக இருக்கிறது.

பீகார் மாநிலத்தின் கதிகார் என்ற பகுதியில்தான் அதிக அளவில் இந்தக் கொடூரங்கள் நடக்கின்றன. இங்கு சிசுக்களைக் கொல்வதற்கென்றே 'ஸ்பெஷலிஸ்ட்' பெண்கள் இருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஒரு சிசுவைக் கொல்ல இந்தப் பெண்களுக்கு 100 ரூபாவில் இருந்து 150 ரூபாவரை கொடுக்கப்படுகிறது. பணத்தைப் பெற்றுக் கொண்டு இவர்கள் சிசுக்களின் கழுத்தைக் கயிற்றால் இறுக்கியும், வாயில் விஷத்தை ஊற்றியும் கொன்று விடுகிறார்கள்.

பெண் சிசுக்களைக் கொலை செய்யும் கதிகாரைச் சேர்ந்த பூல்தேவி என்ற பெண் இதுவரை 65 உயிர்களைத் தனது கயிற்றுக்கு இரையாக்கி இருக்கிறார்.

ஏதுமறியாச் சிசுக்களின் உயிர்களுக்கு வேட்டு வைத்த பூல்தேவி தற்போது இந்தக் கொடூரச் செயலில் ஈடுபடுவதை நிறுத்திவிட்டார்.

இவரது மூத்த மகன் விபத்தில் சிக்கிக்காலை இழந்ததும், இளைய மகன் விபத்தில் உயிரிழந்ததுமே இதற்குக் காரணம் ஆகும்.

"நான் செய்த சிசுக்கொலைகளுக்குக் கடவுள் என்னை நன்றாகத் தண்டித்து விட்டார். இந்தத் தொழிலை நான் இப்போது விட்டு விட்டேன். இதை விட்ட பிறகு தான் நிம்மதியாக இருக்கிறது." என்று பூல்தேவி கூறியுள்ளார்.

இவரைப் போல் சிசுக்கொலை செய்யும் சில பெண்களும் திருந்தி, தமது தொழிலை விட்டு விட்டார்கள்.

இருப்பினும் சிசுக்கொலைகளைச் செய்வதில் இந்தப் பெண்களை விட மருத்துவமனைகளே ஈடுபட்டிருப்பதுதான் வேதனையான விடயம்.

குழந்தைகள் உயிரைக் காக்க வேண்டிய மருத்துவமனைகளால் அந்தக் குழந்தைகளின் உயிர்கள் பறிக்கப்படுவது இந்தியா முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சிசுக்கொலை செய்யும் மருத்துவமனைகள் மட்டுமன்றி, தமது சிசுக் களைக் கொலை செய்யச் சொல்லும் பெற்றோரும் திருந்தினால்தான் இதற்கொரு விடிவு பிறக்கும். ●

## ஹொலிவூட்டில் டயானா ஹெய்டன்



**இ**ந்தியாவைச் சேர்ந்த முன்னாள் உலக அழகியான டயானா ஹெய்டன், அழகிப் பட்டம் கிடைத்த பின் இந்தித் திரைப் படங்களில் நடிப்பார் என்று கூறப்பட்டது.

ஆயினும் டயானா எந்தவொரு இந்தியப்படத்திலும் நடிக்கவில்லை. வாய்ப்புக்களை மறுத்தாரா? அல்லது வாய்ப்புகள் வரவில்லையா என்று தெரியவில்லை.

இவற்றையெல்லாம் விடப் பெரிய வாய்ப்பொன்று டயானாவைத் தேடி வந்திருக்கிறது. ஹொலிவூட் பட வாய்ப்புத்தான் அது. அதுவும் ஹொலிவூட் சூப்பர் ஸ்டார்களில் ஒருவரான புரூஸ் வில்லீஸ் ஜோடியாக நடிக்கும் வாய்ப்பு.

உடனே ஓ.கே. சொன்ன டயானா, ஹொலிவூட்டிற்குப் பறந்து விட்டார்.

"எனது சின்ன வயதிலிருந்தே நடித்து இருக்கிறேன். பாடசாலை நாடகங்களில் நடித்த போது எனக்குப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. நிச்சயமாக என்னால் ஹொலிவூட்டிலும் பிரகாசிக்க முடியும்!" என்று கூறியுள்ளார் டயானா.




↓ விரல் நுனியில் வைத்துக் கொண்டு இவர் படிப்பது பத்திரிகை ஒன்றை என்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

3.5 சென்டி மீட்டர் நீளமும் 2.5 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட இந்தப் பத்திரிகை தான் உலகிலேயே மிகவும் சிறிய பத்திரிகை என்ற உலக சாதனையைப் படைத்திருக்கிறது.

பிரேஸில் நாட்டில் இருந்து வெளிவரும் இந்தப் பத்திரிகையின் பெயர் 'வாசா சென் ஹோரியா' என்பதாகும். மொதத்தம் 16 பக்கங்கள் கொண்ட இந்தப் பத்திரிகையில் உலகச் செய்திகள், உள்ளூர்ச் செய்திகள் என அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் பற்றிய கட்டுரைகளும் சிறுவர் பகுதி, கார்ட்டூன் போன்ற பல விஷயங்களும் உள்ளடங்கியிருக்கிறது.

# மிகச் சிறிய பத்திரிகை



# கடுங்குளிரோ?

↑ இப்போது நாடெங்கும் கடுமையான பனி. இரவில் போர்வையை இழுத்துப் போர்த்தாமல் தூங்க முடியாது. சிலருக்கு ஸ்வெட்டர் அணியாமல் தூங்கமுடியாது.

அமெரிக்காவிலும் சரியான குளிர். தான் மட்டும் குளிரில் இருந்து விடுபட ஸ்வெட்டர் அணியாமல், தனது செல்லப் பிராணிகளான ஸ்பார்க்கி, மெக்கர்ஸ் ஆகிய இரு நாய்களுக்கும் ஸ்வெட்டர்களை அணிவித்துள்ளார் வைஸ் ஹார்ட் என்பவர்.

↓ பிரிட்டனின் பெல்ஃபாஸ்ட் நகருக்கு அருகில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சிலைதான் இது.

அமைதியைக் குறிக்கும் வகையில் நிறுவப்பட்ட இந்தச் சிலையை வட அயர்லாந்தின் முதல் அமைச்சரும், இணை முதல் அமைச்சரும் திறந்து வைத்தனர்.

அமைதி முயற்சியில் ஈடுபட்டிருப்போருக்கு அமைதியின் முக்கியத்துவத்தை அன்றாடம் நினைவூட்டுவதே இந்தச் சிலையின் நோக்கம்.


# அமைதிச் சிலை



# உயரப் பறக்கும் தோம்பு

← சிலமாதங்களுக்கு முன் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடந்த ஒரு கேளிக்கை விழாவில், பல வகையான பலூன்கள் பறக்க விடப்பட்டிருந்தன. அவற்றில் சமையலுக்குப் பயன்படும் எரிவாயுத் தோம்பு (காஸ் சிலிண்டர்) வடிவத்தினாலான பலூன் உயரப் பறக்க விடப்பட்டபோது, பலர் ஆர்வத்துடன் பார்த்து இரசித்தனர். காஸ் சிலிண்டரின் விலையும் இப்படி பலூன் போல் உயர்ந்து செல்கிறது என்று நீங்கள் முணுமுணுத்தால் நாம் அதற்குப் பொறுப்பல்ல.





தகவல் பெட்டி

# கண்கவர் சுற்றுலாப் பகுதி

→ மேலேயிருந்து படம் பிடிக்கப்பட்ட மலைப்பாங்கான கண்கவர் சுற்றுலாப் பகுதிதான் இது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கு அருகில் நிக்கோ என்ற இது அமைந்திருக்கிறது.

இந்த மலைகளின் மேலே சிவப்பு, பச்சை, மஞ்சள் நிற இலைகளையும், பூக்களையும் கொண்ட செடிகொடிகள் ஏராளமாக உள்ளன.

இந்தக் கண்கவர் காட்சிகளைக் காண சுற்றுலாப் பயணிகள் பலர் படையெடுத்து வருகின்றார்கள்.

இங்கு சுற்றுலாப் பயணிகள் வளைந்து நெளிந்து செல்லும் மலைப்பாதைகளில் வாகனங்களில் இருந்தவண்ணம், அழகுகளை இரசிப்பார்கள்.

இதனால் இப்பகுதியில் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்படுவது வழமையாகிவிட்டது.

# சினி விசிட்

## கடந்த வருடக் கண்ணோட்டம்

## புதிய இயக்குனர்கள்

கடந்த வருடத்தில் 15 புதிய இயக்குநர்கள் தமிழில் அறிமுகமாகி இருந்தார்கள் அவர்களின் பெயர்களும் படங்களும் வருமாறு:

1. நடிகர் கமல் - ஹேராம் (கமல் இயக்கிய முதல் தமிழ்ப்படம்)
2. என் மகாராஜன் - வல்லரசு
3. கவி.காளிதாஸ் - உன்னைக்கொடு என்னைத் தருவேன்
4. ஆர்.கே.கலைமணி - தைபொறந்தாச்சு
5. துரை - முகவரி
6. ராஜகண்ணா - கண்ணால் பேசவா
7. சன்வரன் - சிம்மாசனம்
8. வி.எஸ்.ஜெயராம் - நினைவெல்லாம் நீ
9. கே.ஆர்.ஜெயா - உயிரிலே கலந்தது
10. ஜெ.தம்பிராமையா - மனுநீதி
11. ஆர்.கே.சரோஜ் - நீ எந்தன் வானம்
12. பூபாபு - இனையவன்
13. இந்தியன் - மகளிர்க்காக
14. சேரராஜத்தினம் - பொட்டு அம்மன்
15. அப்துல் ரகுமான் -மனசு



## அதிகமான பாடல்களைப் புனைந்தவர்

கடந்த வருடம் அதிகமான பாடல்களைப் புனைந்த பாடலாசிரியர் என்ற பெருமையைப் பெற்றிருப்பவர் கவிஞர் வைரமுத்து.

இவர் கடந்த வருடம் 22 படங்களுக்குப் பாடல்களைப் புனைந்துள்ளார்.

## அதிகப் படங்களில் ந...

கடந்த வருடம் அதிகப் படங்களில் நடித்தவர் என்ற பெருமையைப் பெறுபவர் பிரபு. இவர் ஆறு படங்களில் நடித்துள்ளார்.

இதே போல கார்த்திக் மற்றும் பிரபுதேவா ஆகிய இருவரும் தலா ஆறு படங்க...

...ளில் நடித்... தைபொறந்... பிரபுதேவா... சிறிய வே... அதிக பட... அந்தஸ்தை...

## பத்மபூஷன் ரஜினி

கடந்த வருடம் ரஜினியின் படங்கள் எதுவும் வராவிட்டாலும் அவரது கலைச்சேவையை ... அவருக்கு பத்மபூஷன் விருது இந்திய மத்திய அரசால் வழங்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் இந்த விருதை ரஜினிக்கு வழங்கினார்.

அத்துடன் புதுடெல்லியில் கடந்த வருடம் நடைபெற்ற சர்வதேச விழாவில் ரஜினியின் 'படையப்பா' திரையிடப்பட்டது. 1999ம் ஆண்டின் சிறந்த படமாக 'படையப்பா'வும் அதில் நடித்த ரஜினியை சிறந்த நடிகராகவும் கடந்த வருடம் தமிழக அரசு தேர்வு செய்தது.



## அதிகமான பாடல்களைப் பாடியவர்கள்

கடந்த வருடம் அதிகமான பாடல்களைப் பாடியவர் என்ற பெருமை ஹரிஹரனுக்குக் கிடைத்திருக்கிறது. இவர் 33 படங்களில் பாடியிருக்கிறார்.

பாடகிகளில் அனுராதா ஸ்ரீராம் 30 படங்களில் பின்னணிப் பாடல்களைப் பாடி முன்னணிப் பாடகியாகத் திகழ்கிறார்.




## புதிய இசையமைப்பாளர்கள்

கடந்த வருடம் 5 புதிய இசையமைப்பாளர்கள் தமிழில் அறிமுகமாகியிருக்கிறார்கள். அவர்களது பெயர்களும் இசையமைத்த படங்களும் இதோ:

1. ஜெய் - அன்புடன்
2. பாபி சங்கர் - உனக்காக மட்டும்
3. ஸ்ரீகாந்த் - டபுள்ஸ்
4. வாசன் - மகளிர்க்காக
5. பிரதீப் ரவி - என் சகியே

## வெற்றிப் படங்கள்

கடந்த வருடம் 65 நேரடித் தமிழ்ப்படங்கள் வெளியாகியிருந்தன. வேற்று மொழிகளில் இருந்து 95 படங்கள் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டன. மொத்தமாக வெளியான 160 படங்களில் 11 படங்கள் தான் 100 நாட்களைத் தாண்டி வெற்றி பெற்றுள்ளன.

100 நாட்களுக்கு மேல ஓடிய படங்கள்:

1. திருப்பதி ஏழுமலை வெங்கடேசா (1999ல் வெளியான இப்படம் கடந்த வருடம் 100வது நாளை எட்டியது)
2. முகவரி
3. வல்லரசு
4. அலைபாயுதே
5. கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
6. வெற்றிக் கொடி கட்டு
7. குஷி (150 நாட்கள்)
8. பட்ஜெட் பத்மநாபன்
9. பார்த்தேன் ரசித்தேன்
10. மாயி
11. பாரதி

கடந்த வருடம் தீபாவளிக்குப் பின் வெளியான 'தெனாலி', 'பிரியமானவளே' உட்பட சில படங்கள் இன்னமும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

## முன்னணி நாயகர்கள் நடித்த படங்கள்

2000மாம் ஆண்டில் முன்னணி நாயகர்கள் நடித்த படங்கள் வருமாறு:

**ரஜினிகாந்த்**

1999ல் படையப்பா படத்தைக் தந்த ரஜினிகாந்த் கடந்த வருடம் எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. இவர் சில வருடங்களுக்கு முன் இந்தியில் நடித்த 'ஆதங் கி ஆதங்' என்ற படம் தமிழில் 'ஆண்டவன்' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு கடந்த வருடம் வெளியாகியது.

**கமலஹாசன்**

இரண்டு படங்கள். 1. ஹேராம். 2. தெனாலி.

**விஜயகாந்த்**

மூன்று படங்கள். 1. வானத்தைப் போல. 2. வல்லரசு. 3. சிம்மாசனம்.

**சத்யராஜ்**

மூன்று படங்கள். 1. என்னம்மா கண்ணு. 2. உன்னைக் கண் தேடுதே. 3. புரட்சிக்காரன்.

**பிரபு**

ஐந்து படங்கள். 1. திருநெல்வேலி. 2. தை பொறந்தாச்சு. 3. கந்தா கடம்பா கதிர்வேலா. 4. பட்ஜெட் பத்மனாபன். 5. வண்ணத்தமிழ்ப் பாட்டு.

**கார்த்திக்**

ஐந்து படங்கள். 1. தைபொறந்தாச்சு (கௌரவ வேடம்). 2. கண்ணன் வருவான். 3. குபேரன். 4. சந்தித்த வேளை. 5. சீனு

**சரத்குமார்**

இரண்டு படங்கள். 1. பெண்ணின் மனதைத் தொட்டு. 2. மாயி.

**அர்ஜுன்**

மூன்று படங்கள். 1. சுதந்திரம். 2. வானவில். 3. ரிதம்.

**முரளி**

இரண்டு படங்கள். 1. வெற்றிக் கொடி கட்டு. 2. மனுநீதி.

**பார்த்திபன்**

நான்கு படங்கள். 1. காக்கைச் சிறகினிலே. 2. வெற்றிக் கொடி கட்டு. 3. சபாஷ். 4. ஜேம்ஸ் பாண்டு.

**பிரபுதேவா**

ஐந்து படங்கள். 1. ஏழையின் சிரிப்பில். 2. வானத்தைப்போல. 3. பெண்ணின் மனதைத் தொட்டு. 4. ஜேம்ஸ்பாண்டு. 5. டபுள்ஸ்.

**விஜய்**

மூன்று படங்கள். 1. கண்ணுக்குள் நிலவு. 2. குஷி. 3. பிரியமானவளே.

**அஜித்**

மூன்று படங்கள். 1. முகவரி. 2. உன்னைக் கொடு என்னைத் தருவேன். 3. கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்.

**பிரசாந்த்**

மூன்று படங்கள். 1. குட்லக். 2. அப்பு. 3. பார்த்தேன் ரசித்தேன்.

## அதிக படங்களில் நடித்த நாயகி

கடந்த வருடம் அதிக படங்களில் நடித்தார் என்ற பெருமையைப் பெறுபவர் கௌசல்யா. இவர் கடந்த வருடம் எட்டுப் படங்களில் நடித்துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் இருப்பவர் ரோஜா. இவர் ஏழு படங்களில் நடித்து இரண்டாவது இடத்தில் இருக்கிறார்.



## சமாதானப்பிறப்பு

பாவம் சுமந்த பாரிலோர்
தேவனே கதி நீயேயென்று
கதறிய வேளையிலே-உந்தன்
உள்ளத்து அன்பையெல்லாம்
உருக்கி வார்த்து அனுப்பி
வைத்தீர் அருமை மைந்தனை!
***
பார் போற்ற பிதாமகனீர்
தோள் சுமந்தீர் பாவமெல்லாம்
இரங்கினீர் மானிடர்மேல்-நாம்
தொலைத்து நின்ற தூயவாழ்வை
மீட்டுத் தந்தீர் சிலுவையிலே
மறையாது வாழ்கின்றீர் மறைதலிலே!
***
துயர் சூழ்ந்ததால், தூயவனே!
வாடி நிற்கின்றோம் வாழ்வையிழந்து
உம் மிலேனியப் பிறப்பில்
பாறையிலிருந்து புறப்படும் நீராய்
பாய்ந்து வர வேண்டும் அமைதி
இதயங்களில் பாடி வரவேண்டும்
சமாதானம்!

கே. தேவலதா-கல்முனை-02.

## தே ன் கி ண் ண ம்

## முரண்பாடுகள்

எதை நாம்
முரண்பாடுகள்
என்கிறோம்!
***
ஆணும், பெண்ணும்
எதிர்பாலினர்தான்
ஆனால்;
அவர்களின்
சேர்க்கையில்தான்
குடும்பம் உருவாகின்றது!
***
நேரும், எதிரும்
ஒன்றுக்கொன்று
முரணானவைதான்
ஆனால்;
அவற்றின்
ஒத்திசைவில் தான்
மின்சாரம் பிறக்கின்றது!
***
பூமி தட்டையானது
என்று நம்பிய காலத்தில்
அதை உருண்டையென ஆதரித்த
அன்றைய சமூகத்தினரிடையே
முரண்பாடு(டே) நேர்ந்தது
அந்த விஞ்ஞானிக்கு!
***
முரண்பாடுகள்
ஒரு மாற்றீடுகளே தவிர
அவை முரணானவையல்ல!
***
முரண்பாடுகள் இல்லாத
ஒரு வாழ்க்கை இல்லை
அவற்றை
கையாளும் கலையிலேயே
அது தங்கியிருக்கின்றது!
***
பகை முரண்பாடு
அழிவுக்கு வித்திடுபவை
நேச முரண்பாடு
ஆரோக்கியமானவை!
***
பகை முரண், நேசமுரண்
இவை இரண்டையும்
யதார்த்தமாக வெற்றிகொள்ளும்
அறிவும் நமக்குத் தேவை!
***
முரண்பாடுகள் இல்லாத
நாடோ, சமூகமோ இல்லை
இவை வளர்ச்சிக்கு
காரணி என்றும் சொல்லலாம்!
***
முரண்பாடுகளுக்குள்
வாழ்வதுதான்
யதார்த்தம்!
***
முரண்பாடுகள் தோன்றவில்லையாயின்
அங்கு செயற்பாடுகள்
நடக்கவில்லையென்றே
அறுதியிட்டுக் கூறமுடியும்!

வீ. ஸ்ரீதரன்-மூதூர்.

## அசலும் நகலும்

இலண்டனில் உள்ள உலகப்புகழ்பெற்ற 'மேடம் டுஸ்ஸாட்' மெழுகு அருங்காட்சியகத்தில் இந்திய நட்சத்திரம் அமிதாப்பச்சனின் மெழுகுச்சிலையை வடித்து வைத்திருக்கிறார்கள்.



அசல் அமிதாப் இந்த மெழுகு அமிதாப்பிற்கு அருகில் நின்றால் யார் அசல் என்று கண்டறிவது மிகவும் கடினம். அவ்வளவு தத்ரூபமாக வடிவமைக்கப் பட்டிருக்கிறது. படத்தில் கோட் சூட் சகிதம் நிற்கும் அமிதாப் தான் அசல். சால்வை போர்த்தியிருப்பது நகல்.

வெளிநாட்டில் அமிதாப் உருவ மெழுகுச் சிலை உருவாக்குவதைப் பற்றிக் கேள்விப்பட்ட புதுடில்லியில் உள்ள நகைக்கடை ஒன்று ஸ்ரீதேவி, ஷில்பாஷெட்டி ஆகியோரது மெழுகுச் சிலைகளை உருவாக்கி நகைகளை அணிவித்துக் காட்சிக்கு வைத்திருக்கிறது.

அண்மையில் இந்த நகைக்கடைக்குச் சென்ற ஷில்பா ஷெட்டி இந்தச் சிலைகளைப் பார்த்து அசந்து விட்டாராம்.

படத்தில் உண்மையான ஷில்பா யார் என்று குழம்பி விட்டீர்களா? நடுவில் பட்டுச் சேலையுடன் மின்னுபவர் தான் அசல் ஷில்பா.

இந்தித் திரையுலகில் வீசும் மெழுகுக் காற்று தமிழ்த் திரையுலகிலும் விரைவில் வீசக் கூடும்.



## நாளை உனக்காகத்தான்

ஓ தமிழா! என்ன முடங்கி விட்டாய்....?
எழுந்து நட! இன்று மட்டுமல்ல
நாளையும் உனக்காகத்தான்!
★●★
முடமானது உன் கால்கள்
மட்டும் தான்....
உள்ளம் அல்லவே!
★●★
நீ இழந்து விட்டது
சொத்துக்களை மட்டும்தான்;
சிந்தனைகளை அல்லவே!
★●★
ஓ தமிழா!
உன் சிந்தனைப் பறவையை
சிறகடிக்க விடு!
★●★
உள்ளத்து உணர்வுகளுக்கு
வடிவம் கொடு!
★●★
உனக்கு நீயே
விலங்கிட்டுக் கொள்ளாதே!
தடைகளைத் தகர்த்துவிடு!
★●★
எதிர்கால வசந்தத்திற்கு
வரவேற்புப் பாடு!
★●★
அதோ! கிழக்கு வானில்
விடியலின் கீற்றுக்கள்
உறுதியோடு எழுந்துவா;
எதிர்காலம் உனக்காகத்தான்!

விஜயா-யாழ்ப்பாணம்

## புரியாத புதிர்?

உன்னைப்
பார்த்தபின்
என் பேனாவிற்கு
ஒரு பிரசவ
வேதனை!
காரணம்
புரியவில்லை;
ஒன்றுமட்டும்
புரிகிறது.
***
ஒன்றை
இழந்துதான்
வேறொன்றைப்
பெற வேண்டுமென்று,
எதை
இழந்தேன்
எதைப் பெற்றேன்
புரியாத புதிர்....!

சபாரெத்தினம்
கமலினி-
திருக்கோவில்.

## கொழும்பு போய்ப் பார்...!

சனக் கூட்டம்
அலைமோதிப் புரளும்...
வாகனங்கள்
நிரம்பி வழியும்.....
வியாபாரம்
மும்முரமாய் நடக்கும்..... நீ
கொழும்பு போய்ப் பார்!
***
அரச படைகள்
அவசரமாய் அலையும்....
ஆங்காங்கே
குண்டுவெடிக்கும்....
பிணங்கள் வேறு
தலை தெறித்துக் கிடக்கும்..... நீ
கொழும்பு போய்ப் பார்!
***
பஸ் பயணிகளுக்கோ
இதயம் படபடக்கும்......
அப்பாவித் தமிழனுக்கோ
குடல் நடுங்கும்...
'ஐடென்ரி' ஒன்றே அவனுக்கு
ஆண்டவனாய்த் தெரியும்.... தம்பி நீ
கொழும்பு போய்ப் பார்!
***
திருடர் கூட்டம்
சுற்றித் திரியும்....
கயவர் கூட்டம்
கொள்ளையடிக்கும்....
விபசாரம் ஒருபக்கம்
விளம்பரம் போல் நடக்கும்... நீ
கொழும்பு போய்ப் பார்!
***
காளையர் கூட்டம்
சைட் அடிக்கும்... ஆனால்,
காடையர் கூட்டம்
பெண்கள் சைட்டில் இடிக்கும்....
யாசகக் கூட்டம் வந்து
பிச்சை எடுக்கும்..... நீ
கொழும்பு போய்ப் பார்!
***
அத்தனையும் நடக்கும்.....
போனால் உனக்கே
புரியும்!!

வாழைச்சேனை-ஷல்மாஜுல் ஹரீஸ்.

## நில் கவனி முன்னேறு

நம்முடைய வாழ்க்கையில் எதுவுமே முடியாது என்பது இல்லை. திறமை, ஆற்றல், அனுபவம் ஆகியவை எல்லாம் நம்மிடம் இருக்கின்ற போது எப்படி முடியாமல் போகும்? ஒவ்வொரு செயலையும் வெற்றியுடன் முடிக்க முடியும். என்பதினால் தான் 'முடியாது என்பது என் அகராதியில் இல்லை' என்று நெப்போலியன் கூறினார்.

உலக வரலாற்று ஏடுகளிலும் உன்னதமானவர்களின் வாழ்க்கையிலும் முடியாது என்ற சொல்லுக்கே இடம் இல்லாமல் செய்திருப்பதைக் காண முடியும். அன்பால் உலகத்தை வென்றுவிட முடியும் என்று வாழ்ந்த இயேசு உலகத்தை வென்று விட்டாரே!

முடியும் என்ற உறுதியுடன் செயலாற்றினால் நிச்சயம் முடியும் என்பதனைப் படம்

## முடியாது என்பது கிடையாது

பிடித்துக் காட்டுகிறது. இவர்களால் எல்லாம் முடியும் போது நம்மால் மட்டும் எப்படி முடியாமல் போகும்? அன்று மட்டும் அல்ல இன்று கூட நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் முடியும் என்ற வெற்றிப் பாதையில் நடந்து கொண்டிருக்கும் போது, நம்மால் மட்டும் அதில் நடந்து செல்ல முடியாதா, என்ன? கட்டாயம் முடியும். நாம் ஒவ்வொரு காரியத்தையும் முடிக்க முடியும் என்பதினால் தான், மனிதனாகப் பிறந்திருக்கிறோம். இதனால் தான் அலெக்சாண்டர் உலகத்தையே ஒரு நாடாக்க முடியும் என்று போருக்குப் புறப்பட்டார்.

முடியாது என்ற வார்த்தையை விரட்டி அடித்தபடியினால் தான் வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் மாவீரர்கள். அதில் ஒருவர் நெப்போலியன். அவரும் நம்மைப் போல மனிதர் தானே!

முடியும் என்பது தான் வாழ்க்கையின் அஸ்திவாரம். எந்தக் கட்டடத்தையும் அஸ்திவாரம் இல்லாமல் கட்ட முடியாது. மனிதரே உயிரினங்களில் சிறந்தவர். அந்தச் சிறப்பை நிரூபிப்பது முடியும் என்ற திறன் தான்.

அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே நாம் பிறவிப் பயனை அடைவதற்கு திறவுகோல் என்கிறார் அரிஸ்டாட்டில். முடியும் என்ற சொல் ஆண்டவனின் ஆணை. அந்த ஆணைக்கு உட் பட்டு செயலாற்றினால் நிச்சயம் நாம் வெற்றி பெற முடியும்.

நிச்சயம் நம்மிடம் ஆற்றல் இருக்கிறது. அதனை சரியானபடி பயன்படுத்தினால், எங்கும் எதிலும் எப்பொழுதும் முடியும் என்ற வெற்றி வாழ்க்கை வாழ முடியும்.

முடியாது என்பது நமக்கு அல்ல. இறந்து போனவர்களுக்காக கூறப்பட்ட வார்த்தை அது. நாம் உயிருடன் உன்னதமாக உலாவிக் கொண்டிருக்கும் போது முடியாது என்று எப்படி கூறலாம்?

நிச்சயமாக நாம் கூறக் கூடாது. நம்மால் நன்றாக பேசவும் படிக்கவும், எழுதவும் சாப்பிடவும் சிந்திக்கவும் செயலாற்றவும் முடியும். உலகமே முடியும் என்ற சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் பொழுது, நாம் அதில் ஒரு விட்டமாக இருந்து வெற்றியுடன் வாழ இயலும். வளம் பெற முடியும்.

நம்மாலும் நன்றாக வாழ முடியும் என்ற உறுதிதான் உயர்வைத்தரும். இது சாதாரண காரியம் போல தோன்றினாலும், அதனுள் அடங்கியுள்ள அர்த்தங்கள் ஆயிரம் அது எப்படி பரந்து விரிந்து மலரும் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

மிகவும் சிறிய விதை பெரிய ஆலமரமாக வளர்ந்து விழுதுகளை விட்டு அகன்ற தோப்பாகவே உருவாகி விடுவதைப் போல, முடியும் என்ற உறுதியை விதைத்து விட்டால் அதுவே பெரிய வெற்றிகரமான வாழ்க்கை என்ற தோப்பாக ஆல விருட்சமாக வளர்ந்து பலருக்கும் பயன்படும் தன்மையில் அமையும்.

நாம் மற்றவர்களைவிட எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. நம் வயதில் உள்ளவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களைவிட வசதியில் அறிவில் மேலான நிலையில் தான் இருக்கிறோம்.

இதில் சந்தேகம் இருக்காது. இந்த உறுதிதான் நம்மை நன்றாக வாழும்படி செய்யும். ஜன்னலின் வழியே வருங் காலத்தை மகிழ்ச்சி நிரம்பிய கண்களுடன் பார்க்க முடியும்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். ஈஸ்வரன்
வயது: 21
முகவரி: பாரதி கிராமம்,
ஐயங்கேணி கொலனி,
செங்கலடி.
பொழுது போக்கு:
வானொலி.



பெயர்: எஸ். தீபா
வயது: 17
முகவரி:
மீளக்குடியேற்றத் திட்டம்,
சிதம்பரபுரம், வவுனியா.
பொழுது போக்கு:
ரீ.வி., வானொலி.

## இந்தவாரம் உங்கள் பலன்

21.01.2001 முதல் 27.01.2001வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
தொழில்முயற்சிகள் ஊக்கமுடன் நிறைவேறும். திருமணப் பேச்சுக்கள் சாதகமாக அமையும். நோய் துன்பங்களால் செலவுகள் அதிகரிக்கும். எனினும் பண வரவும் சுமாராக இருக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 09
அதிஷ்ட திகதி : 25, 26.

**இடபம்:**
கடந்த காலங்களில் நிலவிய பிணக்கு நீங்கும். உறவினர் வருகை குடும்பத்தில் மகிழ்ச்சியைத் தரும். தூர இடத்து தகவல்கள் திருப்தி அளிக்கும். ஆலய தரிசனம் பெரியோர் ஆசிர்வாதம் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : செம்மஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதி : 22, 24.

**மிதுனம் :**
மனதில் தடுமாற்றம் ஏற்படும் உறவினரின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வேண்டி வரும். கடன் பழு சிக்கலைத் தரும். தொழில் சுமாராக நடக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதி : 23, 25.

**கடகம் :**
நெருக்கடிகள் நீங்கி நிம்மதி ஏற்படும். பண வரவு சுமாராக இருக்கும். உறவினரால் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் வயோதிபர் நிலை கவலை தரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 05.
அதிஷ்ட திகதி : 21, 22.

**சிம்மம் :**
சிலருக்கு வெளிநாட்டுப்பயண வாய்ப்புகள் கிட்டும். பல நாட்கள் வாட்டிய துன்பம் அகலும். பணம் அல்லது, பொருள் நட்டம் ஏற்பட இடம் உண்டு. வார இறுதியில் உற்சாகம் பிறக்கும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 05.
அதிஷ்ட திகதி: 23, 24.

**கன்னி :**
உடல் உபாதைகள் நீங்கும். பொருள் பண்டம் அதிகரிக்கும். நீர் நிலைகளால் அபாயம் ஏற்படக்கூடும். வாகனங்கள் ஓட்டிச்செல்வதைக் கூடுதலாகத் தவிர்க்கவும். குடும்பத்தில் அமைதி குறையலாம். உத்தர நட்சத்திர பெண்கள் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், சனி
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 06
அதிஷ்ட திகதி: 22, 26.

**துலாம்:**
உடல் நிலை பாதிப்படையும். புதிய சினேகிதம் ஏற்படும். பணவிரயம் அதிகரிக்கும். எதிர்பாராத வகையில் பணம் வந்து சேரும். சகோதரர்கள் உதவி புரிவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம்: இளம் பச்சை; எண்: 07
அதிஷ்ட திகதி: 23, 24.

**விருட்சிகம்:**
துன்பநிலை நீங்கும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். பெண்களுக்கு திருமணம் நிச்சயிக்கப்படும். பிள்ளைகளின் போக்கு கவலையளிக்கும். கேட்டை நட்சத்திரக்காரர்கட்கு அதிஷ்டம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 07
அதிஷ்ட திகதி: 25, 27.

**தனுசு:**
பொதுவாக நன்மையான காலம். வெளிவட்ட உதவிகள் கிடைக்கப் பெறும். பயண ஒழுங்குகள் கைகூடும். உடல் உபாதைகள் பாதிப்புக்கொடுக்கும். தொழில் மந்தம், இடம் மாற்றத்துக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 06
அதிஷ்ட திகதி: 22, 25.

**மகரம்:**
குடும்பச் சச்சரவுகள் கவலைதரும். புதிய தொழில் வாய்ப்புகள் எதிர்பார்த்தபடி அமையாது. இருப்பினும் உற்சாகமாக செயற்படுவீர்கள். வெளி இடத்து உதவி ஒத்தாசைகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளம் மஞ்சள்; எண்: 07
அதிஷ்ட திகதி: 24, 25.

**கும்பம்:**
பிள்ளைகளின் கல்வி நிலைப்பாடுகள் கவலை தரும். தொழில் நிலையில் ஏமாற்றம் கிட்டும். குடும்பத்தில் நோய் துன்பங்கள் தலையெடுக்கும். வார இறுதியில் நிலமை மாற்றமடையும். சதய நட்சத்திரப் பெண்களுக்கு நன்மை உண்டு.
அதிஷ்ட நாட்கள்: சனி, வெள்ளி
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 05
அதிஷ்ட திகதி: 22, 23.

**மீனம்:**
முயற்சிகள் பலிதமாகும். ஆலய தரிசனம், பெரியவர்களின் ஆசிர்வாதம் கிட்டும். தூரத்து உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். உத்தரட்டாதிப் பெண்கள் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி
அதிஷ்ட நிறம் : மரூண்; எண்: 02
அதிஷ்ட திகதி : 26, 25.

## லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

# கருவுற்ற பெண்களை அதிகம் கடிக்கும் நுளம்பு



கருவுற்றுள்ள, பெண்களின் உடலில் ஏற்படும் பலவிதமான மாற்றங்களால் நுளம்புகள், அவர்களைத் தேடி வந்து கடிக்கும் வாய்ப்புகள் உள்ளன என்று காம்பியா நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வொன்று தெரிவிக்கிறது.

இதன் காரணமாகக் கருவுற்ற பெண்களுக்கு மலேரியா போன்ற நுளம்புக்கடி தொடர்பான நோய்கள் வரும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

கருவுற்ற பெண்களுக்கு ஒட்சிசன் தேவை அதிகமாக இருக்கும். அதனால் இவர்கள் எப்போதும் சுவாசிப்பதை விட வேகமாக அதிக அளவில் சுவாசிப்பார்கள்.

இவர்கள் வெளியிடும் மூச்சுக்காற்றில் கலந்துள்ள சில இரசாயனங்கள் நுளம்புகளைக் கவர்ந்திழுக்கும்.

மேலும் கருவுற்ற பெண்களின் உடல் வெப்பம் அதிகரிக்கும். இதனால் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்காகத் தோலின் மேற்பரப்பு வரை இரத்தம் பாயும். இதை நுளம்புகள் தங்களது மோப்ப சக்தி மூலமாக உணர்ந்து, கருவுற்ற பெண்களை இலேசாகக் கடித்தாலே இரத்தம் வருமென்று அறிந்து, அதிக அளவில் கருவுற்ற பெண்களைக் கடிக்கின்றன.

இரவு நேரங்களில் நுளம்புக்கடிக்குப் பாதுகாப்பாக நுளம்பு வலை கட்டித் தூங்குவது வழக்கம். கருவுற்ற பெண்கள் இரவு நேரங்களில் அடிக்கடி இயற்கை உந்துதலுக்காக நுளம்பு வலைப் பாதுகாப்பை விடுத்து பாத்ரூமுக்குச் செல்வார்கள். அந்தச் சமயத்தில் தான் அதிகம் நுளம்புக்கடிக்கு ஆளாகின்றனர். இப்படி ஆபிரிக்காவில் கருவுற்ற காலங்களில் மலேரியாக் காய்ச்சலுக்குள்ளாகும் பெண்கள் அதிகம்.

இதனால் குறைப்பிரசவம், குழந்தை இறந்தே பிறப்பது, எடை குறைவான குழந்தை போன்ற பாதகங்கள் ஏற்படுகின்றன.

நுளம்புகளை அடியோடு அழிக்க, சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாக வைத்திருந்தல் வேண்டும்.

வீட்டைச் சுற்றிலும் குப்பை, கழிவுநீர் போன்றவை தேங்க விடக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது.

# இட்லியில் இத்தனை வகைகளா?



உங்கள் வீட்டில் தினமும் இட்லி சாப்பிட்டுச் சலித்துப் போய் விட்டதா? கவலையை விடுங்கள்.

இட்லி மாவை வைத்து விதவிதமான ருசிகளில் வெவ்வேறு ஐட்டங்கள் செய்யலாம். உங்களுக்காக இதோ:

- இட்லி மாவு கொஞ்சம் புளித்துப் போய் விட்டது என்றால் அதில் சிறிது கடலை மாவையும் சமையல் சோடாவையும் கலந்து பஜ்ஜி போட... சுவை பிரமாதமாக இருக்கும்.
- புளித்த இட்லி மாவில் வெங்காயம், காய்கறித்துருவல், உப்பு, காரம் கலந்து பலகாரமாக வார்த்தால்... ருசி அபாரமாக இருக்கும்.
- இட்லியைக் குறுக்கு வாட்டில் வெட்டிக் கொள்ளுங்கள். அதில் தக்காளிச் சட்னி அல்லது புதினா சட்னியைத் தடவி மூடினால் சூப்பர் இட்லி சாண்ட்விச் தயார்.
- இட்லிகளை ஃபிரிட்ஜில் வைத்து விட்டு எடுத்து உதிர்த்தால் பொல பொலவென உதிரும். இதில் உங்களுக்குப் பிடித்தமான காய்கறிகளை வதக்கி உப்புமா செய்து, குழந்தைகளுக்குக் கொடுத்தால் விரும்பிச் சாப்பிடுவார்கள்.
- இட்லியை சிவக்கப் பொரித்து எடுத்து 'ஃபிறைட் இட்லி' செய்யலாம். இது தென்னிய விருந்துகளில் இடம்பெறும் சுவையான சிற்றுண்டி ஆகும்.
- இட்லியை தேங்காய், பச்சைமிளகாய், சீரகம், உப்புச் சேர்த்து அரைத்த தயிரில் ஊறப்போட்டு பிறகு எடுத்துச் சாப்பிட்டால் சுவையோ சுவை.
- இட்லித்தட்டில் இலேசாக இட்லிமாவை ஊற்றி, அதன் மீது உருளைக்கிழங்கு மசாலாவை வைக்க வேண்டும். பின் அதன் மேல் சிறிது மாவால் மூடி வேக வைத்தால் 'ஸ்டப்ட் இட்லி' தயார்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IY

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 27-01-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா — 71

மார்சியாவும், மோனிக்காவும் மிகவும் பயந்து போயிருந்தமையினால், 'மருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதுபோல் தங்களைச் சுற்றி காணப்படும் அனைவரும் கென்னத் ஸ்டாரின் விசாரணைக்குழு அதிகாரிகளினால் தங்களை நோட்டம் பார்க்க அனுப்பப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும் என்று கருதலாயினர்.

மோனிக்காவின் வீட்டிலிருந்த தொலைபேசிகள் கூட ஒட்டுக் கேட்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதியவர்கள், பொழுது புலர்வதற்கு முன்னதாகவே 'போர் சீசன்ஸ்' ஹோட்டலுக்குச் சென்று அங்கிருந்து தொலைபேசி அழைப்புகளை எடுக்க முயற்சித்தனர். அந்த ஹோட்டலுக்கு வருவோர் போவோர் அனைவரையும் சந்தேகக் கண் கொண்டே பார்த்தனர். இதனால் கின்ஸ் பேர்க்குடனோ பெட்டி கியூரியுடனோ தொலைபேசியில் தொடர்பு கொள்ளாமல் ஹோட்டலின் உபசாரப் பிரிவில் வெறுமனே அமர்ந்திருந்தனர்.

மோனிக்காவின் தாயார் மார்சியா தன் மகளுக்கு எத்தகைய தீங்கு ஏற்படப் போகிறதோ என்பதே பெரிய கவலையாக இருந்தது, எத்தகைய சிக்கலிலும் மாட்டிக் கொள்ளாமல் அவளை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்று சதா சிந்தனை வயப்பட்டவளாய் இருந்தாள்.

ஜனாதிபதி பில் கிளின்டன், அவருடைய மனைவி ஹிலரி கிளின்டன் ஆகிய இருவருக்கும் எதிராக லிட்டில் ரொக்கிலுள்ள 'வைட் வோட்டர், கைமாற்றம் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரித்து, அவர்களைக் குற்றவாளிகளாகக்காண கென்னத் ஸ்டார் துடித்துக் கொண்டிருந்தார்.

இந்த வழக்கில் கிளின்டன் தம்பதியினருக்கெதிராக சாட்சி சொல்வதற்காக சுஸான் மெக்டவுகல் என்ற மாதை கென்னத் ஸ்டாரின் விசாரணைக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த வழக்கில் ஜுரிகளாக அமர்த்தப்பட்டவர்கள் முன்னிலையில் கிளின்டன் தம்பதியினருக்கெதிராக சாட்சி சொல்ல முடியாதென சுஸான் சாட்சி சொல்ல மறுத்துவிட்டாள். இதற்காக விசாரணையாளர்கள் சுஸானையே குற்றவாளிக் கூண்டில் ஏற்றி விட்டனர்.

'நீதி விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தனக்குத் தெரிந்த உண்மைகளை ஜுரிகள் முன்னிலையில் கூறாமல் நீதி விசாரணைக்கு முட்டுக்கட்டை செய்தாள்' என்று குற்றம் சாட்டி சுஸானுக்கு 18 மாதங்கள் தனியாக சிறையில் இருக்க வேண்டிய தண்டனையைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

அமெரிக்காவையே குலுக்கிய இந்தச் சம்பவம் அடிக்கடி மார்சியாவின் உள்ளத்தில் புயலாக வீசிக் கொண்டிருந்தது.

கென்னத் ஸ்டாரின் குழுவினர், மோனிக்காவை விசாரிக்கும் சந்தர்ப்பங்களில் அவளுக்கு 27 வருடங்கள் சிறையில் இருக்க வேண்டிய தண்டனை வழங்கப்படலாம் என்று எச்சரித்த வண்ணமிருந்தனர். தங்களுடன் ஒத்துழைத்தால் இத்தண்டனை குறைக்கப்பட்டு விடும் என்றும் கூறிவந்தனர். 'என் மகள் மோனிக்கா இத்தனை கடுமையான தண்டனையைப் பெறுவதற்கு, எத்தகைய குற்றத்தைச் செய்திருக்கிறாள்?' என்று மார்சியா எண்ணியெண்ணி துயரப்பட்டுக் கொண்டிருந்தாள்.

மோனிக்காவின் சிநேகிதியான கெதரின் ஆல்டே டேவிஸ் அடிக்கடி மோனிக்காவிடம் "சுஸானுடைய பரிதாபகரமான நிலையை நீ ஏற்றுக் கொள்ள முயற்சி செய்து விடாதே!" என்று கூறி எச்சரித்திருக்கிறாள். சுஸான் மெக்டவுகல் தனக்கு தெரிந்த உண்மைகளை நீதிமன்றத்தில் கூற மறுத்தாள் என்று வெறுமனே விசாரணை அதிகாரிகள் கூறிவிட்டு அவளுக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தார்களே தவிர, முறைப்படி நீதிமன்ற விசாரணைகள் எதுவும் நடத்தப்படாமலே தண்டனை வழங்கப்பட்டது. இதனால் நாட்டுமக்கள் பலதரப்பட்ட வாக்கு வாதங்களிலும் ஈடுபட்டனர்.

'லிண்டா ட்ரிப்புடன் அடிக்கடி தொலைபேசித் தொடர்பு வைத்திருந்தாள் தனது மகள். இதன் பயனாகவே அவளுடைய தூண்டுதலினால்தான் தனது மகளுக்கு ஏதோ நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அது ஜனாதிபதி கிளின்டனை ஏதோ ஒரு வகையான சிக்கலில் மாட்டி விடத்தக்கதாக இருக்கக் கூடும், என்று கருதிய மார்சியா, இது தொடர்பாகவே லிண்டா ட்ரிப் எனது மகளுக்கு சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய நிலையினை உண்டாக்கியிருக்கலாம், என்று கருதினாள்.

மோனிக்கா மட்டுமல்லாமல், தன்னையும் சேர்த்து சிறையில் பூட்டிவிடக் கூடும் என்ற அச்சமும் மார்சியாவிடம் தோன்றியது.

இப்படியான ஒரு சம்பவம் நடைபெற்றால் தன்னுடைய குடும்ப மானம் அத்தனையும் கப்பலேறிவிடும் என்று அவள் மனம் பெரிதும் துயரடைந்திருந்தது.

தன் மகளும் தானும் நிச்சயமாக சிறைக்கு அனுப்பிவைக்கப்படுவது திண்ணம் என்று மார்சியா உறுதியாக நம்பினாள். அவ்வாறான நிலை ஏற்படுமானால், தனது மகன் மைக்கேல் திருமணம் முடித்து, அவனுடைய குழந்தைகள் தன்னையும் மோனிக்காவையும் சிறையில் வந்து பார்ப்பார்கள் என்று கற்பனை செய்து கலங்கினாள்.

னால் தானே தன்குடும்பத்தாருக்கு இத்தனை தொல்லையும் ஏற்படுகிறது, என்று கருதியவளாக அவளும் அழத்தொடங்கினாள்.

மார்சியாவும் மோனிக்காவும் வெளியே எங்கும் செல்லாமல் அதே வீட்டில் இரவு-பகலாக அடைபட்டுகிடந்தனர். தனது சகோதரி தெப்ராவுடன் தொடர்பு கொண்டு, வாஷிங்டனில் இருக்காமல் வேறு எங்காவது சென்று சிலநாட்கள் தங்கியிருக்கும்படி மார்சியா கேட்டுக் கொண்டாள். தங்களுடைய நெருங்கிய உறவினர்கள், சினேகிதர்கள் எல்லோரையும் கென்னத் ஸ்டாரின் விசாரணை அதிகாரிகள் தேடிப்பிடித்து, வேண்டுமென்றே குற்றவாளிகளாக்குவதற்கு முயற்சிப்பார்கள் என்று பயந்துதான் இவ்வாறு கோரினாள்.

மார்சியா தன்னுடைய அடுத்த கணவராக வரவிருந்த பீட்டர் ஸ்ட்ராஸ் உடன் தொடர்பு கொண்டு மகள் மோனிக்கா ஒரு விபத்துக்குள்ளாகியிருப்பதாகவும் சில நாட்கள் அவளுடன் தங்கியிருக்க வேண்டியதாகவும் பொய் கூறினாள். அவர் தன் கண்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்காக மருந்துவமனையில் அப்போதிருந்தார்.

## தொலைக்காட்சியில் 'அந்த' உள்ளாடை...?



மைக்கேலுக்குக் கூட இதுவரை மார்சியா மோனிக்காவின் பிரச்சனை பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. மைக்கேல் பிற்ஸ்பேர்க் நகரிலுள்ள பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தான்.

1998 ஜனவரி 21ம் திகதி அளவில் கிளின்ரன்-மோனிக்கா பாலியலுறவு பற்றிய கதைகள் ஊடகங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மெல்ல மெல்ல கசியத் தொடங்கின. பிற்ஸ்பேர்கிலிருந்த மைக்கேல் மோனிக்காவின் வதிவிடமான வோட்டர் கேட் இல்லத்துக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டான். பெரும்பாலும் அவர்களுடைய மிக நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே தெரிந்திருந்த அந்தத் தொலைபேசி கிணுகிணுத்ததும், மோனிக்காவை அதற்கு பதிலளிக்க விடாமல் மார்சியா தானாகவே எடுத்தாள். அடுத்த பக்க குரலைக் கேட்டதும், அவளை வேதனை ஆட்கொண்டது. மிகவும் கவனமாக பதிலளித்தாள்.

தனது சகோதரி மோனிக்காவைப் பற்றி 'இண்டர்நெட்'டில் ஏதோ சில தகவல்கள் வருவதாகவும் விவரம் என்ன என்றும் மைக்கேல் கேட்டான். "அது வெறும் வதந்தி ஒன்றை விஷமிகள் பரப்பியுள்ளனர். அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம் மகனே" என்று மழுப்பிவிட்டாள்.

உரையாடலை முடித்துக்கொண்டு சிறு பிள்ளை போல் தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள். தன் தாய் அழுவதைப் பார்த்து மோனிக்கா தடுமாறிப் போனாள். தன்

இவர்கள் இருவருடைய இத்தகைய தாங்களாகவே கடைப்பிடித்து வந்த சிறைவாசம் நாட்கணக்கில் போய்க் கொண்டிருந்தது. வீட்டில் உணவு தயாரிக்கும்போது அன்றாடம் சேரும் அழுக்குகளைக் கூட அப்புறப்படுத்தாமல் பொதிகளாகக் கட்டி சமயலறையில் சேர்த்து வைத்திருந்தனர்.

தொலைக்காட்சிகளிலும் மோனிக்கா விவகாரம் இடம் பிடிக்கத் தொடங்கியது. அன்றொருநாள் இருவரும் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த போது இடம் பெற்ற காட்சியைப் பார்த்ததும் இருவரும் துணுக்குற்றனர். அக்காட்சியில் முக்கியமாக இடம்பிடித்திருந்தது மோனிக்காவின் உள்ளாடை ஒன்று. சின்னத்திரையில் காட்டப்பட்டதும் மோனிக்கா விம்மி விம்மி அழுதாள்.

கிளின்ரனுடைய ஒவல் அலுவலகத்தின் பின்புறமுள்ள, அவருடைய ஒய்வறையில் மோனிக்காவுடன் பாலியலுறவில் ஈடுபட்டிருந்த போது மோனிக்கா அணிந்திருந்த ஆடை அதுவாகும். இதனைத் தொலைக் காட்சியில் கண்ணுற்றதும், மோனிக்கா கிட்டத்தட்ட மயக்கமுற்ற நிலையை எய்தினாள்.

லிண்டா ட்ரிப் முன்னர் அடிக்கடி மோனிக்காவின் இல்லத்துக்கு வந்து தங்கியிருப்பாள். அவ்வாறு ஒரு தடவை வந்திருந்த போது, இந்த உள்ளாடையை பெருமையுடன் லிண்டாவுக்கு மோனிக்கா காட்டியிருந்தாள். அதனைச் சலவை செய்யாமல் தான் ஏனைய ஆடைகளுடன் தனது அறையில் பத்திரமாக அடுக்கி வைத்திருந்தாள்.

அந்த ஆடை எப்படி இன்று திரையில் இடம் பிடித்தது?

*(வருவாள்)*

### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
### தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — **எஸ். நாகம்மாள்,** ஒலிரூட், தலவாக்கலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# சரியான மூக்குடைப்பு



டாக்டர் ராதாகிருஷ்ணன்! இந்தியாவின் முதல் ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திர பிரசாத்திற்கு அடுத்து இந்தியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்.

மாமேதை.

இந்தியர்களைக் கிண்டல் செய்யும் மேல் நாட்டவரைக் குறிப்பாக ஐரோப்பியரை, தனது புத்தி சாதுரியத்தால் மூக்கை உடைப்பதில் அவரை மிஞ்ச யாராலும் முடியாது.

ஒரு சமயம் டாக்டர் ராதாகிருஷ்ணன் அரசு முறைப் பயணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு (இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாடுகளுக்கு) சென்றிருந்தார்.

அப்போது ஆங்கிலேயர் கொடுத்த வரவேற்புநிகழ்ச்சி ஒன்றில் அவர் கலந்து கொண்டார்.

அது வரவேற்பு நிகழ்ச்சி என்றாலும் இந்தியரான டாக்டர் ராதாகிருஷ்ணனை மட்டம் தட்டிப் பேச வேண்டும் என்பதும் அந்த வெள்ளையரது குறிக்கோளாக இருந்தது.

அவர் பேசும் பொழுது. "இறைவனுக்கு மிகவும் பிடித்தமானவர்கள், ஐரோப்பியரான நாம் தான். அதனால்தான் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களையும் விட, ஐரோப்பியர்களாகிய நம்மை வெள்ளை நிறத்தில் படைத்திருக்கிறான்!" என்று ராதாகிருஷ்ணனை ஓரக்கண்ணால் பார்த்தபடி குறிப்பிட்டார்.

அவரது தலைக்கனம் மிகுந்த பேச்சைக் கவனித்த டாக்டர் ராதாகிருஷ்ணன், அந்த வெள்ளையரின் மூக்கை உடைத்து, மற்ற நிறத்தவர் மேல் அவர் கொண்டிருப்பது மிகவும் தவறான அபிப்பிராயம் என்பதை உணர்த்த தருணம் பார்த்துக் காத்திருந்தார்.

அந்தத் தருணம் வந்தது.

டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசும்போது, "அன்பார்ந்த சகோதர, சகோதரி களே! சற்று முன்பு பேசிய அன்புச் சகோதரர், இறைவனின் படைப்பில் வெள்ளை நிறத்தின் மேன்மையை பற்றிக் குறிப்பிட்டார். இந்த நிறப் பாகுபாட்டைப் பற்றி நான் ஒரு விஷயத்தை அவருக்கு சொல்ல விரும்புகிறேன். அவர் மட்டுமல்ல, நீங்களும் சற்று கவனமாக கேளுங்கள்.

"இறைவன் ஒரு நாள் ரொட்டி சுட்டுச் சாப்பிட விரும்பினார். அதற்கு முன்பு அவருக்கு ரொட்டி சுட்டுப் பழக்கமில்லை. ஆனாலும், ஓரளவு அதை எப்படிச் செய்வது என்று அவருக்குத் தெரியும். நீர் ஊற்றி மாவை பிசைந்தார். பிறகு வட்டமாக அதைத் தட்டி, அடுப்பின் மேலே வைக்கப் பட்டிருந்த கல்லின் மேலே போட்டார். அது சரியாக வேகக்கூட இல்லை. அதற்குள் அது வெந்திருக்கும் என்று நினைத்து அவர் எடுத்துச் சர்பபிடத் தொடங்கினார்.


"அப்பொழுதுதான் அது சரியாக வேகாமல் வெள்ளை நிறத்துடனும், பசை மாவின் ருசியுடனும் இருப்பதைக் கண்டார். ரெட்டி மேலும் வெந்து வெள்ளை நிறம் மாறிய பிறகுதான் அதை அடுப்புக்கல்லில் இருந்து எடுக்க வேண்டும் என்ற விஷயம் அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது. ஆகவே இரண்டாவது ரொட்டியை சற்று நேரம் கல்லிலேயே போட்டு விட்டான். ஒருவிதமான கருக்கல் வாசனை வந்த பிறகே ரொட்டியை எடுத்தார். ரொட்டி கறுப்பு நிறத்தில் தீய்ந்து போய் இருந்தது. ரொட்டி இப்போதும் ருசிக்கவில்லை.

."அதன் பிறகுதான் கடவுளுக்கு ஒரு விஷயம் புரிந்தது. ரொட்டியை உடனே அடுப்பிலிருந்து எடுக்கக் கூடாது. அதிக நேரம் அடுப்பிலேயே போட்டிருக்கவும் கூடாது. இரண்டுக்கும் இடைப்பட்ட நேரத்தில் எடுத்தால்தான் ரொட்டி, சாப்பிடும் பக்குவ நிலைக்கு வந்திருக்கும் என்ற உண்மை புரிந்தது.


"இதன் அடிப்படையிலதான் மனிதனுக்கு நிறங்களைக் கொடுத்தார் இறைவன். வேகாத ரொட்டி போன்ற அவசரப் படைப்புதான் வெள்ளை நிறத்தைக் கொண்ட ஐரோப்பியர். மிகவும் நிதாமாக யோசித்தபின் உருவாக்கபப்பட்டவர்கள் தான், கறுப்பு இனத்தவரான ஆபிரிக்கர், இந்த இரண்டிற்கும் இடைப்பட்ட நிதானமான நேரத்தில் படைக்கப்பட்டவர்கள்தான் இந்தியராகிய நாங்கள்," என்று கூறி முடித்தார்.

அந்த அழகிய உதாரணத்தை கேட்ட ஐரோப்பியர்களே ரசித்துக் கைதட்டினர்.


பாப்பா முரசு சிறுகதை



பழங்களைத் தின்ன மரத்தில் ஏறிய அணில், பழங்களைத் தின்று விட்டுக் கீழே இறங்க வழி தெரியாமல் தடுமாறுகிறது. நீங்கள் அதற்கு வழிகாட்டுங்கள் பார்க்கலாம்.



# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **27.01.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **378**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 376

பரிசுக்குரியவர்:
ச.ஜனர்த்தனி,
இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| க. டினோஷன், இக்கோல் ஆங்கிலப் பாடசாலை, திகன. | பே. அஜித்ரா, வின்சன் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. |
| வே. யோகபவானி, தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. | ஜெ. ஷங்கா, ஹைலெவல் ஆங்கில பாடசாலை, ஹட்டன். |
| தா. திலீபன், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. | நா. ஜனனி, 42வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| ச.சந்துஜன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | எம். தர்ஷனி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| சரவணமுத்து மணிமேகலை, அயிஸ்குலேபி தமிழ் வித்.,பண்டாரவளை. | எஸ். வசந்தகுமார், புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. |

# வித விதமான கூடுகள்

→ கழுகு இனத்தைச் சேர்ந்த ராஜாளிக்கும் பருந்துக்கும் சரிவரக் கூடு கட்டத் தெரியாது. அதனால் இவை மலைப் பொந்துகள், இடுக்குகள், போன்ற இடங்களைக் கூடு போல பயன்படுத்தி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.



← கடற்பறவையான சீகல் மற்றும் பிளெமிங்கோ போன்ற பறவைகள் கரையோரப் பகுதிகளில் குழிவான இடங்களை எற்படுத்தி, அதன் மேல் சகதியை மேலாக அள்ளிப் போட்டு விடும். குஞ்சுகள் பொரித்தவுடன் அவை நேராக மரங்களுக்குச் சென்று கூடு கட்டிக் கொள்கின்றன. சீகல் பறவை மலைப் பாங்கான பகுதிகளில் சிறிய கூடுகளை அமைத்துக் கொள்ளும் இவற்றுக்கு தாய்ப்பறவைகள் கூடு கட்டிக் கொடுப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



→ ஆபிரிக்கக் காடுகளில் அதிகம் காணப்படும் கொரில்லா குரங்குகளும் இந்தோனேஷியா நாட்டின் காடுகளில் உள்ள சிம்பன்சி குரங்குகளும், சில மனிதக் குரங்குகளும் சமதளக் கூடுகளை மரங்களில் கட்டிக் கொள்கின்றன.



# ஒருவரித் தகவல்கள்

- ★ அவுஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு கிரிக்கெட்
- ★ கிரிக்கெட் மட்டை 'ஒக்' மரத்திலிருந்து தயாரிக்கப்படும்.
- ★ தண்ணீரை விட 21 மடங்கு கனமான உலோகம் பிளாட்டினம் ஆகும்.
- ★ 'பரமார்த்த குரு' என்ற கதையை எழுதியவர் வீரமாமுனிவர்.
- ★ பேட்மின்டன் விளையாட்டுக்கு வேறு பெயர் பூனா.
- ★ அனைத்துலக நீதிமன்றம் உள்ள இடம் 'ஹேய்க்'
- ★ தமிழ்த்தாய் வாழ்த்தை எழுதியவர் திரு.சுந்தரம் பிள்ளை.
- ★ பஞ்ச அரவை இயந்திரத்தை கண்டறிந்தவர் விட்னி.
- ★ மழைநீரில் 72% ஆவியாகி மீண்டும் வளிமண்டலத்தை அடைகின்றது.
- ★ உலகின் மிகப் பெரிய வண்ணத்துப்பூச்சி 'குயின் அலெக்ஸாண்ட்ரியா' ஆகும்.

தொகுப்பு: மு.சக்திலேந்திரன்-கொழும்பு-12.



## மர்மத் தொடர்

# ஜனகாவின் மோகம்

08

குணசேகர் கேட்டார்.

"மேடம்! நீங்க சொல்றது எனக்கு புரியலை...."

"நான் இந்த சினிமா உலகத்துல அவ்வளவா பிரபலமாகாத ஒரு ஸ்டேஜில் இருந்தபோது, அதாவது ரெண்டு வருஷத்துக்கு முந்தி என்னை வேண்டா வெறுப்பா கல்யாணம் பண்ணிகிட்டார். எந்த ஒரு நல்ல பழக்கமும் அந்த மனுஷன்கிட்ட கிடையாது. என்னையே பெரிய பெரிய புள்ளிகளுக்கு ராத்திரி நேரங்கள்ல விற்கப் பார்த்தார். நான் அதுக்கு சம்மதிக்காமே போகவே என்னை விட்டு விலகிப் போயிட்டார். அதைப் பத்தி நானும் கவலைப் படலை. ஒரு நல்ல டைரக்டரோட முயற்சியால் சினிமா வாய்ப்புகள் கிடைச்சு இன்னிக்கு ஃபீல்டுல நான் ஓஹோன்னு இருக்கேன். நான் ஒரு நல்ல நிலைமைக்கு வந்ததுமே என் கூட வந்து ஒட்டிக்கப் பார்த்தார். நான் சேர்த்துக்கலை."

"இவர் பேர் என்ன....?"

"நடேஷ்."

"அட்ரஸ்....?"

"எனக்குத் தெரியாது...."

"கடைசியா நடேஷை என்னிக்கு பார்த்தீங்க....?"

"ஒரு மாசத்துக்கு முந்தி ராத்திரி நேரம் கூர்க்காவை எப்படியோ ஏமாத்திட்டு உள்ளே வந்துட்டார். பணம் வேணும்ன்னு கேட்டார். நான் கொடுக்க மாட்டேன்னு சொன்னதும், கண்டபடி சத்தம் போட ஆரம்பிச்சார். நான் உடனே பொலிஸுக்கு ஃபோன் பண்ணிட்டேன். இந்த ஏரியா பீட் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வந்து மிரட்டினப்பதான் வெளியே ஃபோனார். அதுக்கப்புறம் ஒரு தடவை போன் பண்ணினார். நான் பேசாமே ரிஸீவரை வெச்சுட்டேன்."

"உங்க கணவர் நடேஷ் என்ன தொழில் பார்த்துட்டிருந்தார்....?"

"சட்டவிரோதமான தொழில்கள்.. எல்லாமே அவர்க்கு அத்துபடி. கொஞ்சம் தீவிரவாத டைப். கையில் ஒரு கூலிப்படையை வெச்சுக்கிட்டு வேண்டாத ஆட்களோட கையையும் காலையும் வெட்டறதுதான் வேலை.

இதைத்தவிர போதை மருந்து விற்பனையும் உண்டு."

"நடேஷ்க்கு இந்த மெட்ராஸ்ல க்ளோஸ் ஃப்ரண்ட் யாரு....?"

"எனக்குத் தெரியாது. ஆனா பனகல் பார்க்குக்குப் பக்கத்துல 'பாட்ஷா பான் பீடா ஸ்டால்'ன்னு ஒரு கடை இருக்கு. நடேஷை அந்த பீடாக் கடையிலதான் நிறைய தடவை பார்த்திருக்கேன். அங்கே விசாரிச்சா உங்களுக்கு ஏதாவது உபயோகரமான, தகவல் கிடைக்கலாம்."

"தேங்க்யூ மேடம்..." இன்ஸ்பெக்டர் குணசேகர் எழுந்தார். ஜெயகீதா குரலை தழைத்து பேசினாள்.

"இன்ஸ்பெக்டர்! ஒரு சின்ன ரிக்வெஸ்ட்."

"சொல்லுங்க மேடம்..."

"நடேஷும் நானும் கணவன் மனைவின்னு வெளியுலகத்துக்குத் தெரியாது. இனியும் தெரிய வேண்டாம். ஒரு கிரிமினல் பேர்வழி எனக்கு கணவராயிருந்திருக்கார்ங்கிற விஷயம் வெளியே தெரிஞ்சா, அது எனக்கு இப்போ ஃபீல்ட்ல இருக்கிற இமேஜைக் காயப்படுத்தும். ஸோ என் கணவரோட உடலை நான் வாங்கி இறுதி காரியங்களை செய்ய விரும்பலை. உடலை பொலிஸ் தரப்பிலேயே அடக்கம் பண்ணிடுங்க..."

"இதை நீங்க ஒரு ரிப்போர்ட்டா எழுதித் தரணும். ஏன்னா பின்னாடி ஏதாவது பிரச்சனை வந்தா அதை நாங்க ஃபேஸ் பண்ணியாகணும்."

"ரிப்போர்ட் தர்றேன்..."

"நீங்க எழுதி வையுங்க மேடம். எஸ்.ஐ. வந்து வாங்கிக்குவார்."

குணசேகர் நடிகை ஜெயகீதாவிடம் விடைபெற்றுக்கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த ஜீப்புக்கு வந்து ஏறி உட்கார்ந்தார். ட்ரைவரிடம் "பனகல் பார்க்!" என்று சொல்லி விட்டு சீட்டுக்கு சாய-ஜீப் வேகம் எடுத்து இருபது நிமிஷங்களை பயணத்தில் கரைத்துவிட்டு பனகல் பார்க்கிற்கு முன்பாய் போய் நின்றது.

இன்ஸ்பெக்டர் குணசேகர் இறங்கி நின்று சுற்றும் முற்றும் பார்க்க பஸ் ஸ்டாப்புக்கு பக்கத்திலேயே அந்த, பான் பீடா கடை தெரிந்தது. கடையின் முகப்பில் 'பாட்ஷா பான் பீடா ஸ்டால்' போர்டு தொங்க, உள்ளே பனியன் லுங்கியோடு ஓர் இளைஞன் உட்கார்ந்திருந்தான். குணசேகர் அவனை நோக்கிப் போனார். போலீஸ் யூனிஃபார்மை பார்வையில் வாங்கியதும் அவன் தயக்கமாய் எழுந்து நின்று லுங்கியை தழையவிட்டான். தயங்கி மெல்ல விஷ் செய்தான்.

"ஸார்..."

"ஒரு மசாலா பான் போடு..."

பரபரவென்று செயல்பட்டான். கெட்டுப் போகாத நல்ல வெற்றிலையாய் எடுத்து கத்தரிக்கோலால் அதன் ஓரங்களை வெட்டி இலைபரப்பு பூராவும் கலர்சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருந்தபோது, குணசேகர் மெதுவாய் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"நடேஷ் எப்போ உன் கடைக்கு கடைசியாய் வந்தான்...?"

"சுண்ணாம்பு தடவிக்கொண்டிருந்த கை அப்படியே நின்றது. கண்கள் திகைக்க நிமிர்ந்தான்."

"ந.. ந... நடேஷா...?"

"ம்... நடேஷ்தான்..."

"யார்... ஸார்... அது...?"

"நடேஷ் யார்ன்னு நிஜமாவே உனக்குத் தெரியாதா...?"

"தெ... தெரியாது ஸார்..."

"சரி.. கடையை சாத்திட்டு புறப்படு லாக்கப்புக்குப் போய் எல்லாத்தையும் பேசிக்கலாம்."

"ஸ... ஸார்...."

"எப்படி வசதி...! நடேஷைப் பத்தி இங்கேயே சொல்றியா... இல்லே போலீஸ் லாக்கப்புக்கு வந்து சொல்றியா!"

அவன் எச்சில் விழுங்கிவிட்டு மெல்லத் தலையை ஆட்டினான்.

"இங்கேயே சொல்றேன் ஸார்..."

"சொல்லு..."

"நடேஷ் போன வாரம் இங்கே வந்திருந்தான் ஸார்...."

"எதுக்கு வந்தான்...?"

"அவன் என்னோட கஸ்டமர் ஸார். பீடா போடறதுக்காக அடிக்கடி வருவான்..."

"முதல்ல உனக்கு கஸ்டமர். அப்புறம் ஃப்ரண்ட் ஆயிட்டான் அப்படித்தானே...?"

"ஆமா.. ஸார்..." தொண்டைக் குழி வியர்வையில் மின்னியது.

"சரி உம் பேர் என்ன...?"

"பாட்ஷா ஸார்..."

"முழுப் பேர்...?"

"அன்வர் பாட்ஷா ஸார்..."

"அப்பா பேர்..."



"ஜயருல்லா ஸார்..."

"அம்மா பேர்...?"

"ஜமீலா ஸார்..."

"உனக்கு சிஸ்டர்ஸ் ப்ரதர்ஸ் இருக்காங்களா?"

"இல்ல ஸார்..."

"உனக்கு கல்யாணம்?"

"இன்னும் இல்ல ஸார்..."

"யாரையாவது காதலிக்கிறாயா....?"

"இல்ல ஸார்..."

எதற்காக இத்தனை கேள்விகள் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே குணசேகர் கேட்டார்.

"உன் இடதுகை விரல்ல ஒரு மோதிரம் போட்டிருக்கியே அதைக் கொஞ்சம் கழட்டிக் குடு..."

பாட்ஷாவின் முகம் வெளிறியது.

"ஸ...ஸார்..."

"ம்...! காட்டிக் குடு..."

பாட்ஷா தயங்கித் தயங்கி தன் இடது கை விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான். குணசேகர் அதை வாங்கி உயர்த்திப் பிடித்து பார்த்தபடியே சொன்னார்.

"இது லேடீஸ் மட்டுமே அணியக் கூடிய மோதிரம். என்கிற இன்ஷியல் வேற 'M' செய்யப்பட்டிருக்கு. யார் இந்த எம்....?"

பாட்ஷா வியர்த்தான். "ஸா... ஸார்... இது வந்து..."

"பொய் சொல்லிடாதே... உன் வீட்ல இருக்கிற யாருக்குமே 'M' என்கிற எழுத்தில பெயர் ஆரம்பமாகலை... உனக்கு மனைவியும் கிடையாது. காதலியும் கிடையாதுன்னு சொல்லிட்டே... அப்படீன்னா... இந்த மோதிரம் யாரோடது...? 'எம்' என்கிற எழுத்தில் ஆரம்பமாகிற அந்த பெண்ணோட பேர் என்ன...?"

குணசேகர் கேட்ட கேள்வியில் பொறியில் மாட்டிக் கொண்ட எலியைப் போல் தத்தளித்தான் பாட்ஷா.

★★★

ப்ரஸ் ரிப்போர்ட்டர் நிவேதிதாவும் இன்ஸ்பெக்டர் பராத்தகனும் ஹாஸ்பிடலிலிருந்து புறப்பட்டு கல்யாண மண்டபத்தை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்.

நிவேதிதா சொன்னாள். "ஸார்...! இன்ஸ்பெக்டர் கிஷோர் ஒருத்தர்தான் கொலையாளியை நேருக்குநேர் பார்த்திருக்கார். அவர்க்கு இப்போ ப்ரேய்ன் டெமேஜ் ஏற்பட்டு கோமா ஸ்டேஜ்க்கு போய்ட்டார். கல்யாண மாப்பிள்ளை தேவந்திரனை கொலை செய்தது தப்பிச்சுப் போன கைதி இவருதானா இல்லையான்னு தெரிஞ்சுக்க ஒரே ஒரு வழிதான் இருக்கு ஸார்...."

"என்ன வழி...?"

"கனகுக்கும் தேவேந்திரனுக்கும் ஏதாவது முன்பகை இருந்ததான்னு தேவேந்திரன் சம்பந்தப்பட்ட ஃபேமிலி மெம்பர்ஸை விசாரிச்சா விஷயம் வெளியே வந்துடும் ஸார்...."

*மர்மம் தொடரும்....*

கிரைம்சக்கரவர்த்தி

ராஜேஷ்குமார்

---

# இதுவும் ஒரு நடிகையின் கதை

08

ராணி-ஸ்ரீ அப்போது அவள் பெயர் விஜயராணி-யின் உடம்பு தளரத் தொடங்கியது. அதைவிட மனசு.

"இதுக்கே இப்படி கவலைப் பட்டா என்ன அர்த்தம்? இன்னும் எவ்வளவு இருக்கு? சினிமாவுல நடிச்சு முன்னேறணும்னா சும்மாவா? நம்ம வள்ளியப் பாரு.... பெரிய நடிகையா இருக்கா... ஒரு படத்துக்கு இருபது லட்சம் சம்பளம் வாங்குறாளாம்.... நம்ம ஊருல சித்தாளா இருந்தவ, இங்க பணத்துல புரளுறா! நீயும் அவமாதிரி வர வேணாமா?"



கேட்டது மட்டும்தான் அம்மாவுக்குக் கேட்டிருக்கும். அவளுக்குக் கேட்காதபடி ராணி ஸ்ரீக்கு மட்டும் கேட்கிறாற் போல், கிசுகிசுப்பாக இன்னொன்றும் கேட்டார்.

"என்னைப் புடிச்சிருக்கா?"

ராணிஸ்ரீக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. பக்கத்தில் அம்மா வேறு இருக்கிறாள். அவளுக்குக் கேட்டிருந்தால், 'புடிச்சிருக்குன்னு சொல்லு' என்றுதான் சொல்வாள்.

அவளுக்கென்ன? வள்ளியின் அம்மாவைப் போல் தானும் காரில் போக வேண்டும். பங்களாவில் வசிக்க வேண்டும். உடம்பு முழுக்க தங்கம் இழைய வேண்டும்.

சங்கடமாக நெளிந்தாள் ராணிஸ்ரீ. பரத்ராஜன் புரிந்து கொர்ணடார். எத்தனை நடிகைகளை அறிமுகப்படுத்தி இருக்கிறார்? ஆரம்பக் கூச்சம் புரியாதா என்ன?

"ராணி இங்க இருக்கட்டும்... நீங்க புரொடக்ஷன் மானேஜரைப் போய்ப் பாருங்க... அட்வான்ஸ் தருவார். மத்த விஷயங்களும் சொல்லுவார்."

அதற்காகவே காத்திருந்தது போல் அம்மா அவசரமாக வெளியேறினாள்.

பரத்ராஜன் அறைக்கதவைத் தாழிட்டார்.

"வா ராணி. இப்படி வந்து உட்கார்."

தரையில் விரிக்கப்பட்டிருந்த மெத்தையை சுட்டிக்காட்டினார். தயக்கத்துடன் அவர் பக்கத்தில்-அதுதான் அவர் காட்டிய இடம்-போய் அமர்ந்தாள்.

"நடிப்புங்கிறது சாதாரண விஷயமில்லை. அது எல்லாருக்கும் வராது... நூறு பேருக்கு முன்னால நின்னு நடிக்கணும். கூச்சப்படக்கூடாது. கூச்சப்பட்டா நடிப்பு வராது. மொதல்ல கூச்சத்தைப் போக்கணும்...."

> சில திரைப்படங்களில் கதாநாயகிகளைப்பார்த்து
> அவர்கள் பெறும் பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று
> மூக்கின் மேல் விரலை வைக்காத எவருமிருக்க முடியாது.
> சுவரொட்டிகளிலும் விளம்பரங்களிலும் அந்த. நாயகியின் உருவத்தைப் பார்த்து
> கனவுகாணும் இளைஞர்கள் எத்தனைபேர் ஆனால் அந்த அழகு ஜொலிப்பில்
> பெண்ணின் வாழ்க்கையின் பின்னால் மறைந்துகிடக்கும் மர்மமான சோகங்களைப்
> பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை.... பணமும் புகழும் படைத்த பல
> நடிகைகள் தற்கொலை செய்து தங்கள் உயிரையே மாய்த்து விடுகிறார்கள். இன்று
> முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள் பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும்
> கதைகள் சிறிதளவு கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.

அம்மா சொல்வது ஆறுதல் அல்ல. எச்சரிக்கை! வள்ளியைப் போல் பெரிய நடிகையாகும்வரை அவள் ஓயமாட்டாள். ஓயவில்லை!

சினிமாக்காரன் என்று தெரிந்தால் போதும். அவன் லைட்மேனாக இருந்தாலும் சரி; வேண்டும் என்றே முந்தானையை நழுவ விட்டுச் சிரித்துச் சிரித்துப் பேசுவாள்.

அவனால் சினிமா சான்ஸ் வாங்கிக் கொடுக்க முடியும் என்று தெரிந்தால், அவனை வீட்டுக்குஅழைத்து வருவாள். வந்தவனுக்கு விருந்துதான்! பல தடவை விருந்தாகி இருக்கிறாள் விஜயராணி.

அப்படி வந்த ஒருவனால்தான் டைரக்டர் பரத்ராஜனைச் சந்திக்க முடிந்தது. பரத்ராஜன் மாபெரும் டைரக்டர். அவர்தான் வள்ளியையும் கதாநாயகியாக்கியவர். அவரைப் பார்த்ததும் அம்மாவுக்குத் தலைகால் புரியவில்லை.

"பேர் என்ன சொன்னே?"

குரலா அது? கர்ஜனைபோல் இருந்தது பரத்ராஜனின் குரல்.

"ராணி... விஜயராணி..."

பரத்ராஜனின் பார்வை அங்குலம்அங்குலமாக ராணியின் உடம்பை மேய்ந்தது. முக்கிய இடங்களில் நின்று, நிலைத்தது. ராணிக்கு உடம்பு கூசியது.

'என்ன மனுஷன் இவன்? மகள் வயதில் இருக்கும் என்னை காமப் பார்வை பார்க்கிறேனே...'

"பேரு நல்லாத்தான் இருக்கு.... ஆனா சினிமாவுக்குச் சரிப்படாது."

ஒரு கணம் யோசனையில் ஆழ்ந்து, மீண்டார். "ராணிஸ்ரீன்னு பேரை மாத்திடுவோம்... கவர்ச்சியா இருக்கும். இனிமே நீ விஜயராணி இல்லை... ராணிஸ்ரீ!"

ஆட்டோவில் வரும்போது அம்மா ஓதிய வேதம் ஞாபகத்துக்கு வந்தது. படத்தில் நடிக்க வைக்க அவர் சம்மதித்ததும், அவரது காலில் விழ வேண்டும்.

விழுந்தாள். பரத்ராஜன் அவள் தோள்பட்டையை அழுத்தமாகப் பற்றித் தூக்கினார்.

"மரியாதையான பெண்ணாத்தான் இருக்கே..."-தோளிலிருந்த கை இடுப்புக்கு நழுவியது. தற்செயல் நிகழ்வு போன்ற பாவனையுடன் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டார்.

"பேரு புடிச்சிருக்கா?" என்று பரத்ராஜன் கன்னத்தைத் தொட்ட அவரது கை, இப்போது கழுத்து வழியாக கீழே இறங்கி இருந்தது. ரணிஸ்ரீக்கு உடம்பு கூசியது.

"கூச்சப்பட்டா நடிப்பு வராது!"

அவளை இறுக்கி அணைத்துக் கொண்டார் பரத்ராஜன்.

உடம்பு வலித்தது. அதை நினைக்கும் போதெல்லாம் மனசும். நாளடைவில் இரண்டும் மரத்துப் போயிற்று. இதுதான் வாழ்க்கை என்று வரித்துக் கெண்ட பிறகு வலியை நினைத்து வருந்திப் பயன் என்ன பழகிக் கொண்டாள் ராணிஸ்ரீ.

கேமராவுக்கு முன் நடிப்பதைவிட, கேமராவுக்குப் பின்னால் நிறைய நடிக்க வேண்டியிருந்தது. அதில் தான் வருமானம்!

முதல் படம் ரிலீஸாவதற்கு முன்பே வளசரவாக்கத்தில் வீடு வாங்கினாள்-அம்மா!

ஜெ.பிஸ்மி

நடிகையான பிறகும் ஆட்டோவில் போவதா? நம் கௌரவம் என்னாவது என்று கார் வாங்கினாள்.

ராணிஸ்ரீயின் முதல் படம் 'வெள்ளையம்மா' பெரிய வெற்றியில்லை. தோல்விப்படமும் இல்லை.

படம் பார்த்தவர்கள் எல்லாம் பாராட்டினார்கள். 'ராணிஸ்ரீ இன்னொரு சாவித்திரியாக வருவார்' என்று பத்திரிகைகள் ஆரூடம் எழுதின. என்ன பிரயோஜனம்? ராணிஸ்ரீக்கு எதிர்பார்த்தபடி படங்கள் வரவில்லை. வந்த ஒன்றிரண்டு படங்களும் உப்புமா படங்கள்.

பரத்ராஜன் அறிமுகப்படுத்திய நடிகைகள் எல்லாம் நம்பர் ஒன் நட்சத்திரமாகி இருக்கின்றனர். வள்ளி இப்போது நம்பர் ஒன்!

'எனக்கு மட்டும் படங்கள் வரவில்லையே? ஒரு வேளை முதல் படத்திலேயே குடும்பப்பாங்கான வேடத்தில் நடித்ததனால் இருக்குமோ?'

அதுவல்ல விஷயம் என்று பிறிதொரு நாள் புரிந்தது.

அவளுடைய மூக்கு மிக நீளமாக இருக்கிறதாம். அது திரையில் அவலட்சணமாகத் தெரிகிறதாம். அம்மாவின் காதுக்கு விஷயம் வந்த பிறகு, அவளால் சும்மா இருக்க முடியவில்லை.

(வளரும்)

## ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 38

ஒட்டிய வயிற்றோடு, உலர்ந்த உடலோடு, வற்றிய இரத்தத்தோடு, வாடிய முகத்தோடு பாடு பட்டு உழைத்த பாட்டாளியைத் தட்டி யெழுப்பித் தேசிய விடுதலைப் படையின் முன்னோடி ஆக்க வேண்டும் என்றே பாரதி பாடினான்.

அதற்கான தமிழையும், மொழியையும், சொற்களையும் அவன் தேர்ந்தெடுத்துப் பிரயோகித்ததில் என்ன தவறு உண்டு?

இப்படியெல்லாம் சுவாமி விபுலாநந்தர் வாதிட்ட போது சிதரம்பரத்து மாணவர்கள் இதயம் பூரித்துப் போனார்கள். நறுமலரை மொய்க்கும் வண்டினம் போல இளைஞர்கள் சுவாமிகளைச் சுற்றி வட்டமிட்டார்கள்.

அந்த மாணவர் கூட்டத்தில் ஒருவராக இருந்தார் திரு பூ.ஆலாலசுந்தரம் என்பவர்.

இவரே பின்னர் தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் 'திரு.பூ.ஆலாலசுந்தரம் செட்டியார் எம்.ஏ.பி.ஓ.எல். என்ற பெயரில் பேராசிரியராக விளங்கியவர்' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்போது பிறந்த பாரதி யுகத்தைப் பற்றி எழுதிய ஒரு குறிப்பை இங்கே இணைக்கின்றேன்:

சுவாமி விபுலாநந்தரின் மாணவரான திரு.ஆலாலசுந்தரம் கூறுகிறார்:-

"............. .... ....... தேசியப் புலவர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படிப்பதில் விபுலாநந்த அடிகளுக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டு.

1932ஆம் ஆண்டில் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 'பாரதியார் கழகம். (Bharathi Study Circle) என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார்.

அப்புலவரின் பாக்களைக் குறித்து அடிகளின் தலைமையில் மாணவர் வாரத்துக்கு இரு முறை சொற்பொழிவுகள் ஆற்றுவதுண்டு.

இக்கழகத்தின் சார்பில் 2.2.1932 இல் அடிகள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் பிரபல தேசபக்தரும் சிறந்த மேடைப் பேச்சாளருமான திரு.எஸ்.சத்திய மூர்த்தி பி.ஏ., பி.எல். அவர்கள் பாரதியாரின் திருவுருவப் படத்தினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திரை நீக்கம் செய்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.

விபுலாநந்த அடிகள் தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் 'தேசியக் கவி பாரதியார் காட்டிய சமரச வழியினை நாம் பின்பற்ற வேண்டும்' என்று எழுதி யுள்ளனர். அதில் சில வரிகளை மட்டும் ஈண்டு குறிப்பிடுகிறேன்.


"The charm of Bharathi's lyrics, and the dignified tone of his patriotic songs have endeared him to his people. The healthy outlook on life underlying his poems has a universal appeal. May the Tamil people, the inheritors of a glorious civilisation, view the world with the eyes of Bharathi, their latest poet and rising above narrow sectarianism and petty social conventions march, on the path that will lead them to the drime Spirit, which ist he source of all goodness, beauty and truth".

*(Extract from Swami Vipulananda's article on "The development of Tamilian Rdligious Thought" published in the Annamali University Journal Vol. 1 No. 2-as reporduced in the Eelamani of January. 1948).*

மேற்கண்டவாறு சுவாமி விபுலாநந்தர் பாரதியாரைப் பற்றி எழுதியிருக்கிறார்.

திரு.ஆலாலசுந்ரம் செட்டியார் தரும் விவரங்களிலிருந்து விபுலாநந்தர் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் 'பாரதி படி வட்டம்' அமைத்தமை, பாரதி படத்திரை நீக்க விழா நடத்தியமை பற்றியெல்லாம் அறிந்து நாம் பெருமைப்படத்தக்கதாக விருக்கிறது.

பாரதியாரை மகாகவி என்கிறோம், வர கவி என்கிறோம், புதுமைக் கவி என்கிறோம், வீரக் கவி என்கிறோம், விடுதலைக் கவி என்கிறோம். சுதந்திரக் கவி என்கிறோம். மிக மிக நல்லது.



# எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

ஆனால், உண்மையில் பாரதியார் கம்பனைவிட, வள்ளுவனை விட, இளங் கோவை விட, வில்லியை விட, சேக்கிழாரை விட, ஜெயங்கொண்டானை விட, புகழேந்தியை விட கவிதா விலாசத்தில் பெரிய கவிஞர் ஆகிவிடுவாரா?

இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால் இல்லை என்றே பதில் கூறுவேன். கம்பனுடைய கவிதா வின்னியாசத்தின் முன்னால், 'பாரதி சின்னப் பயல்' தான்.

ஆனால், பாரதியின் தேசாவேசம் இருக்கிறதே, அந்த ஆவேசம் தான் வேறு எந்தச் கவியிடமும் இல்லாத ஒரு தனிச் சிறப்பைப் பாரதிக்குத் தேடித் தந்தது என்பேன்.

பாரத தேசத்தின் கால ஓட்டத்தில் ஒரு சரியான, தேவையான, அவசியமான கட்டத்தில் வாராத மாமணி போல் எப்படியோ வந்து பொருந்தி விட்ட கவிஞர் தான் பாரதியார்.

அந்தப் பொருத்தமே அவரை ஒரு மகாகவியாக உயர்த்தி வைத்தது.

கவிஞர்களுக்குப் பஞ்சம் இல்லாத நாடு தமிழ்நாடு.

இலக்கியத்தை மட்டுமன்றி இலக்கணத்தையும், வைத்தியம், ஜோதிடம், மற்றும் உள கலைகளையும் பாட்டிலே படைத்து வைத்திருக்கும் நாடு தமிழ்நாடு.

இழவு வீட்டில் கூட எதுகை மோனையுடன் ஒப்பாரி வைத்து பாட்டில் அழுவது பழந்தமிழ் மரபு.

பாரதியினாலேயே ஏற்றிப் போற்றப் பட்ட கம்பன், வள்ளுவன், இளங்கோ தொடக்கம் ஔவை, ஒட்டக்கூத்தன், புகழேந்தி, காளமேகம், ஜயங்கொண்டான், படிக்காசர், இரட்டையர்கள் வரை-இப்படி எத்தனையோ புலவர்கள்-

இவர்களைத் தவிர சேக்கிழார், வில்லி புத்தூரர். கச்சியப்பர், அருணகிரி போன்ற பக்திக் கவிஞர்கள் இன்னும் பலர்-

இவர்களைத் தொடர்ந்து திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதல் அருணாசலக் கவிராயர் வரை மேலும் பலர்-

இவ்வளவு கவிஞர்கள் தமிழ் பாடி



விட்டுப் போன பின்னர் திடீரென்று பாரதிக்கும் ஏற்றமும் புகழும் வருவதற்கு பாரதியிடம் காணப்பட்ட தனிச் சிறப்பு ஏதாவது உண்டா?

இந்த வினாவிற்கு விடை கூறுவதற்கு முன்பு பாரதியிடம் ஆழ்ந்த கவித்துவம் இருந்ததா என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

எந்த ஒரு விஷயத்திலும் சாதாரண மனிதனுடைய பார்வை வேறு; கவிஞனுடைய பார்வை வேறு. சாதாரண மனிதன் ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லும் பாங்கு வேறு; கவிஞன் எடுத்துச் சொல்லும் பாங்கு வேறு,

ஒருவர், ஒரு சிறந்த கவிஞரா அல்லரா என்பதைத் தீர்மானிப்பதற்கு ஒரு பெரிய காவியம் முழுவதையும் படித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. நான்கு வரிகளைப் பார்த்தாலே கவிதா விலாசம் அதில் உண்டா, இல்லையா என்பதைக் கண்டு கொள்ளலாம்.

ஒரு சாதாரணமான பேர்வழியைப் பார்த்து, தமிழ்நாட்டில் எத்தனை நதிகள், பாய்கின்றன என்று கேட்டால், அவன் மதுரைக் காரனாக இருந்தால், முதலில் வைகை என்று ஆரம்பிப்பான். தஞ்சாவூர்க் காரனாகவிருந்தால் காவிரி என்று ஆரம்பிப்பான்.

அப்படியோ, இப்படியோ, எப்படியோ ஆரம்பித்து-

வைகை,
காவிரி,
பாலாறு,
பொருநை,
தென் பெண்ணை

என்று அடுக்கிக் கொண்டே போவார்கள். அவர்கள் கூறுவதில் விவரம் இருக்குமே தவிர ஒரு சுவை இருக்காது.

தமிழ்நாட்டின் நதிகளைப் பாரதியர் எப்படிக் கூறி விட்டார் என்பதைப் பார்த்தால் புள்ளி விவரம் எது, கவிதை எது என்பது பளிச்சென்று புலப்பட்டு விடுகிறது.

பாரதியார் எப்படிச் சொல்லுகிறர் என்று பர்ப்போமா?

காவிரி தென்பெண்ணை பாலாறு- தமிழ்
கண்டதோர் வைகை பொருநை நதி-என
மேவிய ஆறு பலவோடித் -திருமேனி
செழித்த தமிழ்நாடு.

ஆகா, என்ன அழகாக அந்த நதிகளை வரிசைப்படுத்தி விட்டார். அதிலும் வைகைக்குக் கொடுத்திருக்கும் அடைமொழியைப் பார்த்தீர்களா? தமிழ் கண்ட வைகையாம்! தமிழ் வளர்ந்தது மதுரையில்தான். அந்த மதுரையைச் சுற்றி ஓடுவதால் வைகையும் தமிழைக் கண்டு விட்டதாம்.

இவ்வளவோடு நிற்கவில்லை அவர் கூற்று. இத்தனை ஆறுகளும் பாய்ந்து! ஓடி ஒரு திருமேனியைச் செழிக்கச் செய்கின்றனவாம். தெய்வ விக்கிரகத்தின் உருத்தை தான் 'திருமேனி' என்று சிறப்புச் சொல்லால் குறிப்பிடுவது வழக்கம். இங்கே ஐந்து நதிகள் தொட்டுச் செழிக்கச் செய்யும் திருமேனி எது தெரியுமா? தமிழ்நாடு என்ற ஒரு மேனிதான்!

தமிழ்நாட்டுக்கு எத்தகைய மகத்துவம்!

இந்த நான்கு வரிகளே போதுமே பாரதியை ஒரு கவிஞன்தான் என்று

### இரா. பத்மநாதன்

ஒப்புக் கொள்வதற்கு. இதற்கு மேல் என்ன வேண்டிக் கிடக்கிறது?

பாரதி ஒரு கவிஞன் தான் என்பதை ஒப்புக் கொள்வோம். ஆனால், பாரதி கம்பனையும், கூத்தனையும், வள்ளுவனையும், இளங்கோவையும் விடப் பெரிய கவிஞன் ஆவானா, என்று கேட்டால் அது ஆராய்ச்சிக்கு உரிய விஷயமாகிவிடுகிறது. நிச்சயமாக கல்வியில் பெரியனான கம்பனை விட விஸ்தாரமான கவிதா சக்தி கொண்டு விளங்கியவன் பாரதி என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. ஆயினும், பாரதியும் ஒரு மகாகவிதான் என்று ஏற்றுக்கொள்வதில் இடர்ப்பாடு எதுவும் இருக்க நியாயம் இல்லை.

பாரதிக்கு முன்பு தோன்றிய கவிஞர்கள் பெரும்பாலும் கடவுள் கதைகளை வைத்துப் பாட்டியற்றினார்கள். அல்லது சக்கரவர்த்திகளையும், மன்னர்களையும், அவர் தம் ராணிகளையும், குறுநில வேந்தர்களையும், வள்ளல்களையும், செல்வர்களையும் செல்வர்களால் அளையப்பட்ட பரத்தையர்களையும் பாடினார்கள்.

அவர்களைப் போலவே பாரதியாரும் ஆரம்பத்தில்-அதாவது 39 ஆண்டுகளே வாழ்ந்தவர், 24ஆவது பிராயம் வரை- விநாயகர் நான்மணி மாலை என்றும், தோத்திரப் பாடல்கள் என்றும், வேதாந்தப் பாடல்கள் என்றும் பாடினார். பின்னர் சக்திப் பாடல்களும், பக்திப் பால்களும் எழுதினார். அதைத் தொடர்ந்து கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பனவும் பிறந்தன.

இவை எல்லாம் பாரதியாரின் தனித்துவத்துக்கு எடுத்துக் காட்டுக்கள் ஆகும் என்று கொள்ள முடியாதவை.

அப்படியானால் பாரதியாரின் தனித்துவம் எங்கே தோன்றகிறது?

பாரதநாடு சுதந்திர நாடாக விளங்கிய காலத்தில் பலவிதமான சமயங்களும், மதங்களும், மார்க்கங்களும் நாட்டில் நடைமுறையில் இருந்தன. அவற்றை வைத்து கவிஞர்கள் இராமபக்தி, கிருஷ்ண பக்தி, ஈசுர பக்தி, முருக பக்தி, தேவி பக்தி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் பாடல்களையும், பிரபந்தங்களையும், காவியங்களையும் பாடினார்கள்.

பாரதியாரோ, தேச பக்தி என்று ஒரு புதுவித பக்தியைப் பாடி ஒரு புதிய மார்க்கத்தையே தோற்றுவித்தார். ஒவ்வொரு சமயத் தலைவர்களின் பேராலே ஒவ்வொரு மார்க்கம் உலகில் தோன்றியது போல தமிழ்நாட்டில் தேசபக்தி என்ற ஒரு மார்க்கம் பாரதியாராலே தோற்றவிக்கப் பட்டது.

அதனால், பாரதியார் தேச பக்தி மார்க்கத்தின் ஸ்தாபகரானார். இதுவே அவருடைய சிறப்பு அம்சம் என்பதே என் கருத்தாகும்.

நாடு பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்த காலம் அது. அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்துக்குத் துதி பாடிப் பிழைப்போர் நிறைய இருந்தார்கள் பாரதியாரும் இந்தச் சுழற்சியில் சிக்குண்டவரானார்.

1906ம் ஆண்டில் பிரிட்டிஷ் இளவரசரான பிரின்ஸ் ஒப் வேல்ஸ் இந்தியா வந்தபோது அவரையும். பிரிட்டிஷார் நடத்தி வரும் நல்லாட்சியையும் பாராட்டி நல்வரவு கூறி வாழ்த்துப் பாடினார் பாரதியார்.

**(இன்னும் வரும்)**

---

# ஓரம் ஒரு வார்த்தை!

### தென்கச்சி – கோ. சுவாமிநாதன்

## 1. வணக்கம்!

வணக்கம்!

யாருக்குன்னு பாக்கறீங்களா? உங்களுக்குத்தான்!

என்ன திடீர்ன்னு இப்பவந்து புதுசா ஒரு வணககம? இதுதானே உங்க சந்தேகம்?

அந்த சந்தேகத்தை இப்ப தீர்த்து வைச்சுடறேன்.

வேறே ஒண்ணுமில்லே....

எனக்குத் தெரிஞ்ச சிலதை உங்க காதுலேயும் போட்டு வைக்கலாம்னு ஒரு நினைப்பு.

மனஷன் கேக்கறது அதிகமா இருக்கணும்ங்கறதுக்குத்தான் ரெண்டு காது!




பேசறது குறைச்சலா இருக்கணும்ங்கறதுக்காகத்தான் ஒருவாய்.

இப்பிடி இருக்கறப்பவே நிலைமை இப்பிடி இருக்கு....

அப்பிடி இருக்கறப்போ ஒவ்வொரு மனுஷனுக்கும் இரண்டு வாய் ஒரு காதுன்னு இருந்தா உலகம் எப்படி இருக்கும்? கொஞ்சம் கற்பனை பண்ணி பாருங்களேன். அப்புறம் யாரும் தெருவுல நடமாடவே முடியாது!

அது இருக்கட்டும். இப்ப விஷயத்துக்கு வருவோம்... இன்னைக்கு முதல் தடவையா எந்த தகவலை உங்களுக்குச் சொல்றது? ம்... சரி... இந்த வணக்கம்ங்கற வார்த்தையையே எடுத்துக்குவோமே! நாம ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிறப்போ 'வணக்கம்'ன்னு சொல்லிக்கிறோம்...

சிலபேர் 'நமஸ்காரம்'ன்னு சொல்லிக்குவாங்க.....

"என்ன சௌக்கியமா இருக்கியா....?"ன்னு கேட்டுக்கறது சிலபேர் வழக்கம்....

இந்தப் பழக்கம் இடத்துக்கு இடம் வித்தியாசப்படுது.... நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுது.....

வங்காளத்துலே ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டா என்ன சொல்லிக்குவாங்க தெரியுமா?

"ராம் ராம்!"-இப்பிடித்தான் சொல்லுவாங்க! இங்கிலீஷ்காரங்க "காலை வந்தனம், உங்கள் உடல் எப்படி?"ம் பாங்க.

அதாவது Good Morning, How do you do?

எகிப்து நாட்டுல ஒரு வேடிக்கை....

அவங்க எப்படி ஒருத்தருக்கொருத்தர் விசாரிச்சிக்கறது தெரியுமா?

"நீங்க எவ்வளவு வியர்வை விடுகிறீர்கள்?" எப்படி இருக்குது இது?

பாட்டில் வச்சிக்கிட்டு அளந்தா சொல்ல முடியும்? இருந்தாலும் அவங்க பழக்கம் அது!

சீனாக்காரங்க வேறேவிதம்....!

"உங்க வயிறு எப்படி இருக்கு...
சாப்பிட்டீங்களா?"

இதுதான் அவங்க விசாரிக்கிற முறை.

ரஷ்யாக்காரங்க எப்படித் தெரியுமா?

"நீங்க எப்படி உயிரோடு இருக்கீங்க?" ஏதோ ஆச்சரியப்பட்டு கேக்கறது மாதிரி இல்லே இது?

பெர்ஷியர்கள்– "உங்கள் நிழல் என்றும் குறையாமல் இருக்கவேண்டும்!" அப்படின்னு சொல்லிக்கிறாங்க....

இது கொஞ்சம் பரவாயில்லே!

ஜெர்மனிகாரங்க.... "உங்களைப் பத்தி உங்களுக்கு என்ன தோணுது?" அப்படின்னு கேட்டுக்கிறாங்க.....

பிரெஞ்சக்காரங்க "உங்களை எப்படி தூக்கிட்டு போறீங்க?" அப்படின்னு கேக்கிறாங்க....

நம்ம ஆள்லேயே சில பேரை பாக்கறப்போவும் இதே மாதிரி விசாரிக்கலாம் போல தோணும்! அவங்களை துணிச்சலாவும் நாம கேட்டுடலாம்... 'உங்க உடம்பை எப்படி தூக்கிக்கிட்டு போறீங்கன்னு!' விரட்டினா நாம ஓடியாந்துடலாம்... அவங்களாலே துரத்திக்கிட்டு வந்து நம்மை பிடிக்க முடியாது! இப்படி ஒருத்தரை ஒருத்தர் நலம் விசாரிச்சிக்கறதுங்கறது இடத்துக்கு இடம் வித்தியாசப்படுது. வார்த்தை மட்டும்னு இல்லே செய்கையும் அப்படித்தான்.

நாம ரெண்டு கையும் ஒண்ணா சேர்த்து கும்பிடறோம். சிலபேர் ஒரு கையை நெத்தியிலே வச்சுடறாங்க சுலபமா! சில எடத்துலே மூக்கைத் தொட்டா வணக்கம் செலுத்துறதா அர்த்தம்...

அது சரி... என்ன ஒரு மாதிரியா யோசிக்கிறது மாதிரி தெரியுது... இருக்கிறது ஒரு வாய்!

ஆனா அதிகமா பேசறேனோ! சரி... முடிச்சுக்கிறேன்....

ஆனா அதுக்கு முன்னாடி உங்களுக்கு மறுபடியும் வணக்கம் சொல்லணும்னு ஆசைப்படறேன்...

ஆனா சீனாக்காரங்க பாணியிலே... நீங்க கோவிச்சிக்கப்புடாது... என்ன... சொல்லவா?

"உங்க வயிறு எப்படி இருக்கு? சாப்பிட்டீங்களா?"

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஒரே ஒரு நாள்....



## ரூபராணி

ஒஸ்லோவில் இலையுதிர் காலம் வந்துவிட்டால், மரங்கள் எல்லாம் அம்மணமாய் நிற்கும். அதைப் பார்த்து நாணும் பழக்கம் நகுலுக்கு இல்லை. அந்த கடுங் குளிரில் ஒடுங்கியபடி சின்னஞ்சிறு அபாட்மன்ற் ஒன்றின் மூலையில் சிந்தித்தபடி இருந்தான். இரவு பூரா நைற் சிவ்ற் வேலை செய்த களைப்பு அவன் முகத்தில் தெரிந்தது. கண்கள் இரண்டும் மண் விழுந்தது போல் 'நெரு நெரு' என்று நெருடியது. பசி வயிற்றைப் புரட்டியது. 'வெளிநாட்டு வாழ்க்கை நினைப்பதுபோல் இல்லை' என்று உணர்ந்தான். இந்த வாழ்க்கைக்கு ஆசைப்படுபவர்களை எண்ணியதும், "ஐயோ பாவம்!" என்று முணுமுணுத்தான். தான் விருப்பமில்லாமலேயே இந்த வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டதை நினைத்தான். பட்டப்படிப்புக்காக ஏங்கிக் கடைசியில் சுமைதாங்கியாகிப் போனது, நகுலன் மனதில் மாறாத புண்ணாக வலித்தது.

பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. கொட்றேயிலிருந்து இரண்டு மூன்று பாண்துண்டுகளை எடுத்து, வெண்ணெய் தடவி மென்று சாப்பிட்டான். தன் சொந்த மண்ணின் ஞாபகம் வந்து அவன் கண்ணைக் கலக்கியது. அறுபதைத் தாண்டிய அப்பா. ஐம்பத்தி ஏழுவயது அம்மா. முப்பதுகளின் முடிவுக்கு வந்து விட்ட அக்கா. இவர்கள் எல்லாரும் நகுலின் முன் அணி வகுத்து நிற்பது போல் கணப்பொழுதில் தோன்றி மறைந்தார்கள். அக்காவுக்கு வயசாகியும் கலியாணம் கால் ஒன்றும் நடக்கவில்லை. அப்பா, குடும்பத்துக்கு என்று எதுவும் சேமித்து வைக்கவில்லை. அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் குடித்து வெறித்தவருமல்ல. அவர் பார்த்த சின்ன வேலையில் குடும்பத்தின் வயிற்றை மட்டுமேகழுவ முடிந்தது. இந்த நிலையில் சீதனம் பேசிக் கலியாணம் முடித்து வைக்க முடியாதென்பது முடிவாகிப் போன விஷயம். 'வீட்டை அடகு வைத்து நாலு லட்சம் கொடுத்தால்' நகுலை எப்படியாவது நோர்வே அனுப்பிவைப்பதாகவும் பல்லைக் கடித்துக்கொண்டு பாடுபட்டு உழைத்தால் வீட்டையும் மீட்டு அக்காவையும் வசதியான இடத்தில் கட்டிக் கொடுக்கலாம், என்றும் ஆனந்தன் மாமா சந்தையில் வைத்து அம்மாவிடம் சொன்னதை அக்கா சொன்னாள். அதுவே எல்லோரின் விருப்பமும் கெஞ்சலுமாக இருந்தது.

இப்படி வந்து சேர்ந்தவன்தான் நகுல். வந்து வருடமொன்று ஆகிவிட்டது. அங்கும் இங்கும் பார்க்காத வேலையெல்லாம் செய்தும், அவனால் நினைத்த அளவு பணம் சேர்க்க முடியவில்லை. வீட்டு நினைவு அவனை வாட்டி எடுத்தது. ஆணாகப் பிறந்த பாவத்தை எண்ணி அழுதான் நகுல்.

முதல் நாள் அக்கா எழுதிய கடிதத்தின் சாரம் அவன் காதில் நாராசமாய் ஒலித்தது.

அன்புள்ள தம்பி,

*உனது கடிதம் படித்து மிகவும் கவலையடைந்தோம். வீட்டுக்கு உன்பணத்தில் வட்டி மட்டுமே கட்டி வருகிறோம். இன்னும் ஆறுமாதத்துள் நாலு இலட்சம் கட்டாவிட்டால் வீடு அறுதியாகிவிடும். எனக்குக் கலியாணம் முடியாட்டாலும் பரவாயில்லை. நாங்கள் வீடில்லாமல் நடுத்தெருவில் அனாதைகளாய் நிற்காமலாவது பார்த்துக் கொள். சீதனக் காசு இல்லாட்டா ஆவணியில் நடக்கவிருக்கும் கலியாணமும் நிண்டு போகும். கவலையினால் அம்மாவுக்கும் அடிக்கடி நெஞ்சு வலி. என்ன செய்வது? தலைவிதி.*

உன் அக்கா,
தேவகி.

நகுலின் இதயம் வேதனையில் வெந்து வலித்தது. செய்வதறியாது அவன் சிந்தனை வயப்பட்ட போது லாரா ஸ்மித்தின் ஞாபகம் மின்னலாய் வெட்டியது. லாரா ஒரு ஸ்கொட்டிஸ் அழகி. ஒஸ்லோவில் பிரபல நிறுவனமொன்றின் சொந்தக்காரி. நகுல் அங்கு சாதாரண சிப்பந்தியாய் வேலை செய்தபோது, லாராவின் பழக்கம் ஏற்பட்டது. நகுலின் அழகிய தோற்றமும், அவனுடைய கருகரு என்ற சுருண்ட கேசமும் அவளுக்குப் பிடித்துப் போன சங்கதிகள். அவன் கன்னத்தில் குழி விழச் சிரிக்கும்போது, தன் விரலால் அவன் முகத்தைத் தொட்டு ரசிப்பாள். செல்லுமிடமெல்லாம் லாரா நகுலை அழைத்துச் செல்வது வழக்கமாகிவிட்டது. ஒரு சீமாட்டியின் நட்பு தனக்குக் கிடைத்ததில் பூரித்துப் போனான் நகுல். லாராவால் தனக்கு உதவமுடிந்தால்..... என்ற நினைவு. அவனுக்கு இனித்தது. ஆனால் அதைக் கேட்கும் துணிச்சல் நகுலுக்கு இல்லை.

அன்று லாரா நகுலை அழைத்து விருந்தளித்து உபசாரம் செய்தாள், "ஐய் லவ் யூ, அய் லைக் ரு மெறியூ!" என்றாள் தன் பச்சை மணிக் கண்களால் நகுலைப் பார்த்து. 'வெள்ளைத் தோல்களுக்கு இது சாதாரணம், என்று அவன் எண்ணினாலும்' பூமி அதிர்ச்சியில் புதையுண்ட உணர்வில் உறைந்து போனான் நகுல். தனக்குக் கலியாணமாகிவிட்டது ஏன்று ஒரு பொய்யைப் புன்னகையோடு சொன்னான்.

"பரவாயில்லை சில நாட்களுக்கு மட்டுந்தான்!" என்று லாரா கலகலப்பாகச் சொன்னபோது, வானம் இடிந்து தலையில் விழுந்தது போல் இருந்தது நகுலுக்கு.

இப்படியும் ஒரு கலாசாரமா? இங்கே சீதனம் கேட்பாருமில்லை. கொடுப்பாருமில்லை. யாரும் யாரையும் எந்த வயதிலும் முடிக்கலாம். விடலாம். பின்னர் நண்பர்களாகவும் பழகலாம். இதை அந்தச் சமூகமும் அங்கீகரித்து வரவேற்கிறது. இந்தப் பண்புகளை இலங்கைத் திருமணங்களோடு ஒப்பிடும்போது சரி பிழைகள் நகுலின் மனதுள் போராடின. லாராவின் விருப்புக்குத் தன்னை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று பிடிவாதமாயிருந்தான் மாதங்கள் உருண்டன. நகுலின் வீட்டிலிருந்து கடிதத் தொடர்புகள் எதுவும் இல்லை. பயங்கரக்கற்பனைகள் அவனைச் சுற்றி வலை பின்னியது. இன்னும் இருபது நாட்களில் வீடு அறுதியாகிவிடும். அம்மா, அப்பா, அக்கா இவர்கள்....?? நினைவுகளில் தோய்ந்த நகுல் தூக்குத் தண்டனைக்குக் காத்திருக்கும் கைதியாகத் துடித்தான்.

லாராவிடம் உதவி கேட்க ஓடோடிச் சென்றான். அவள் அவனை முகமலர்ந்து வரவேற்றாள். 'துணிவே துணை' என்று தமிழ்வாணன் சொன்னதை நினைவு படுத்திக் கொண்டு லாராவிடம் தன் குடும்ப நிலையை வர்ணித்தான். லாரா எல்லாவற்றையும் மிகுந்த அக்கறையுடன் உள்வாங்கிக் கொண்டு பத்து லட்சம் பெறுமதியான குறோன்களை அன்பளிப்பாக வழங்குவதாய்க் கூறினாள். மகிழ்ச்சியில் சிறகடித்து வானத்தில் பறந்தவனை லாரா பூமிக்குக் கொண்டு வந்தாள்.

"ஒரே ஒரு நாள் எனக்கு நீ கணவனாய் இருக்க வேண்டும்!" லாராவின் வார்த்தைகளில் உறுதி தொனித்தது. நகுலின் பிடிவாதம் மெல்லத் தளர்கிறது.

# கண்கள் கசிகின்றன

## கட்டாரிலிருந்து-பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்

ஞாயிற்றுக்கிழமை போல் இருந்தது திங்கட்கிழமை. செவ்வாயில் தித்திக்கும் மழலை பேசும் மகன் நிசாந்தனுக்கு புதன் கிழமை பிறந்தநாள் வருவதால், ஒரு புதுச்சட்டை வாங்குவதற்காக கடைவீதிக்குச் சென்றிருந்தேன். வெறிச்சோடிக் கிடந்த கடைவீதியும், காலியான எனது மணிபர்ஸும் மாதக் கடைசி என்பதனை நினைவூட்டின. பஸாரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த மனிதத் தலைகளுக்குள் என் கண்கள் என்னோடு அலுவலகத்தில் பணி புரியும் சக ஊழியன் சேகரைத் தேடிய வண்ணம் இருந்தது. என்னைப் போல் ஏதோ தேவைக்காய் இன்று அவனும் விடுப்பு எடுத்திருந்தான். "எப்படியும் பத்து மணியளவில் வந்திடுவேன்!" என்றவனை இன்னும் காணவில்லை. அவன் எனக்குக் கொஞ்சம் பணம் தருவதாகச் சொல்லி இருந்தான். அவன் வந்து பணம் கொடுத்தால் தான் மகனின் பிறந்த தின ஏற்பாடுகளைக் கவனிக்க முடியும்.

கையில் பணம் இல்லாதவர்களுக்கு பணம் இருப்பவர்கள் எடுப்பது போன்ற ஆடம்பர வைபவங்கள் எல்லாம் தேவையற்றது என நினைப்பவன் நான். என்னைப்போல என் மனைவி இல்லையே! "கல்யாணம் செய்து ஆறுவருடங்களுக்குப் பின் எங்களுக்கு கிடைத்த முதல் குழந்தை' நிசாந்தன். "ஒரே பிள்ளையுடைய முதலாவது பிறந்தநாளைக் கூட கொண்டாடாவிட்டால் எப்படி? கல்யாணம் செய்த நாளிலே இருந்துதான் பார்க்கிறேன். 'வருமானம் போதல வருமானம், போதல என்று நீங்களும் சொல்லிக்கிட்டுதான் இருக்கீங்க. நானும் கேட்டுக் கொண்டுதான் இருக்கேன். இது வரையிலும் நீங்க சொல்றதுக்கெல்லாம் தலையாட்டிக்கிட்டுதானே இருக்கேன். எனக்காக இந்த ஒரு விசயத்தைக் கூட செய்யக் கூடாதா? எல்லாம் நீங்க நினைக்கிறமாதிரியே நடக்கணும். எங்களுக்கென்று ஆசா பாசங்கள் இருக்கக் கூடாதுன்னா எப்படி?" என்று மூக்கை சிந்த ஆரம்பித்து விட்டாள்.

இதற்கு மேலும் அவளை பேசவிட்டால் விபரீதமாகும் என்பதை உணர்ந்தவனாய், "சரி சரி!" என்று அவளிடம் சொல்லிவிட்டேன். இல்லாவிட்டால் பிறகு வீட்டிற்குள் நுவரெலியாவில் மழை வானம் நச நசப்பது போன்று தொண தொணத்துக் கொண்டிருப்பாள். வெளியிலே போய் வரும்போது ஆயிரம் பிரச்சனைகளோடு வந்தாலும், வீட்டில் நுழைந்து விட்டால் நிம்மதியாக இருக்க வேண்டும். வீட்டிலும் பிரச்சனை என்றால் வாழ்க்கை சலித்துவிடும். அதனால் எப்போதும் வீட்டிற்குள் பிரச்சனை எழாதபடி பார்த்துக் கொள்வேன். பெற்றோல் விலை கூடினால், போக்குவரத்துக் கட்டணமும், அதைத்தொடர்ந்து அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலையும் சொல்லாமலே கூட்டப்பட்டு விடுகின்றன. அதுமட்டுமா மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் எல்லாம் அவ்வப்போது கூட்டப்பட்டுக் கொண்டே போகிறது. விலைவாசி வண்ணத்திப் பூச்சியைப் போல அழகாக உயர்ந்து போய்க்கொண்டே இருந்தாலும் சம்பள உயர்வுகள் மட்டும் என்னவோ நத்தையின் கிழட்டு அத்தை போல் தான்.....! எப்போதும் விலைவாசி உயர்ந்து கொண்டே போனாலும், எப்போதாவது ஒரு சொற்ப சம்பள உயர்வை பெறும் என்போன்ற மாதச்சம்பளக்காரர்கள் என்னதான் வாழ்க்கையை திட்டம் போட்டு நடத்தினாலும் எதிர்பாராத விதமாக ஏற்படும் திடீர்ச் செலவுகள் கையைக் கடிக்கும் போது கடன் வாங்குவது என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. 'என்ன செய்யலாம்?' என்று சிந்தனையில் இருந்த என் தோள்களில் யாருடைய கையோ விழுந்தது. திரும்பிப்பார்த்தேன். அது சேகர், சொன்னபடி தான் கேட்டத்தொகையைத் தந்தான்- வட்டிக்குத்தான்.

வட்டி இல்லாமல் பணம் எடுப்பது இந்தக் காலத்தில் மிகவும் கடினம். அப்படி இருந்தும் அப்படி பணம் கொடுக்க எனக்கு ஒருவன் இருக்கிறான். என் பால்ய நண்பனும் பக்கத்து வீட்டுக்காரனுமான பார்த்தசாரதி தான் அவன். அவனிடம் பணம் வாங்கினால் ஒரு சிக்கல் இருக்கிறது. சொன்னால் சொன்னபடி சொன்ன சமயத்தில் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் மானம் போகிறமாதிரி சத்தம் போடத்தொடங்கி விடுவான். நான் தற்போது வசிக்கும் வீடு கூட அவனுடையது தான். மாத வாடகையை முதலாம் திகதியன்று கொடுத்து விடவேண்டும். இல்லாவிட்டால் வேறு வீடு பார்த்துக்கொள்ளும்படி இந்த ஏழு வருஷங்களில் பல இக்கட்டான சூழ்நிலைகளை உண்டாக்கி இருக்கிறான். ஓரளவு குறைந்த வாடகையில் என் வசதிக்கேற்ற வீடாய் இருப்பதால் சமாளித்துப் போகிறேன். பணவிசயத்தில் கண்டிப்பானவனாக இருந்தாலும் பக்கத்து வீட்டுக்காரன் என்ற நோக்கில் பார்த்தால் மிகவும் அருமையானவன் தான். ஒரு ரூபா செலவு செய்வதானாலும் மிகவும் யோசித்து செலவு செய்து கடன் இல்லாமல் நல்ல பெரிய வீட்டில் குடும்பமாய் வாழும் அவனிடம் இந்நிலையில் கடன் பெற்றால் எப்படியும் உடனடியாக கொடுக்க முடியாத காரியம் என்பதால் வட்டிக்கு வாங்கி விட்டேன்.

மனைவியின் விருப்பத்தின் பேரில் மகனின் பிறந்த நாள் விழாவிற்கு பலரும் வந்திருந்தார்கள். நானும் எனது சார்பாக ஒரு சிலரையும் மறவாமல் பார்த்தசாரதி குடும்பத்தினரையும் அழைத்திருந்தேன். அழைக்கப் போகும் போது "பணத்திற்கு என்ன செய்தாய். திடீர்னு இவ்வளவு பெரிய பார்ட்டி வைச்சிருக்கியே! ஆபீஸில லோன் ஏதாச்சும் கிடைத்ததா?" என்றான். நான் "இல்லை!" என்றதும் "அப்போ!" என்று வியந்து நின்றான். "நான் என்ன சொன்னாலும் நீ கேட்கவே மாட்டேன் என்கிறாய். வட்டிக்கெல்லாம் பணம் எடுத்து இவ்வளவு பெரிய விழா எல்லாம் நடத்துவது அவசியம் தானா? விழா முடிந்து கடன்காரன் பணம் கேட்கிறபோது, என்ன செய்வது என்று விழி பிதுங்குகிறதை விட, ஏதோ உன் வசதிக்கேற்ப கோயிலுக்குச் சென்று பிள்ளை பேர்ல ஒரு அர்ச்சனை செய்துட்டு, ஒரு இல்லாதவங்க நாலு பேருக்கு சாப்பாடு கொடுத்தால் கூட புண்ணியம் கிடைக்கும். தலைக்கு மேல கடனைவைத்துக் கொண்டு தலைகுனிந்து நடக்கிறதை விட, கடன் இல்லாமல் கஞ்சி குடிக்கிறதுல எவ்வளவு நிம்மதி தெரியுமா?........" என்று வழமைபோல் அவன் புத்திமதி சொல்ல ஆரம்பித்து விட்டான். அவன் சொல்வது நியாயமானது தான். ஓர் அவசரத்திற்கு அஞ்சோ பத்தோ அவனிடமே வாங்கினாலும், பக்கத்து வீட்டுக்காரன்தானே என்று ஒரு நாள் பொறுத்துக் கொள்ள மாட்டான். எதையும் சுலபமாய் சொல்லிவிடும் யாருக்கும் அதை செயல்படுத்துவதில் இருக்கும் சிரமம் புரியாது. என்பதால் அவன் பேச்சுக்கு தலையாட்டிவிட்டு மௌனமாகவே வந்துவிட்டேன்.

இப்போது அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இதோ அவனும் வந்துவிட "ஹெப்பி பேர்த் டே டு யூ!" என்று வாழ்த்துச் சொல்லி மகனின் கையைப் பிடித்து கேக் வெட்டி, விழாவை ஆரம்பித்தோம். வந்தவர்கள் பலரும் தங்கள் வசதிக்கேற்ற அன்பளிப்புக்களை கையளித்துவிட்டுச் சென்றபின், கடைசியாக பார்த்தசாரதி வந்தான். பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டுக் கொஞ்சிட்டு, என்னையும் மனைவியையும் முன் வைத்துக் கொண்டு ஒரு என்வலப்பைக் கொடுத்தான். அன்பளிப்பாய் பொருளாய் எதையும் கொடுக்காமல், என் நிலமையை உணர்ந்து செலவுக்கு ஆகட்டும் என்று பணமாய் கொடுக்கிறான் போலும். என எண்ணிக் கொண்ட போது என்னிடம் அவன் "இது இந்த வீட்டோட உறுதி பத்திரம், இன்னையிலே இருந்து உன் பிள்ளை நிசாந்தனுக்கு இது சொந்தம்!" என்றதும் நான் ஆச்சரியத்தால் அவனைப் பார்த்தேன்.

"என்ன ஆச்சரியமா பார்க்கிறாய்? நான் இருக்கிற வீடு நல்ல விலைக்கு வந்தபோது, பேங்கிலே லோன் எடுத்து கையில இருந்த பணத்தோட அதை வங்கிட்டேன். மாசாமாசம் லோன் பணத்தை கட்டுவதற்கு ஏதுவா உனக்கு இந்த வீட்டை வாடகைக்கு கொடுத்திருந்தேன். போன மாசத்தோடு லோன் எல்லாம் கட்டி முடிச்சாச்சு. நான் இப்போ அந்த வீட்டிலே சௌகர்யமா வாழ்வதற்கு இந்த வீட்டோட வாடகை பணம் தான் உதவிசெய்தது. அதனால பல கஸ்டத்துக்கு மத்தியில் இருக்கும் உன் மனசை பல சந்தர்ப்பங்களில் புண்ணாக்கிக் கூட பணத்தை வாங்கி இருக்கிறேன். நீ கொடுத்த பணம் கூட இந்த வீட்டை விலை கொடுத்து வாங்குகிற அளவுக்கு சமமானதாக இருக்கு. அதனால உன்னோட பணத்தை உங்கிட்டேயே திருப்பிக் கொடுக்கிறதுதான் முறை. என்பதற்காக இதை என் அன்பளிப்பா உன் பிள்ளைக்குக் கொடுக்கிறேன். நல்லா இருங்க. இனிமேலாவது வட்டிக்குப் பணம் வாங்காதே!" என்றவனை ஆரத் தழுவுகிறேன். என் கண்கள் என்னையறியாமலே கசிகின்றன.



# இண்டர்வியூ

மிகவும் கவலையாக இருந்தார் ராமநாதன்.

'குமாருக்கு இந்த இண்டர்வியூவிலயாவது வெற்றி கிடைக்க வேண்டுமே' என்று அவர் மனது வேண்டாத தெய்வம் இல்லை.

அவருக்கே அலுத்து விட்டது.

குமாருக்கு இது நான்காவது இண்டர்வியூ.

"என்னத்துக்கு இப்பிடி இடிஞ்சு போய் இருக்கிறியள்? இந்த இண்டர்வியூவில குமார் பாஸ் பண்ணிடுவான். நான் ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துறதா வேண்டிக்கிட்டான். எல்லாம் நல்லபடியாக நடக்கும். நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ!" என்று ராமநாதனின் மனைவி மங்களம் சொன்னாள்.



## -வர்த்தினி-

"நாங்கள் தான் இப்படிக் கிடந்து அலட்டிக்கிட்டிருக்கிறம். அவனுக்குக் கொஞ்சமாவது அக்கறை இருக்கே? இந்தநேரம் வரைக்கும் நல்லாக் குப்புற அடிச்சு நித்திரை கொண்டு கிடக்கிறனே? எல்லாம் என்ர தலையெழுத்து!" என்று முணுமுணுத்தார்.

"சரி சரி நான் உந்தப் பிள்ளையார் கோயிலடிக்குப் போய் வாறன். குமாரை எழுப்பி ரெடியாக இருக்கச் சொல்லு!" என்றபடி நடையைக் கட்டினார் ராமநாதன்.

மங்களம் அவசர அவசரமாக அறைக்குள் சென்று தூங்கிக் கொண்டிருந்த தங்களது மகன் குமாரை எழுப்பத் தொடங்கினாள். முதலாம் ஆண்டு, பாடசாலை அனுமதி இண்டர்வியூவுக்குச் செல்வதற்காக.

# உள்ளம் தொட்டுவிட்டான்!

சேலை கட்டிய சோலைகள் இரண்டு அந்தப் பூங்காவினுள் அமர்ந்திருந்தன.

பூங்காவினுள் ஒரு சில வகைப் பூமரங்களே இருக்க, இந்த இரு சேலைச் சோலைகளும் விதவிதமாய் பலப்பலவகைப் பூக்களைக் கொண்டிருந்தன.

நேரத்துக்கு நேரம் தோற்றம் மாற்றிக் காட்டியபடி இருக்கும் மலர்கள்.

நிழலில் தாமரையாகத் தெரிந்த கன்னங்கள், சூரிய ஒளியில் செவ்வந்தியாக மின்னின.

காற்றுக்கு ஆடும் நீலோற்பல மலர்களாக இருந்த கண்கள், இமை மூடினால் இருவாட்சியாகி மயங்கின.

## இலக்கிய நயம்

பூங்காவின் மலர்களுக்கு வண்டுகளிடமிருந்து விடுதலை.

அந்த இரு பெண்களையும் மொய்த்தபடி இருந்த வண்டுகளின் ரீங்காரம்.

தன் வளையல் கைகளை முகத்துக்கு எதிரே வீசி வண்டுகளை விரட்டியபடி ஒருத்தி வயலினின் ஒற்றை நரம்பைச் சுண்டினாள்.... இல்லையில்லை.... பேசினாள்.

"நந்தினி, இதோ பார்! இந்த வண்டுகளுக்கும் இரக்கமில்லை....."

வண்டுகளின் முற்றுகையை விலக்கி அந்த மலரும் திரும்பியது.

"என்ன காயா சொல்கிறாய்? வண்டுகளுக்கும் இரக்கம் இல்லை என்றால் வேறு யாருக்கும் இல்லை?"

காயா என்கிற காயத்ரி, தன் இரு கோகனப் பூக்களால் வண்டுகளை விரட்டுவதை நிறுத்தாமல் வயலின் வாசிப்பதையும் தொடர்ந்தாள்.

"இந்த மாலைக்கு இரக்கமில்லை; என் துன்பம் புரியாமல் பழிதூற்றுகிற ஊருக்கும் இரக்கமில்லை; என்னைக் கேள்விகளால் துளைத்தெடுக்கிற உனக்கும் இரக்கமில்லை; வானத்தைப் பார், மரங்களைப் பார். மலர்களை ரசி, தென்றலை உணர் என்று என்னதான் இழுத்துப் பிடித்து



வைத்துக் கொண்டாலும் பொம்மைக்கு அடம்பிடிக்கிற குழந்தைபோல மீண்டும் மீண்டும் அவனிடமே தாவிச் சென்றுவிடுகிற என் நெஞ்சுக்கும் நினைவுக்கும் இரக்கமில்லை; என் இரவுகளுக்கு இரக்கமில்லை; இமைகளுக்கு இரக்கமில்லை; இந்த உலகுக்கு இரக்கமில்லை..."

"நிறுத்து, நிறுத்து! அடுக்கிக் கொண்டே போகாதே. உனக்கு என்னதான் நடந்துவிட்டது? எதற்காக இப்படிக் குழம்பிப் போயிருக்கிறாய்?"

"அது தெரிந்தால்தான் பிரச்சனையே இல்லையே... அந்தக் கள்வனின் பார்வையை ஒரே முறைதான் என் கண்கள் சந்தித்தன. அன்றைக்குக் கோயிலில் சுவாமி தரிசனம் முடித்து நிமிர்ந்தபோது, கொத்தின அந்தக் கண்கள். நெடுநேரம் அவன் என்னைப் பார்த்தபடியே நின்றிருக்கவேண்டும். திருட்டுத்தனமாய்ப் பார்த்து நின்றவனை நான் தற்செயலாகத்தான் நிமிர்ந்தவேளை.... கண்ணும் களவுமாகப் பிடித்தேன். என் கண்களில் தைத்த தன் கண்களை அவன் திருப்பவேண்டுமே.... ஊஹூம்... இமை மூடாமல் இரைச்சியை எதுவோ பிராணி பார்ப்பதைப் போல பார்த்தபடி நின்றான். என் கண்ணில் தைத்த அவன் கண்களைப் பிடுங்கி எறிய முடியவில்லை. அதில் என் இதயம் வரை வேர்விட்டு வளர்ந்து விட்டது. இப்போதும் பாறையைத் துளைக்கும் வேராக என் இதயத்தைத் துளைத்தபடி இருக்கிறது அவன் பார்வை. இதயம் வெடித்துச் சிதற வேண்டியதுதான்பாக்கி....."

"என்னடி, என்னென்னவே எல்லாம் சொல்கிறாய். அன்றைக்கு அவனிடம் பேசினாயா இல்லையா?"

"இல்லையடி நந்தினி, எப்படிப் பேசமுடியும். மறுபடி அந்தக் கண்களைப் பார்த்தால், அவன் பின்னாலேயே போய்விடுவேன் போலிருந்தது. அங்கிருந்து தப்பி வந்ததே பெருங்காரியம்!"

"ஏன், உன்னைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்றானா? உன்னுடன் யாரும் துணைக்கு வரவில்லையா?"

"போடீ, அவன் தடுத்திருந்தால், உதறிவிட்டு வர மாட்டேனா? என் நெஞ்சமல்லவா அந்த இடத்தை விட்டு நகரமாட்டேன் என்று அடம் செய்தது......"

"அதென்னடி காயா, ஒரே பார்வையில் நடந்த மாயம்?"

"ம்... இனம் விளங்கவில்லை அவன் என்னுளம் தொட்டுவிட்டான். பித்துப் பிடித்தவள் போல் நான் பேசாமல் நின்றிருந்தேன்... இப்போது அந்தக் கள்வனை வெளியேற்ற முடியாமல் நான் படும் பாடு கொஞ்சமல்ல...."

"இது என்னடி புது நோயாக இருக்கிறது! அவனை வெளியேற்ற என்ன செய்யப் போகிறாய்?"

"அதுதான் விளங்கவில்லை. உள்ளே சும்மா இருப்பானாக இருந்தாலும் பரவாயில்லை. இம்சைகள் செய்கிறவனாக இருக்கிறான். நான் என்ன செய்வேனடி?"

"வேறொன்றுமில்லை கண்ணே காயா! நீ காதல் வயப்பட்டுவிட்டாய். அதுதான் உன் நோய்"

### தருவது முழடில்யன்

"இத்தனை இரக்கமில்லாததா நீ சொல்லும் காதல்? என் நெஞ்சுக்குள் எப்போதும் அவன் கண்களை அந்த முகத்தை நெசவு செய்தபடி இருக்கிறது. தறிகள் அங்குமிங்குமாக இதயத்தினுள் அடிக்கும் அடியின் வலி தாங்கமுடியவில்லை. நள்ளிரவிலும் இந்தக் காதல் வேட்கை என் நெஞ்சினுள் ஆதிக்கம் செலுத்தி அலைக்கழிக்கிறது. இந்தக் காதல் இரக்கமே இல்லாதது!"

காமம் எனவொன்றோ
கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

(குறள்: 1252)

# ஸ்போர்ட்ஸ்

## தொடர்ந்து விளையாடும் வோல்ஷ்



டெஸ்ட் போட்டிகளில் 500 விக்கெட்டுக்களை வீழ்த்தியவுடன் தான் ஓய்வு பெற்று விடவுள்ளதாக மேற்கிந்தியத்தீவுகளின் வேகப் பந்து வீச்சாளர் கோட்னி வோல்ஷ் தெரிவித்துள்ளார்.

500 விக்கெட்டுக்களை எட்டமேலும் 17 விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும் என்ற இலக்குடன் மேற்கிந்திய அணியில் இடம் பெற்று அவுஸ்திரேலியா சென்றார் வோல்ஷ்.

ஆனால் 5 டெஸ்ட்களில் அவரால் 11 விக்கெட்டுக்களை மாத்திரமே வீழ்த்த முடிந்தது. டெஸ்ட் போட்டியில் 500 விக்கெட்டுக்களை முதலில் சாய்த்த வீரர் என்ற சாதனை படைக்க இன்னமும் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியாக வேண்டும் வோல்ஷ்.

அதற்காக மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் தென்னாபிரிக்காவுக்கெதிரான போட்டிகளில் தொடர்ந்து விளையாடப் போகிறார் இவர். அத்துடன் இதுவே தனது கடைசி டெஸ்ட் தொடராக இருக்குமென்றும் 38 வயதான கோட்னி வோல்ஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான போட்டிகளை முடித்துக் கொண்டு தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, மேற்கிந்தியத்தீவுகளுக்குச் செல்கிறது. அங்கு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்களில் இரு அணிகளும் மோதவுள்ளன.

## கிரிக்கெட் சுற்றுப் பயணங்கள்

### இலங்கை நியூஸிலாந்துக்கு விஜயம்

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்யதிருக்கும் இலங்கை அணி, அதை முடித்துக் கொண்டு நியூஸிலாந்திற்கு சுற்றுப் பயணம் செய்வுள்ளது.

நியூஸிலாந்துடன் இலங்கை 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளது.

நியூஸிலாந்து-இலங்கை அணிகள் மோதும் ஒருநாள் போட்டிகள் பற்றிய விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1வது ஒருநாள் போட்டி | ஜனவரி –31 | நேப்பியர் | (பகலிரவு) |
| 2வது ஒருநாள் போட்டி | பெப்ரவரி–03 | வெலிங்டன் | (பகலிரவு) |
| 3வது ஒருநாள் போட்டி | பெப்ரவரி–06 | ஒக்லாண்ட் | (பகல்) |
| 4வது ஒருநாள் போட்டி | பெப்ரவரி–08 | ஹமில்டன் | (பகலிரவு) |
| 5வது ஒருநாள் போட்டி | பெப்ரவரி–11 | கிறைஸ்ட்சேர்ச் | (பகல்) |

### அவுஸ்திரேலியா இந்தியாவுக்கு விஜயம்

ஜனவரி 11ம் திகதி முதல் பெப்ரவரி 11ம் திகதி வரை அவுஸ்திரேலியாவில் மேற்கிந்தியத்தீவுகள், ஸிம்பாப்வே, அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் போட்டிகள் நடைபெறுகின்றன.

இதை முடித்துக் கொண்டு அவுஸ்திரேலியா இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளது. அங்கு இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலியா மோதவுள்ளது.

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் பற்றிய விவரங்கள் இதோ:

**டெஸ்ட் தொடர்**

| | | |
|---|---|---|
| 1 வது டெஸ்ட் | 27பெப்.-03 மார்ச் | மும்பை |
| 2 வது டெஸ்ட் | 11-15 மார்ச் | சென்னை |
| 3 வது டெஸ்ட் | 18-22 மார்ச் | கல்கத்தா |

**ஒருநாள் தொடர்**

| | | |
|---|---|---|
| 1வது ஒருநாள் போட்டி | மார்ச் - 25 | குவாஹட்டி |
| 2வது ஒருநாள் போட்டி | மார்ச் - 28 | டெல்லி |
| 3வது ஒருநாள் போட்டி | மார்ச் - 31 | குவாலியர் |
| 4வது ஒருநாள் போட்டி | ஏப்ரல் - 03 | புனே |
| 5வது ஒருநாள் போட்டி | ஏப்ரல் - 06 | பெங்களூர் |

# சிந்தியா பதில்கள்

★ **சிந்தியா, பல்வகைக் கேள்விகளுக்கும் பதில் சொல்லக் கூடியவாறான பொது அறிவுக் களஞ்சியத்தை எப்படி மண்டைக்குள் சேர்த்து வைத்திருக்கின்றீர்கள், சொல்ல முடியுமா?**

கௌரி, கொழும்பு-10.

*என் மூளை என்கிற மிகச் சிறிய கூண்டுக்குள் எனக்குத் தேவைப்படாத விவரங்கள் எதையும் நான் திணித்து வைப்பதில்லை. 'எத்தியோப்பியா நாட்டுத் தலைவர் யார்?', 'பிரேமதாச செத்தது எந்த ஆண்டில்?' பாகிஸ்தானில் எத்தனை மாநிலங்கள்?' என்றெல்லாம் என்னிடம் நேரிலே கேட்டால், என் பதில்: "திரு திரு".... நான் தெரிந்து வைத்திருப்பதெல்லாம், இதற்கான பதில்களை எந்தப் புத்தகத்தில் தேடினால் கிடைக்கும் என் பதை மட்டும்தான்!*

★ **ஏழைத்தாய், பணக்காரத்தாய்-எந்தத் தாய் சிறந்தவர்?**

கி. ஆனந்தி, வத்தளை

*தாய்மையிலும் கறை பூசிவிடும் சக்தி பணத்துக்குண்டு.*

★ **சிந்தியா, பொருளா, அருளா?**

ஆர். கோணேஸ்வரன், நுவரெலியா.

*ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீன அறிஞரான கன்பூஷியஸ் சொல்கிறார். "கடவுள் சிந்தனையை விட, தேனீரைக் கீழே சிந்தாமலும், கர் புர்ரென்று சத்த மெழுப்பி உறிஞ்சாமலும் பருகக் கற்றுக் கொள்வதுதான் முக்கியம்" என்பதாக. 'பொருளில்லை என்றால் இவ்வுலகமில்லை' என்று வள்ளுவர் சொல்கிறார். நமக்கு, நாம் வாழ்கிற இந்த வாழ்க்கைதானே முக்கியம்! ஆனபடியால்... என்ன சொல்ல? ம்... நல்லபடி வாழ அருளையும் சேர்த்துக் கொண்டால் நல்லது.*

★ **சிந்தியா! பேச்சுவார்த்தை விஷயத்தில் பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகளும் புலிகளுக்கு ஆதரவாகத்தானே பேசுகின்றன. பிறகேன் அவர்களோடு இவர்கள் சேர்ந்து செயற்படக் கூடாது?**

ம. எழிலமுதன், கொழும்பு-06.

*அவர்கள் விட்டால்தானே? உங்கள் சண்டையின் இலாபங்களை நாங்கள் பாராளுமன்றத்திலிருந்து பார்த்துக் கொள்கிறோம் என்றால் அவர்கள் விடுவார்களா? கூட்டணி மற்றும் தமிழ்க் கட்சிகளோடு பேசுவதாக இருந்தால், தங்களிடம் பிறகு வரத் தேவையில்லை என்று நோர்வேத் தூதுவரிடமும் அவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டதாய்க் கேள்வி.*

★ **மைடியர் சிந்தியா! என் கனவில் ஜோதிகா வந்து இடுப்பை இடுப்பைக் காட்டுகிறார், என்ன செய்வது?**

எஸ்.எம்.ஏ.மனோ, ஹட்டன்.

*சிம்ரன், ரீமா, ரியா, அஞ்சலா என்று 'மெல்'லிடைகள் பல இருக்க, அந்த 'மெகா' சைஸ் இடுப்புத்தானா உங்கள் கனவில் வரவேண்டும்! ஐயோ, பரிதாபம் தான்.*

★ **'நவரச நாயக'னின் 'சீனு' பார்த்தீரா சிந்தியா?**

எம். தௌபீக், கணேசபுரம்.

*'கிழக்கு வாச'க்குப் பிறகு முத்துராமன் புதல்வரிடம் முன்னேற்றம் எதனையும் காணோம். எப்படி வளர்ந்திருக்க வேண்டியவர்!? கண்ணை இடுக்கி ஆச்சரியம் காட்டுவதும், நெற்றியைத் தடவி குழப்பம் காட்டுவதும், குழந்தை போலக் கொன்னை பேசி குறும்பு காட்டுவதும், பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு வாய்க்குள் வெற்றிலை போட்ட குதப்பலாகப் பேசுவதும்... தொடர்ந்து செய்தால் சலித்துப் போகாதோ?*

*நடிப்புத் திறமையை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கும் நவரச நாயகனுக்குத் தேவை, நல்ல இளம் டைரக்டர்கள். பி.வாசுவும், சுந்தர்.சி.யும் அல்ல.*



★ **அண்மையில் படித்த கவிதை?**

க. அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

*அண்மையில் அல்ல. கொஞ்சம் முந்திப் படித்த கவிஞர் தேவதத்தனின் இரண்டு வரிகள்:*

"தாவணியும் பூவணியும் சின்னப் பெண்
-போலே
தேவையான பௌடர் பூச்சு கன்னத்தின்
-மேலே."

★ **பதில் சொல்ல முடியாத கேள்வி எது?**

எம்.எம். மன்சூர், புத்தளம்.

*'எப்போது சாவாய்?' என்று கேட்டாலும் சொல்ல முடியாதுதான். என்னைக் கேட்டால், 'எப்போது உனக்குப் பசிக்கும்?', 'எப்போது தூங்குவாய்?', 'எப்போது அழுவாய்?......' என்பதெல்லாம் கூட பதில் சொல்லிவிட முடியாத கேள்விகள்தான்.*

★ **குட்டிக் கதையொன்று கூறுவீர்களா?**

சோ. சங்கரலிங்கம், திருப்பழுகாமம்-02.

*எங்கோ படித்த சின்னஞ்சிறு கதையொன்றின் தழுவல் இதோ:*

*"மாலா, நான் தந்த கடிதத்தைப் படிச்சியா?"*

*"ம்."*

*"அதுக்கு என்ன பதில்?"*

*"கொஞ்சம் இருங்கோ!" என்று சொல்லி உள்ளே சென்றாள். நாற்காலியில் அமர்ந்து, அங்கிருந்த மீன் தொட்டியைப் பார்த்தபடியே காத்திருந்தேன். எத்தனை நாளைக்குத்தான் ஏமாற்றுவாள்? இன்று எப்படியும் இவள் பதிலை அறிந்துவிடுவது என்ற தீர்மானத்துடன் இருந்தேன்.*

*உள்ளிருந்து மாலாவின் அப்பா வந்தார்.*

*என்னை நெருங்கினார்.*

*நான் எழுந்து நின்றேன்.*

*என் முதுகை அணைத்துக் கொண்டு "குணா!" என்றார்.*

*சந்தோஷத்துடன் "என்ன?" என்றேன். 'மாமா' என்று சொல்ல நினைத்ததை அடக்கிக் கொண்டேன்.*

*"கொஞ்சம் திரும்பு!"*

*திரும்பினேன். அவரது கை முதுகிலிருந்து மெதுவாக என் கழுத்துக்குச் சென்றது. ஒரே தள்ளு. வெளியே வந்து விழுந்தேன்.*




# மன்னாதி மன்னன் 41

## தனவதியும் குணவதியும்!

அழகாபுரியிலுள்ள விலைமாதான குணவதியிடம் உலக்கையடி வாங்கிய வயதான கிழவன் வேடத்திலிருந்த விக்கிரமாதித்தன், மற்றுமொரு விலைமாதாகிய தனவதியின் வீட்டு வாயிலை வந்தடைந்தார். குணவதியின் வீட்டின் முகப்பில் கட்டப் பட்டிருந்த மணியைப் போல் தனவதியின் வீட்டின் முன்புறம் மணியொன்று கட்டப்பட்டிருப்பதைக் கண்டார்.

மணியை இழுத்து அடித்தார். தனவதியின் தோழியர்கள் மணியை அடித்தது யார் என்று பார்ப்பதற்காக வாயிற்புறம் வந்து சேர்ந்தார்கள். அங்கு ஒரு கிழவன் நின்றிருப்பதைப் பார்த்த தோழியரில் ஒருத்தி, "ஐயா பெரியவரே, நீங்கள் தானாஇந்த மணியை அடித்தீர்கள்? இந்த மணியை ஏன் அடிக்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரி யுமா?" என்று கேட்டாள். மற்றுமொரு தோழி "உங்களுக்குப் பசிக்கிறதா? உணவு கொண்டு வந்து தரட்டுமா?" என்று வினவினாள்.

வயோதிபர் கலகலவென்று சிரித்தார். "எனக்கு உங்கள் உணவு தேவையில்லை. என்னைப் பார்த்தால், சாப்பிட வழியில்லாத பிச்சைக்காரனென்றா நினைத்து விட்டீர்கள். உங்கள் எஜமானியம்மாள் தனவதியைப் பற்றியும் அவளுடைய அழகிய தோற்றம் பற்றியும் பல தேசங்களில் கேள்விப் பட்டேன். ஆகவே அவளுடன் சிறிதுநேரம் உல்லாசமாக



இருந்து விட்டுப் போவதற்காகத்தான் வந்தேன்." என்று கூறினார். வயதான கிழவர் உருவத்துடன் வந்திருந்த விக்கிரமாதித்தனுடைய ஆசையைக் கேட்டு அடக்க முடியாத சிரிப்பு வந்த போதும், தோழியர் அடக்கிக் கொண்டார்கள்.

தங்கள் எஜமானி தனவதியிடம் கூறிவிட்டு வருவதாக கிழவரிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றார்கள்.

கிழவரின் ஆசையைப் பற்றி தோழியர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு தனவதி சிரிக்கவில்லை. அவள் கடுமையான சிந்தனையில் ஆழ்ந்தாள்–'வந்திருப்பவர் வயதான ஆண்டியாக இருப்பதானால், அவர் தனிமையில் உல்லாசமாக இருப்பதற்காக என்னைப் போன்ற விலைமகளிடம் வந்த ஆண்டியாக இருக்க முடியாது; இதில் ஏதோ மர்மம் இருக்கிறது, என்று கருதலானாள். தோழியரைப் பார்த்து, "நீங்கள் போய் அந்த வயோதிபரை தக்க மரியாதையுடன் அழைத்து வந்து உபசரியுங்கள். சற்று நேரத்தில் நான் அவரை வந்து பார்க்கிறேன்!" என்று கூறினாள்.

தனவதி கூறியது போல் கிழவரிடம் வந்த தோழியர்கள் அவரை மரியாதையாக உள்ளே அழைத்துச் சென்றனர். அவருக்கு தகுந்த உபசரணையும் செய்யப்பட்டது.

சற்று நேரம் பொறுத்து தனவதி அக்கிழவரிடம் வந்தாள். "ஐயா பெரியவரே! தாங்கள் இந்த ஏழையின் வீட்டுக்கு வந்ததை நான் பெருமையாகக் கருதுகிறேன். தாங்கள் எதற்காக இங்கு வந்தீர்கள் என்பதைத் தெரிவித்தால் என்னால் இயன்றவரை தங்களுக்கு உதவுவதற்கு சித்தமாக இருக்கிறேன்!" என்று தனவதி கூறினாள்.

கிழவனுருவிலிருந்த விக்கிரமாதித்தன் நாடகம் புரிந்தவராக "தனவதி உன் அருமை பெருமைகளையும் உன் அழகையும் பற்றி பல ஊர்களிலும் கேள்விப்பட்டு உன்னைப் பார்க்கவே இங்கு வந்தேன். நான் உன்னிடம் சில நாட்கள் தங்கியிருக்க ஆசைப் படுகிறேன். இடம் தருவாயா?" என்று கேட்டார். இதைக் கேட்ட தனவதி "ஐயா! தாங்கள் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இங்கு தங்கியிருக்கலாம்!" என்று கூறினாள்.

கிழவராக வேடமிட்டிருந்த விக்கிரமாதித்தனை உலக்கையால் அடித்து விரட்டியபின் 'அவன் எங்கே போயிருப்பானோ?' என்று குணவதி யோசிக்கலானாள். பின்னர் அவன் எங்கு சென்றிருக்கிறான் என்று அறிந்து வருவதற்காக குணவதி ஆட்களையனுப்பி வைத்தாள்.

அடிவாங்கிய கிழவன் தனவதியின் மகிழ்ச்சியாக இருப்பதாக அறிந்து மிகவும் மனவேதனையடைந்தாள் குணவதி.

அடுத்தநாள் குணவதியும், தனவதியும் அரசவையில் சந்தித்தனர்.

தனவதியை வம்புக்கிழுத்து அவமானப் படுத்த வேண்டும் எனக் கருதிய குணவதி, சபையினர் முன்னிலையில் "என்ன தனவதி நீயொரு ஆண்டிக் கிழவனை உன் வீட்டில் வைத்து விசேடமாக உபசரித்து வருகிறாயாமே?" என்று கேலியாகக் கேட்டாள்.

இதைக் கேட்ட தனவதி, "நீயும் உன் வீட்டில் ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனனை வீட்டில் வைத்துக் கொண்டு கும்மாளம் அடிக்கிறாயே. அந்தப் பார்ப்பனனை விட என் வீட்டிலிருக்கும் வயதான கிழவர் மிகவும் மேன்மையானவர். சந்தர்ப்பம் வரும் போது அவருடைய ஆற்றலையும் திறமையையும் எல்லோருக்கும் வெளிப்படுத்தியே தீருவேன்!" என்று சபதமிட்டாள்.

தனவதியும், குணவதியும் அரசவையில் இவ்வாறு தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டமை அரசருக்கும் பிடிக்கவில்லை.

அரசர் தங்களுடைய நடத்தையினால் கோபமுற்றிருக்கிறார் என்பதை இருவரும் உணர்ந்து கொண்டனர்.

அடுத்தநாள் அரசவைக்கு வந்த குணவதி ஒரு தங்கத் தாம்பாளத்தில் பொற்காசுகளை நிரப்பிக் கொண்டு வந்து, அரசரைப் பணிந்து "அரசே! நாங்களிருவரும் நேற்று அவையில் கோவலமாக நடந்து கொண்டோம். எனவே இந்தப் பொற்காசுகளை எனது அபராதமாகத் தங்களுக்குச் செலுத்துகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று கூறி, சிம்மாசனத்தின் அருகில் வைத்தாள்.

இந்தச் செயலைப் பார்த்த தனவதி தன்னிடம்இந்த அளவுக்கு அபராதம் செலுத்த ஏற்ற தகுதி இல்லையே என்று ஏங்கினாள்.

குணவதியோ தானொரு மெச்சத் தகுந்த காரியத்தைப் புரிந்து மன்னருடைய பாராட்டைப் பெற்று விட்டதாக மமதையுடன் வீடு திரும்பினாள்.

தாங்க முடியாத துக்கத்துடன் அரண்மனையை விட்டகன்ற தனவதி, வீடு சென்றதும், எவரிடமும் எதுவும் கூறாமல் உணவு கூட உட்கொள்ளாமல், தன் கட்டிலில் போய் படுத்துக் கொண்டாள்.

தனவதியின் அப்போதைய துக்ககரமான நிலையை அவதானித்த கிழவனுருவிலிருந்த விக்கிரமாதித்தன், தனவதியினருகில் சென்று, "இத்தகைய துக்கத்துக்கான காரணம் என்ன?" என்று வினவினார். அரண்மனையில் தனக்கு ஏற்பட்ட அவமதிப்பை விரிவாகக் கூறினாள். அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு கிழவர் அவருக்குரிய இடத்தில் போய் படுத்துக் கொண்டார்.

அடுத்த நாள் காலையில் விக்கிரமாதித்தன் வேதாளத்தை அழைத்து, விலையுயர்ந்த முத்துமாலையொன்றை எடுத்து வருமாறு கூறினார். வேதாளமும் மிகவும் அழகான முத்து மாலையொன்றை கொண்டு வந்து விக்கிரமாதித்தனிடம் கொடுத்தது.

அன்று அரசவைக்குப் போவது தனவதிக்குப் பிடிக்கவில்லை. குழப்பநிலையில் இருந்தாள். அவளிடம் சென்ற கிழவர், அரசவைக்குப் போகாமல் இருந்தால் அரசரின் கோபத்தை சம்பாதிக்க வேண்டி வரும் ஆகவே புறப்பட்டுப் போகுமாறு தனவதியிடம் கூறினார். அவள் தயங்கவே தன்னிடம் இருந்த முத்து மாலையை அவளிடம் நீட்டினார். "தனவதியே! உன்னுடைய சார்பில் இந்த முத்துமாலையை அரசருக்கு நீ கொடுப்பாயானால் அவரும் சபையோரும் பெரு மகிழ்ச்சியடைந்து உன்னை பெருமைப் படுத்துவார்கள். அதேவேளை உன்னை அவமானப்படுத்த நினைத்த குணவதியும் வெட்கித் தலைகுனிவாள். எதற்கும் யோசிக்காமல் இந்த முத்துமாலையை எடுத்துக் கொண்டு போ!" என்று கூறினார்.

கிழவனாக இருந்த விக்கிரமாதித்தன் கொடுத்த முத்துமாலையை தன் கையில் வாங்கிப் பார்த்ததுமே தனவதி அம்மாலையின் சிறப்பைப் பார்த்து பிரமித்துப் போனாள். 'இந்தக் கிழவரிடம் இத்தகைய விலைமதிப் பற்ற முத்துமாலை எவ்வாறு கிடைத்திருக்கும்?' என்று யோசித்தாள்.

'இவர் சாதாரண ஓர் ஆண்டிக் கிழவனாக இருக்க முடியாது. இவருடைய வேடத்தில் ஏதோ ஒன்று மறைந்திருக்கிறது' என்று தனவதி கருதினாள்.

இராஜகுமாரன்

அம்மாலையை எடுத்துக் கொண்டு அரசவைக்குச் சென்றாள். அங்கு சென்றதும் அரசின் முன் சென்று வணங்கிவிட்டு பட்டுத் துணிகளால் சுற்றிக் கொண்டு வரப்பட்டிருந்த அந்த முத்துமாலையை வெளியே எடுத்தாள். அந்த மாலையின் ஒளி அந்த அரசவையின் சகல பகுதிகளையும் பிரகாசமாக ஒளியூட்டியது. அரசர்மட்டுமல்லாமல் அவையிலிருந்த அனைவரும் தங்கள் வாழ் நாளிலேயே எப்போதுமே கண்டிராத அந்த முத்து மாலையைப் பார்த்து மெய்மறந்து போயிருந்தனர்.

"மன்னர் மன்னவனே! இந்த அரசவையில் குணவதியும் நானும் நடந்துகொண்ட முறைக்கு அபராதமாக எனது பங்கிற்கு இதோ இந்த முத்துமாலையை நான் அபராதமாகச் செலுத்துகிறேன்–ஏற்றருள்க!" என்று கூறினாள்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

*கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் அடுத்தடுத்த இதழ்களில்.*

### சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................ பெயர்:..................... ஒப்பம்:..................



**நோட்டீஸ் பலகை**

**நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**

*-காதில பூ கந்தசாமி*

**அ**பிமான வாசகர் போட்டியில் முதலாவது: சென்ற ஆண்டின் அதிபெரிய பொய் எது? இதற்கான பதிலை ஒரு வசனத்தில் எழுதி அனுப்புங்கள். சிறந்த பொய்யைக் கூறியவர் 'பொய்யறி மேதை'யாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

நல்லது, விஷயத்துக்கு வருவோம். உங்களுக்காகத் தேடியெடுத்த இரண்டொரு நியூஸுகளைச் சொல்லிப்போடுறன்.

**வா**ழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்பைத் தடுக்க ஆராய்ச்சி நடத்திய அறிஞர் குழாம், மூன்று வழிகளைச் சிபாரிசு செய்துள்ளது.

ஒன்று (வாழ்க்கை) வாழ்க்கை இருந்தால்தான் வாழ்க்கைச் செலவு இருக்குமாதலால், இங்குள்ளவர்களின் வாழ்க்கைக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்றை ஏற்படுத்துவது. அதாவது 5ம் வகுப்பில் ஓ.எல். சோதனை, 12ம் வயதில் திருமணம், 25வது வயதில் பென்ஷன், 30வது வயதில் முதியோர் விடுதி என வாழ்க்கை வட்டத்தைக் குறுக்கி விடுவது.

இரண்டு (செலவு) பணம் புழங்கினால்தான் செலவு ஏற்படுமாதலால் சகல கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளையும் பண்டமாற்று முறைக்கு மாற்றிவிடுவது.

மூன்று (புள்ளி) புள்ளியை ஒரு வட்டமாகவோ சதுரமாகவோ மாற்றி விடுவது. அதன்மூலம் அதிகரிப்பது வட்டம் அல்லது சதுரமே தவிர புள்ளியல்ல என்று சமாதானம் கூறலாம்.

**ப**ஸ் கட்டண உயர்வையிட்டு, நாம் எம் மக்களின் உணர்வுகளை மதிக்கவில்லையென்று எதிர்க்கட்சியினர் குறைகூறுவது மகா தவறு. எம் மக்களின் பயணங்கள் மதிப்பு மிக்கவை என்பதை உணர்ந்து அவற்றின் மதிப்பை அதிகரிக்க வேண்டுமென்பதற்காகவே பஸ் கட்டணங்களை அதிகரித்தோம் எனப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார்.

**ஊ**ழல் மலிந்துவிட்ட கிரிக்கெட் போட்டிகளில் தோல்வியடைவதற்காக விளையாட்டு வீரர்களுக்கு இலஞ்சம் கொடுக்கப்படுவதை நிறுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்த சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இறுதி வழியாக கிரிக்கெட் விளையாட்டில் தோற்கும் அணியே வெற்றி பெற்றதாக மாற்றியமைக்கத் தீர்மானித்துள்ளது.

**மி**க நீண்ட காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு ஒரு அமைச்சர் வந்து தங்கியதையிட்டு ஆச்சரியம் தெரிவித்துள்ள யாழ் மக்கள் இதனை உலக அதிசயங்கள் வரிசையில் எட்டாவதாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

**யா**ழ் மேயர் பதவியை நீண்ட நாட்களாக நிரப்பாதிருந்து நிரப்பியுள்ள கூத்தணியின் புதிய மேயர் இரகசிய ராஜ் மிக இரகசியமாக யாழ் ரீக்கடையொன்றில் டீயருந்திக் கொண்டபடியிருக்க, டீக்கடை ரேடியோவில் "வராது வந்த நாயகன்....." என்று பொருத்தமான பாடலொன்று பாடிக்கொண்டிருக்க, அந்தச் சமயமாக அந்தப்பக்கம் வந்துவிட்ட காதில பூ கந்தசாமி கையும் மெய்யுமாக அவரைக் கண்டு கேட்ட கேள்விகளுக்கு அவர் தராத பதில்கள் இவை:

கா.பூ: **அடடடட எங்க இந்தப்பக்கம்?**

இ.ரா: சும்மா தெரியாதே, ஒரு டீ குடிக்கவெண்டு....

கா.பூ: **அதுக்காகக் கொழும்பில இருந்து இங்க வந்தனீரோ?**

இ.ரா: இல்லையப்பா, என்னையெல்லே இப்ப மேயராக்கிப் போட்டாங்கள்.

கா.பூ: **அப்ப இனிக் கொழும்ப விட்டிட்டு இங்கதான் தங்கிற எண்ணமோ?**

இ.ரா: என்ன கதை பேசிறீர் நீர்? இங்கை தங்கிறதோ? என்னை இழிச்ச வாயனெண்டோ நினைச்சீர்?

கா.பூ: **அப்ப எப்படி மேயர் வேலை செய்யப் போறீர்?**

இ.ரா: தங்கல் கொழும்பில, சேவை இங்க. சூரியன் அங்க நிக்குது. ஒளி இங்க கிடைக்குதெல்லே அதப்போல?

கா.பூ: **அப்பிடி என்ன சேவை செய்யத் திட்டம்?**

இ.ரா: அறிக்கைச் சேவை.

கா.பூ: **அதென்ன சேவை?**

இ.ரா: எதையுமே செய்யாமல் இருந்துகொண்டு செய்யிற சிரமமில்லாத சேவை இதுதான். எதையும் நடத்திறத விட நடக்காததுகளைப்பற்றி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறதுதான் வசதி. அப்படி எங்கையும் மீறி அரசாங்கம் எதையாவது செய்து குடுத்தால், அது நாங்கள் சொல்லித்தான் நடந்ததெண்டு கிளைம் பண்ணிக் கொள்ளுவம்.

கா.பூ: **கடைசியாக் கேக்கிறன், இதுவரை நீங்கள் யாழ் மேயர் பதவியை நிரப்பாம இருந்தது ஏன்?**

இ.ரா: அத நிரப்புறதும் நிரப்பாம விடுறதும் ஒண்டுதான். இப்ப நிரப்பித்தான் என்னத்தைக் காணப் போறியள்? மற்றவனுக்குக் குதிரை கிடைச்சால் ஒரு கழுதையாவது தனக்கு வேணுமெண்டு கட்சி நினைச்சு என்னைப் பலிக் கழுதையாக்கிப் போட்டுது. இதுவரை, இராமர் வரும்வரை செருப்பை வைச்சு ஆண்ட பரதன்போல, செருப்பை மட்டும் இங்க விட்டுட்டுக் கொழும்பில நிம்மதியா சப்பாத்தப் போட்டுக் கொண்டு திரிஞ்ச என்னை இப்ப இராமராக்கி போர்களத்தில தள்ளிவிட்டுட்டினம். நானிங்க ஒரு பிளேன் ரீ குடிக்கவே பயந்து ஒளிஞ்சொளிஞ்சு கடைப்பக்கம் வரவேண்டிக் கிடக்குது. "யாரும் மேயராகத் துணியாவிட்டாலும் நானாவது மேயராவேனெண்டு வீர வசனம் பேசின சிங்காரச் சங்கரிகளெல்லாம் பாராளுமன்றத்துக்குள்ள போய் ஒளிஞ்சிட்டினம். நானென்ன செய்ய?

கா.பூ: **சரி மேயர் உங்கட சட்டத்தரணித் தொழிலையும் விட்டெறிஞ்சிட்டியளோ?**

இ.ரா: விடு வேனெண்டே நினைச்சீர் என்ன? கொழும்புக் கைதுகள் இருக்கும்வரை கோட்டைக் கழட்டிற பிளான் எனக்கில்லை. விடும் வாறன். அவசரக் கேஸொண்டுக்கு அட்வான்ஸ் வாங்கியிருக்கிறன். அடுத்த பிளைட்டில கொழும்பில நிக்கவேணும். பிளேன்ரீக் காசை நீரே கட்டிப்போடும். நான் வாறன். (பிளைட் டிக்கெட் பொக்கெற்றால வெளியே தெரிய நடையைக் கட்டுறார் மேயர்.)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு - 06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# ரிங்கி ரிங்காலே....

[illegible]



# பூம்... பூம்... கோட்டை

[illegible]



# உள... ல ல ல் லா....

சர்வதேச வலையமைப்பினூடாக (இன்டர்நெட்) இப்பொழுது 'நடனமாடும் குழந்தைகள்' பல திருசுகளில் ஆடிக் களிப்பூட்டி வருகின்றன. நடனமாடும் குழந்தையை 1996 ஒக்டோபரில் 'கௌட்டேக்' நிறுவனம் தான் முதன் முதலில் உருவாக்கியது. இக்குழந்தைக்கு இரசிகர்கள் மத்தியில் ஏற்பட்ட பரபரப்பான வரவேற்பைத் தொடர்ந்து, சிறுதிரைத் தொடர்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் பல்வேறு தரமான நடனமாடும் குழந்தைகளை உருவாக்கிவிட்டுள்ளனவாம். முதன் முதலில் முப்பரிமாண முறையில் அறிமுகமான இக்குழந்தைகள் இன்று 2000 வரை உருவாக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மாதாந்தம் 35 ஆயிரம் வெப்தளங்களில் நடனமாடிய இக்குழந்தைகள் 1998 ஜனவரியில் அமெரிக்கத் தொலைக்காட்சியில் தலைகாட்டியதைத் தொடர்ந்து, இன்று தினசரி 51 ஆயிரம் என்ற அடிப்படையில் செல்வாக்குப் பெற்றுவிட்டன என்று கணக்கிடப்பட்டுள்ளது.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து

உரும்பிராய் வசாவிளானைச் சேர்ந்த திரு-திருமதி காந்தன்-செல்வரூபி (மதி) தம்பதிகளின் செல்வப் புதல்வன் விருசன் தனது 1வது பிறந்தநாளை ஜேர்மனியில் உள்ள பாட் சோன் புரோன் (Bad Schon Born) இல் 13.01.2001 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா-ஆசை அம்மா உரும்பிராயில் வசிக்கும் அப்பம்மா தங்கம்மா, கோப்பாயில் வசிக்கும் அப்பப்பா காங்கேச-அம்மம்மா செல்வநாயகி, சிவரூபி அன்ரி, சுப்பிரமணியம் பெரியப்பா-செல்லம்மா பெரியம்மா-ராஜி-உமா-ரம்யா அக்காமார், ஜெயலட்சுமி மாமி-ரவிமாமா, ராசன் மாமா-செல்வலட்சுமி மாமி-சாரங்கா கேசிகா-பிருதிகா மச்சான்மார், பிரான்சில் உள்ள மகாலட்சுமி மாமி-ராகவன் மாமா-ராஜுசா-ராஜுசன, துசானா மச்சாள்மார், கனடா பாலச்சந்திரன் பெரியப்பா-விஜயா பெரியம்மா-நிவேதா-அபிசா-அக்காமார், சுவிசில் உள்ள செல்வக்குமார் பெரியப்பா-சாந்தரூபி பெரியம்மா-சொரூபா அக்கா-ரஜீபன் அண்ணா, மகேந்திரன் சித்தப்பா-சுகந்தி சின்னம்மா, ஜேர்மனியில் உள்ள பிரதீபன் அண்ணா, லண்டனில் உள்ள ஆசை சிவம் மாமா அனைவரும் விருசனை அம்மன் அருளுடன் பெற்றோரும் உற்றோரும் சான்றோரும் போற்றும் படியாக பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.



செல்வன் கா. விருசன் 13.01.2001

தகவல்: காந்தன் Germany

# ஹுலா ஹுப் ஹுலா ஹுப்

ஐம்பதாம் ஆண்டுகளில் எமது நாட்டு இளைஞர்களையும் யுவதிகளையும் பைத்தியமாய் ஆட்டிப் படைத்தது 'ஹுலா ஹுப்' என்ற விளையாட்டு வளையம். [illegible] ... 1999, ஆகஸ்ட் 5ம் திகதியன்று இந்தச் சாதனை நிலைநாட்டப்பட்டது.

